Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 55 • 14.08.2016



## 'நான் வன்னிமகன்... நெஞ்சில் குத்துவேன்'


அதிரவைக்கும் அன்ரனி ஜெகநாதன்




# சிறீதர் தியேட்டருக்குள் பேய் குடியிருக்கிறதா?



விடுதலைப்புலிகளின் நகைச்சுவைகள் 2 **3**



கொலையில் முடிந்த முன்னாள் போராளிகளின் சத்தியம் **7**



வடக்கு கல்வி வீழ்ச்சிக்கு காரணம் இதுவா? **10**


**www.facebook.com/premanand.prem**
ரோட்டுல போன ஐட்டத்தையெல்லாம் ஆ'ன்னு பாத்திட்டுப்போய் கீழ கெடந்த நாத்தம் புடிச்ச சாணியை மிதிச்ச காலம் போய், இப்ப ஸ்மார்ட் யீபோன பப்பரப்பா'ன்னு பாத்திட்டுப்போய் மிதிக்கிற காலத்துல வாழ்ந்துகிட்டிருக்கோம்.
அதுக்காக மாறிப்போன காலத்தை நொந்துக்க முடியல.
இன்னமும் மாறாத அந்த 'எரும' மாடுங்கள நெனச்சாதான் பத்திக்கிட்டு வருது மக்கழே!



**www.facebook.com/gowripal.sri**
பிரபாகரன் தலைவர் அல்ல.. என் தம்பி ..வீ .ஆனந்த சங்கரி .செய்தி ...
#அதாலைதான் கடிதம் எழுதியே சாவடிச்சியா#


**www.facebook.com/velauthampillai.ruxshan**
கடவுளை பார்க்க நேரில் சென்று காணிக்கை கொடுப்பதற்கு பதிலாக,அனாதை இல்லத்திற்கு நேரில் சென்று காணிக்கை கொடுத்தால் நீங்களும் ஆகலாம் # கடவுள்


**www.facebook.com/rasathurai.niranjan**
காதலைக் கண்டு பிடித்தவன் ஒரு வேளை சைனாக்காரனா இருப்பானோ??
கேரண்டியும் இல்ல....
வாரண்டியும் இல்ல....

**ராத்திரி தூங்கும்போது செல்போன சார்ஜ்ல போடாதடா**
**ஏன்ணே?**



**பேட்டரி சூடானா சில சமயம் வெடிக்குமாம்**
**அதனால தான் சார்ஜ்ல போடும்போது பேட்டரிய கழட்டி வெச்சிடுவேன்ணே!!!**

**www.facebook.com/sujith**

**டாக்டர் எனக்கு சவுண்டு மட்டும்தான் கேக்குது முகம் தெரியவே இல்லை!**
**இது மாதிரி எப்போ நடக்குது!**



**போன்ல பேசும்போதுதான் டாக்டர்!**

**www.facebook.com/panchalingam.dilosan**

# க்ளிக் பக்கம்

சூரியனும் கைகளிற்குள் அடங்குமா? கல்முனையின் கல்லாற்றில் எடுத்த படம்.
**என்னைப்பற்றி:** நான் துஷி ஆனந்த். வவுனியாவில் பத்திரிகை ஒன்றில் அலுவலக செய்தியாளராக கடமையாற்றுகிறேன். சமூகத்தின் காட்சிகளை ஒளிப்படங்களாக்குவது வழக்கம்.



படம்:
துஷி ஆனந்த்
இடம்:
கல்முனை




குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk




அசல் யாழ்ப்பாண சுவை மற்றும் தரம் குன்றாத அனைத்துப்பாரம்பரிய உணவு வகைகளையும் சுவைத்து மகிழ தமிழ் மக்களின் அங்கீகாரம் பெற்ற ஒரேயொரு உணவகம்


AACHE
HOT FOOD RESTAURANT
ஆச்சி
ஹாட் பூட் ரெஸ்ட்ரோரன்ட்

மிகவும் சுத்தமானது அத்தோடு மிக மிக தரமானது, செயற்கை சுவையூட்டிகள் அற்றது, யாழ்ப்பாண பாரம்பரியத்தைக் கொண்டது, குறுகிய காலத்தில் அதிகளவான வாடிக்கையாளரைப் பெற்று யாழ்ப்பாணத்தில் தன்னிகரில்லாது முன்னிலை வகிக்கும் ஒரேயொரு உணவகம்.



சகல விதமான வைபவங்களுக்குமான அனைத்து உணவு வகைகளையும் ஓடர் செய்து உடனுக்குடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

புதன், சனி ஞாயிறு போன்ற நாட்களில் மதியம் சுவையான யாழ். ஒடியல் கூழினை சுவைத்து மகிழலாம்...



147, பலாலி வீதி, திருநெல்வேலி.

கிளைகள்
01, நவீன சந்தை, மானிப்பாய்.
102, கண்டி வீதி, சாவகச்சேரி.
கைதடி கிழக்கு, கைதடி.

தொலைபேசி
021 222 5001 | 021 205 7455
HOT LINE 021 222 5010

நஜிபுல்லாவின் நகைச்சுவைகள் ஏராளம் உள்ளன. அந்த அமைப்பிற்குள் அவரது நகைச்சுவைகள்தான் அதிகம் கொடிகட்டி பறந்ததாம். அனைவரும் விழுந்துவிழுந்து சிரிக்கும் விதமாக அவரது நகைச்சுவை இருக்குமாம். இதனால் அவரை அமைப்பிலிருந்த அனைவரும் அன்பாக அணுகினார்களாம்.

அவரது ஒவ்வொரு செயலும் நகைச்சுவையாக இருக்குமென்கிறார்கள் அவரை தெரிந்தவர்கள். வடிவேலுவின் கிணற்றை காணவில்லை நகைச்சுவையெல்லாம் இப்பொழுதுதான் வந்தது. அதற்கு பல வருடங்களின் முன்னரே தனது பொறுப்பாளருடன் கிணற்றை காணவில்லையென அடம்பிடித்துள்ளார். ஒருமுறை பவுசரில் நீர் நிரப்பிவரும் பொறுப்பு நஜிபுல்லாவிடம் வழங்கப்பட்டுள்ளது. அவருட் டிரக்ரரை கொண்டு சென்றிருக்கிறார். காட்டை அண்டிய பகுதியில் ஒரு கிணறில்த்தான் நீர் நிரப்ப வேண்டும். அவர் பிழையான இடத்திற்கு சென்றுவிட்டு, கிணற்றை காணோம் என திரும்பி வந்திருக்கிறார். அத்தோடு நில்லாமல், கிணற்றை காணவில்லையென பொறுப்பாளருடன் தர்க்கமும் செய்தாராம். இப்படி நிறைய பகிடிகள்.



## விடுதலைப்புலிகள் அமைப்பிற்குள் உலாவிய

# வயிறு குலுங்க வைக்கும் நகைச்சுவைகள்

### பகிடி 3

நஜிபுல்லா என்றால் "மசிரை சொன்னான் நஜிபுல்லா" பகிடிதான் எல்லோருக்கும் நினைவில் வரும். அதுதான் அவரை பெரிதும் அடையாளப்படுத்தியது. 1995 இற்கு முன்னர் இது நடந்ததாம். அப்பொழுது இரவில் வீதிப்பதிவு நடை முறையொன்றை புலிகள் ஆரம்பித்தார்களாம். இரவில் பயணம் செய்யும் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டதாம். அப்படியொருநாளில் நஜிபுல்லாவையும் மறித்துள்ளனர். தன்னை மறித்து விட்டார்களே என நஜிபுல்லாவிற்கு கோபமாம். அவரது பெயரை கேட்டும் சொல்லவில்லை. இதனால் இருதரப்பிற்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. கோபத்தின் உச்சிக்கு சென்ற நஜிபுல்லா "மசிரைச் சொன்னான் நஜிபுல்லா" என தனது பெயரையே தெரியாத்தனமாக சொல்லிவிட்டு சென்றிருக்கிறார்.

இதுதான் அவரது பிரதான அடையாளம். பின்னாளில், இப்படியான சோதனைச் சாவடிகளில் "மசிரைச் சொன்னான் நஜிபுல்லா" என பகிடியாக சொல்லிவிட்டு செல்வார்களாம்.

### பகிடி 4

ஒருமுறை நஜிபுல்லா முன்னரனில் நின்றுள்ளார். அவர்களது அணிக்குமாற்றீடாக பெண்கள் அணியொன்று வந்ததாம். தமது நிலை பற்றிய விளக்கத்தை பெண்களணிக்கு கொடுத்துவிட்டு நஜிபுல்லாவின் அணி பின்தளத்திற்கு செல்ல வேண்டும்.

ஒரு காவலரணிற்கு முன்பாக பாதுகாப்பு கண்ணிவெடி புதைக்கப்பட்டிருந்ததாம். யாரும் எதிரிகள் வந்தால் அதை வெடிக்க வைப்பதற்கு. அதன் வயர் இணைப்பு நஜிபுல்லாவின் காவலரணில் இருந்ததாம். அந்த நிலைக்கு வந்த பெண்களிற்கு நஜிபுல்லா அனைத்தையும் விளங்கப்படுத்தியுள்ளார். கண்ணிவெடியை காட்டியுள்ளார். அதன் இணைப்பு வயரை காட்டியுள்ளார். பற்றரியை காட்டியுள்ளார். "இந்தவயரை இப்பிடி கொண்டுவந்து பற்றியில முட்ட வெடிக்கும்" என சொல்லியபடி, வயரை பற்றரியில் இணைத்துள்ளார்.

பிறகென்ன, அது வெடித்து சிதறியதாம். அந்த அமைப்பிற்குள் அவரையொரு வடிவேலுவாகத்தான் பார்த்தார்களாம். அவர் இருக்குமிடம் கலகலத்துவிடுமாம். பின்னாளில் அவர் மரணமடைந்தபோது, ஏராளம் பேர் கண்ணீர் சிந்தினார்களாம். ●

கொழும்பில் இயங்கி வரும் பிரபல்யமான SB TRAVELS AND TOURS PVT LTD இலக்கம் 324 அலுத்மாவத்தை வீதியிலும் அத்துடன் தனது கிளைகளை கதிரேசன் வீதியிலும் தற்போது யாழ் மண்ணில் இலக்கம் 216 கஸ்தூரியார் வீதியிலும் தனது கிளையை விஸ்தரித்துள்ளது



வானில் பறக்கும் கனவுகளை
SB TRAVELS & TOURS (PVT) LTD.
உடன் உங்கள் கனவுகளை நினைவாக்கிட எமது சேவைகள்...

IATA | Accredited Agent

- இங்கு அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டுக்களையும் வீசாக்களையும் மிகச்சிறந்த முறையில் செய்து தரப்படுகிறது.
- இந்தியாவுக்கான விசாக்கள் வெகு விரைவிலும் மற்றும் மலேசியா, தாய்லாந்து, டுபாய் ஆகிய நாடுகளுக்குமான வீசாக்கள் செய்து தரப்படும் பயணக்காப்புறுதி பிரயாண திகதி மாற்றம் சுற்றுலா ஒழுங்கமைப்பு Hotel முன் ஏற்பாடுகளும் செய்து தரப்படும்
- ஐரோப்பிய நாடுகளுக்குமான பயணச்சீட்டில் விசேட விலைக்கழிவுகளும் வீசா ஆலோசனைகளும் வழங்கப்படும்
- மேலும் BUDJECT AIRLINES SPICEJET , AIR ASIA, FLY DUBAI, AIRARABIA , ROTANA , ஆகிய விமானங்களில் குறைந்த கட்டணத்தில் செல்வதற்கு இன்றே நாடுங்கள்
- அத்துடன் தற்போது விசேட விலைக்கழிவுகளாக சென்னை 19800 மதுரை 17500 டோகா 16000 துபாய் 15000 சாஜா 13000 ஆகிய குறைந்த கட்டணங்களில் பெற்றுக்கொள்ளலாம்.




No. 216, Kasthuriyar Road, Jaffna, Sri Lanka.
0212229555 | 0212228555 | 0766911080 | 0766911081

No. 324, Aluthmawatha Road, Modara, Colombo - 15.
011 254 0208 | 011 254 0111
077 108 3480 | 077 108 3481/82

No. 132, Sri Kathiresan Street, Colombo - 13.
011 233 3322 | 011 233 4470
077 108 3483 | 076 691 1090

E-mail : sbtravels216@yahoo.com | sbtravels132@yahoo.com | sbtravels132@gmail.com

# ராஜபக்சக்களின் முட்டைகளை அடைகாக்கும் ரணில்!



ஹிருத்திக் போஸ்நிஹாலே

இலங்கையின் ஜனாதிபதி யார்? சிறிசேனவா அல்லது ராஜபக்ஷவா என்ற சந்தேகம் விரைவில் வந்துவிடும் போலுள்ளது. சில அதிகாரங்களை விட்டுக் கொடுத்தாலும் அதிகாரமுள்ள ஜனாதிபதியாக இன்னும் நீடிக்கும் சிறிசேனவின் கண்ணில் தொடர்ந்து விரலைவிட்டு ஆட்டிக்கொண்டிருக்கும் ராஜபக்ஷக்களிற்கு துணிச்சல் எங்கிருந்து வந்தது?

இலங்கை அரசியல் வரலாற்று பாரம்பரியம் தொடர்ந்திருந்தால் ராஜபக்ஷக்கள் மட்டுமல்ல, அவர்களது மனைவிகள் பிள்ளைகளும் சிறைக்கம்பி எண்ணிக் கொண்டுதான் இருந்திருக்க வேண்டும். மகிந்த, சிராந்தி, நாமல், யோசித, ரோஹித, பசில், கோத்தபாய ஆகியோர் மீது சிரமமில்லாமல் பாயக்கூடிய நிறைய விவகாரங்கள் உள்ளன.

முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகா மீது ஆயுதக்கொள்வனவு மோசடிக் குற்றம் சுமத்தியதைவிட, பல மடங்கு பெரிய குற்றங்கள் சுமத்தியிருக்கலாம். ஆனால் எதுவும் நடக்கவில்லை.

முன்னைய ஆட்சியில் ஊழல் மோசடியிருந்தது, அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது போன்ற தகவல்கள் தொடர்ச்சியாக வெளிவந்தது, எப்.சி.ஐ.டி வாசலிற்கு பலர் தொடர்ச்சியாக சென்று வந்ததை தவிர பெரியளவிலான நடவடிக்கையெதுவும் நிகழவில்லை. இது, சாதாரண வெகுஜனங்கள் மத்தியில் ராஜபக்ஷக்களின் ஆட்சி பற்றிய எதிர்மறை உணர்வை ஏற்படுத்தியிருக்கிறதென ஒரு தரப்பில் சொல்லப்பட்டாலும், இதற்கு இன்னொரு பக்கமும் உள்ளது. வெறும் குற்றச்சாட்டே தவிர, ஒன்றும் நிரூபிக்கவில்லைத்தானே என தீவிர ராஜபக்ஷ ஆதரவாளர்கள் சமாதானப்பட்டும் கொள்ளலாம்.

புதிய அரசின் இந்த மென்போக்கு ராஜபக்ஷக்களிற்கு துணிச்சலை கொடுத்தது என பொதுவாக சொல்லப்படுகிறது. தூக்குமேடை நமக்கு பஞ்சு மெத்தையென முளைத்து மூன்று இலைவிடாத நாமல் எல்லாம் சிறைவாசலில் நின்று பஞ்ச் வசனம் பேசிக் கொள்ளும் துணிச்சல் இங்கிருந்துதானா வந்தது?

உண்மை அதுவல்ல. இது ஒரு நிகழ்ச்சி நிரலின் பாற்பட்ட நடவடிக்கைகள். இதன் பின்னால் பல அரூப கரங்கள் உள்ளன. சிறைச்சாலை வாசலில் நின்று நாமல் வாயசைத்தாலும், உச்சரிக்கப்பட்ட வசனங்கள் எழுதப்பட்டது கால்டன் பிளேசில்அல்ல.

இலங்கை வரலாற்றில் கட்சிகளிற்குள் அதிருப்தியணி உருவாகுவது ஒன்றும் புதியதல்ல. ஆனால் அவர்கள் ஒரு பேரலையாக உருக்கொள்ள முடியாது. ஒருசிலரின் கிளர்ச்சியென்ற அளவிலேயே முடியும். ஐதேகவில் லலித் அத்துலத்முதலி, காமினி திசநாயக்க தலைமையில் ஒரு கிளர்ச்சி நடந்தது. அது தவிர சொல்லிக்கெள்ளும் விதமான கிளர்ச்சிகள் நிகழவில்லை. காரணம், இலங்கையில் ஜனாதிபதிகளிற்கு அந்தளவு அதிகாரம் உள்ளது. சுருக்கமாக சொன்னால் ஆணை பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றுவதை தவிர எதையும் செய்யலாம். ஒரு நிரபராதியை குற்றவாளியாக்கி சிறையில் அடைக்க முடியாதா என்ன? ஜனாதிபதி பதிவியிலிருக்கும் கட்சித்தலைவருக்கு எதிராக போராட இலங்கையில் முறையான ஜனநாயக வாய்ப்புக்கள் இல்லையென்பதே நிதர்சனம்.

அப்படியிருக்கவும் ராஜபக்ஷக்கள் போராடுகிறார்கள். உள்ளக தகவல்களின் பிரகாரம் ராஜபக்ஷக்களின் போராட்டத்திற்கு ஸ்ரீகோத்தாவின் மனம்நிறைந்த ஆசீர்வாதம் கிடைக்கிறது.

ராஜபக்ஷக்களின் அரசியலிலிருந்து மக்களையும், கட்சியையும் மீட்டுவருவதென்பது நினைப்பதைபோல சுலபமானதல்ல. அந்த பெரும்சுமை மைத்திரியின் தலையில் உள்ளது. அதை அவரால் தனியாக செய்வது சிரமம். அதற்கு ஐதேகவின் பக்கபலம் இருந்தால் மிகச்சுலபமாக செய்யலாம். அதற்காகத்தான் தேசியஅரசு உருவானது. அது சர்வதேச செயற்திட்டமொன்று.

தேசிய அரசு, மகிந்த இரண்டு வேறுபட்ட தரப்பை ரணில் கையாள்கிறார். தெசியஅரசு என சுகவை இறுக அணைத்துக்கொண்டு, மகிந்தவை வைத்து அவர்கள் வேட்டியை உருவவைக்கிறார்.

சு.க ஐ.தே.க புரிந்துணர்வு இதயபூர்வமானதல்ல என்பதற்கு நடக்கும் சம்பவங்கள் சாட்சி. இது தவிர்க்கபட முடியாத ஒன்றாக அமைந்துவிட்டது. இந்த கூட்டிற்குள் இருந்து கொண்டு சு.கவை சிக்கலடைய வைக்கும் நகர்வுகளை ரணில் செய்கிறார் என்று சு.க காரர்கள் இப்பொழுது பகிரங்கமாக பேசத் தொடங்கிவிட்டார்கள். இறுதியான நடந்த சு.கவின் மத்தியகுழு கூட்டத்தில் இது பற்றி பலரும் மைத்திரியிடம் புகார் சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினர்களை அமைதிப்படுத்த மைத்திரியிடம் எந்த சமாதானமும் இருக்கவில்லையென்று அன்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட பிரமுகர் ஒருவர் சொன்னார்.

சு.கவின் கைகள் இரண்டையும் ரணில் பலமாக பிடித்து வைத்திருக்கிறார். கட்சிக்குள் உள்ள கிளர்ச்சிக்காரர்கள் வசதிக்கேற்ப ஆடுகிறார்கள் என்பது அன்றைய குற்றச்சாட்டு. இதுதான் உண்மை.

சு.கவிற்கு எதிரான தனது கிளர்ச்சிகள் அனைத்தையும் ரணில் பாதுகாப்பார் என்ற நம்பிக்கை ராஜபக்சவிடம் உள்ளது போல்த்தான் தெரிகிறது. சு.கவிற்குள் இந்த கிளர்ச்சி நீடிக்கும்வரை ஐ.தே.கவிற்கு தேர்தல்களில் பெரியளவில் சவால் இல்லை.

மஹிந்த தனிப்பெரும் சக்தியாக உருவெடுக்கிறார் என்று தெளிவாகும் வரை ரணில் அவரை பாதுகாக்கலாம். அப்படி செய்வது அவருக்கு இரண்டு நன்மைகளை கொடுக்கும்.

ஒன்று, சு.கவை பலவீனப்படுத்தி ஐ.தே.கவின் வெற்றியை உறுதிசெய்யலாம். மற்றது, தமிழர்களின் அரசியல்தீர்வை தள்ளிப் போட்டுக் கொண்டிருக்கலாம். இன்றைய திகதியில் சொந்தக்கட்சிக்காரர்கள் ரணிலுக்கு செய்வதைவிட, தங்கமுட்டையிடும் வாத்தாக மஹிந்த நிறைய செய்கிறார். மஹிந்தவின் ஒவ்வொரு அரசியல் நகர்வும் ரணில் விக்கிரமசிங்கவிற்கே சாதகமாக அமைந்து கொண்டிருக்கிறது.

இனப்பிரச்சனை தீர்வு விவகாரத்திலும் ரணில் விக்கிரமசிங்கவின் தங்கமுட்டை வாத்தாக மஹிந்த நிச்சயம் இருப்பார். ஏற்கனவே ஒருமுறை ரணிலிடம் தமிழர்கள் தோல்வியடைந்தார்கள். அடுத்தமுறையாவது அவரை சந்திக்க முன்தயாரிப்புக்களில் ஈடுபடுகிறார்களா? ●



▶ வவுனியா நாகர்இலுப்பை குளத்தில் தற்காலிகமாக வசித்து வரும் அரசியல்கைதியொருவரின் குடும்பத்திற்கு வவுனியா சாந்தநாயகி நற்பணி மன்றத்தினால் தற்காலிக குடிசை அமைக்க உதவி வழங்கப்பட்டுள்ளது.



# சோறு போடாத பேச்சு

கிழக்கில் மட்டக்களப்பில் பயணிகள் போக்குவரத்து விமானத்தளத்தை ஜனாதிபதி அண்மையில் திறந்துவைத்தார். ஏற்கனவே திருகோணமலையில் உள்ள விமானத்தளத்தை பயணிகள் போக்குவரத்து விமானத்தளமாக மாற்றும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆக, சத்தமில்லாமல் கிழக்கில் இரண்டு விமானத்தளங்கள் உருவாகவுள்ளன.

கிழக்கை வர்த்தக, பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் துரிதகதியில் நடக்கின்றன. இதன் ஒருகட்டமாக சர்வதேச முதலீட்டாளர்களை கிழக்கிற்கு அழைத்து சென்றுள்ளார் கிழக்கு முதல்வர். மத்தியகிழக்கு உள்ளிட்ட பலநாடுகளின் பிரதிநிதிகள் கிழக்கிற்கு விஜயம் செய்திருந்தனர்.

முதலீட்டாளர்களை அழைத்து செல்வதே ஒரு மிகப்பெரிய காரியம். முதலிடுவதற்கான வாய்ப்பை கிழக்கு மாகாணசபை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இந்த முதலீடுகளில் பெரும்பாலானவை முஸ்லீம்களின் பிரதேசங்களிற்கு செல்லும், முஸ்லீம் இளைஞர் யுவதிகள்தான் அதிக தொழில்வாய்ப்பு பெறுவார்கள் என்ற விவாதங்கள் தோற்றம்பெறும்தான். எனினும், அது இரண்டாவது விவகாரம்.

கிழக்கில் முதலீட்டாளர்களை அழைத்து வருகிறார்கள், தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்துகிறார்கள் என்பதே கவனிக்க வேண்டியது. இதையெல்லாம் விட முக்கியமானது, மத்தியமாகாண உறவு.

இவற்றை பெறுவதில் மத்திய அரசும், சட்டங்களும் எந்த இடத்தில் இடையூறு செய்கின்றன என்று தேடியறிந்து, அந்த இடத்தில் முட்டுப்பட்டு, விவாதங்களிலும் சர்ச்சைகளிலும் நாட்களை கடத்திக் கொண்டிருக்கவில்லை. இருக்கின்ற நிலைமையில் எப்படி புதிய வாய்ப்புக்களை கண்டடைவது என்று அவர்கள் சிந்திக்கிறார்கள்.

இந்த விடயத்தை மிகதெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். கிழக்கு மாகாணசபை அப்படி செயற்படுகிறதென்பதற்காக அவர்கள் அடிமை மனநிலையில் செயற்படுகிறார்கள், பணிந்து நடக்கிறார்கள் என வீணாண பேச்சு பேசிக்கொண்டிருப்பது புத்திசாலித்தனமல்ல.

மக்களின் உரிமைகளை பெறுவது எல்லாவற்றிலும் முக்கியம்தான். ஆனால், நமது மக்களை பசியுடனும், பட்டினியுடனும் வைத்திருக்காமல்ஞ் கிடைக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும், கல்வியையும் மேம்படுத்திக் கொள்வது அவசியம். எல்லா அரசியல், நிர்வாக கட்டமைப்புக்களையும் உரிமை பயணத்தில் ஒரேதிசையில் பயணிக்கவைப்பது புத்திசாலித்தனமா என்பது ஆராயப்பட வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சிகள், தலைமைகள் அரசியல் விவகாரங்களையும், மாகாணசபை உள்ளிட்ட உள்ளூராட்சிமன்றங்கள் அரசியலுடன் அபிவிருத்தியையும் கவனத்தில் கொள்ள வேண்டும். உள்ளூராட்சிமன்றங்களின் பிரதான செயற்பாடே அபிவிருத்திதான். அதனை சரியாக செய்ய வேண்டும்.

வடமாகாணசபை இந்த விவகாரத்தில் கிழக்கை முன்னுதாரணமாக கொள்ளலாம். தனியே அரசியல் மட்டும் பேசாமல் அபிவிருத்தி விவகாரத்தில் அதிக கவனத்துடனும், வினைத்திறனுடனும் செயலாற்ற வேண்டிய பொறுப்பு வடமாகாணசபைக்கு உள்ளது. எனெனில், போரால் பாதிக்கப்பட்ட மக்களை தாங்கிக்கொள்ள யாரும் இல்லை. அந்த மாபெரும் பொறுப்பை வடமாகாணசபைதான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மத்திய அரசுடனும், அதிகாரங்களுடனும் மல்லுக்கட்டுவதை மட்டும் ஒரே இலக்காக கொள்ளாமல், தேவையானதை தேவையான இடத்தில் கைக்கொள்ளும் கெட்டித்தனத்தை வடமாகாணசபை பெற்றுக்கொள்ள வேண்டும். வடக்கில் யுத்தத்தில் விதவைகளானவர்கள், அவயங்களை இழந்தவர்கள், காணாமல் போனவர்கள், புனர்வாழ்வின் பின் விடுதலையான போராளிகள் பற்றிய துல்லியமான விபரங்கள் எல்லாம் வடமாகாணசபையிடம் கிடையாதென துணிந்து சொல்லலாம்.

வடக்கில் புதிய முதலீடுகளை கொண்டுவர வடமாகாணசபை என்னென்ன நடவடிக்கை எடுத்தது?

எத்தனை முதலீட்டாளர்களுடன், நாடுகளுடன் பேசியது?

இலங்கைத்தமிழர்கள் விவகாரத்தை வைத்து பெரும் அரசியலே செய்து கொண்டிருக்கிறது தமிழகம். வடமாகாணசபை தமிழக அரசுடன் ஏன் தொடர்பை ஏற்படுத்தவில்லை. தமிழகத்தில் உள்ள தொழில்நிறுவனங்களுடன் பேசி வடக்கிற்கு ஏன் அழைத்து வரவில்லை? வடக்கு இளைஞர், யுவதிகளை ஏன் தமிழக நிறுவனங்களிற்கு அனுப்பி தொழில் தேர்ச்சிமிக்கவர்களாக்கவில்லை?

தமிழக பல்கலைகழகங்களில் நமது இளையவர்களிற்கு அனுமதி பெறும் பொறிமுறையொன்றை ஏன் கண்டறியவில்லை?

மலேசியாவில் தமிழர்கள் கணிசமான செல்வாக்கு, அதிகாரத்துடன் இருக்கிறார்கள். அதனை எவ்வளவு தூரம் வடமாகாணசபை பயன்படுத்தியது?

இந்தக்கேள்விகள் தனியே முதல்வர் விக்னேஸ்வரனை நோக்கியதல்ல. அங்கு வீற்றிருக்கும் அத்தனை மக்கள் பிரதிநிதிகளையும் நோக்கியது. இந்த செயற்படாதன்மையில் முதல்வரிற்கு என்ன பங்குள்ளதோ, அதே பங்கு அங்குள்ள ஒவ்வொரு மக்கள் பிரதிநிதிக்கும் உள்ளது.

வெறும்பேச்சு வேண்டுமானால் அரசியல்வாதிகளிற்கு சோறு போடலாம், ஆனால் மக்களிற்கு சோறுபோடாது.

**தீபம்**
197, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633, 0214927561

| | | |
|---|---|---|
| ஆசிரியர்பீடம் | : editor@deepam.lk | ☎ 0214927562 |
| சந்தா | : subs@deepam.lk | ☎ 0768255566 |
| விளம்பரம் | : sales@deepam.lk | ☎ 0768255567 |
| செய்திகளுக்கு | : news@deepamnews.com | |

பத்திரிகை, இணையத்தளத்தில் செய்தியாளர்களாக செயற்பட ஆர்வமுள்ளவர்களிற்கு களங்கள் விரிந்துள்ளன. செய்தித்துறை ஆர்வம், புத்தாக்க திறனுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளுங்கள்.
0768255562, editor@deepam.lk





ஓமந்தையில் பொருளாதார மத்திய நிலையத்தை அமைக்க வலியுறுத்தி ஓமந்தையில் விவசாயி நடத்தும் சாகும்வரையான உண்ணாவிரத போராட்டத்தில் வடக்கு மாகாணசபை அமைச்சர் குருகுலராஜா மற்றும் உறுப்பினர் தியாகராசா.

## சொன்னார்கள்




**சிவசக்தி ஆனந்தன் – பாராளுமன்ற உறுப்பினர்**
விடுதலைப் புலிகள் அமைப்பில் இருக்கும் போது புகைத்தல்,மதுபானப் பழக்கவழக்கங்களுக்கு உட்படாதவர்கள் எவ்வாறு புனர்வாழ்வின் பின்னர் புற்றுநோயினால் உயிரிழப்பார்கள்?



**ஸ்ரீநேசன் பாராளுமன்ற – உறுப்பினர்**
கடந்தகாலத்தில் அரசாங்கங்களின் தவறான நடைமுறை காரணமாக பிழையான நிர்வாகம் வாழைச்சேனை காகிதஆலையில் நடந்தது. அதுதான் தொழிற்சாலை மூடக்காரணம். பழைய இயந்திரசாதனங்கள்தான் இருந்தது புதுப்பிக்கப்படவில்லை.

**நரேந்திர மோடி – இந்தியப் பிரதமர்**
சுடவேண்டுமென்றால் என்னைச் சுட்டுத் தள்ளுங்கள், தலித் மக்களைத் தாக்க வேண்டாம்



## எண்ணிக்கை

**62** தென்மராட்சி கல்வி வலயத்தில் முறையான மைதானமில்லாத பாடசாலைகள்.

**4,400** நாடு முழுவதிலுமுள்ள அதிபர் வெற்றிடங்கள்

**10,000** நீரிழிவால் வருடாந்தம் இலங்கையில் இறப்பவர்கள்.

எந்த சீரியஸான விடயத்தையும் சிக்கலில்லாமல் நகைச்சுவையாக கிறுக்க ஆர்வமாக இருக்கிறீர்களா? அரசியல், சமூகம், ஆன்மீகம் எந்த எல்லையையும் தொடலாம். உடனே வரைய ஆரம்பியுங்கள். தரமானவை தீபம் வாரஇதழிலும், தீபம் இணையத்தளத்திலும் வெளியாகும். உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி
editor@deepam.lk

# சிறீதர் தியேட்டருக்குள் பேய் குடியிருக்கிறதா?

ஹிருத்திக் போஸ்நிஹாலே



எட்டு மாதங்களின் முன்னர் தீபத்தில் வெளியானது "லக லக சிறிதர் தியேட்டர்" கட்டுரை. ஈ.பி.டி.பி கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உடைவுகள், சிக்கல்கள் பற்றிய அந்த கட்டுரையின் ஒரு இடத்தில் இப்படி வரும் திடீர் திடீரென உடையுதாம்ஞ் திடீர் திடீருன்னு சாயுதாம் பாணியில் கட்சி வெலவெலத்துப் போயுள்ளதென. அது சத்திய வார்த்தையென கட்சிக்குள்ளேயே பேச ஆரம்பித்து விட்டார்கள் என்பதுதான் இன்றைய செய்தி!

சந்திரமுகி திரைப்படத்தில் பேய்கள் குடியிருக்கும் வேட்டையாபுரம் அரண் மனையில் ரஜினிக்கும், வடிவேலுவுக்கு மிடையில் "திடீர்திடீருன்னு உடையுதாம்" உரையாடல் காட்சி வரும். அந்த வசனங் களை தியேட்டருக்குள் நின்றும் பேசலாம் என்பதுதான் இன்றைய அரசியல் கலாய்ப்பு. ஈ.பி.டி.பிக்கு எதை தொட்டாலும் புஸ்வாணமாகும் இன்றையகாலத்தில் படமாளிகை பயம்காட்டும் மாளிகையாகி விட்டதென்பதுதான் இன்றைய முக்கிய செய்தி.

ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி பிரமுகர் கட்சியை விட்டு விலகப்போகிறார் என்ற தகவலை முதன்முதலாக தீபம் அப்போது வெளியிட்டது. மகிந்தவின் தோல்வி கட்சியை கிடுகிடுக்க வைத்ததுடன், திடீர் திடீரென உடையுதாம் பாணியில் கட்சி வெலவெலத்துப் போயிருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தோம். தீபம் குறிப்பிட்டதைபோலவே சந்திரகுமார் கட்சிக்கு கல்தா கொடுத்தார்.

சநதிரமுகி பட வேட்டையாபுர அரண் மனை மாதிரி, சிறிதர் தியேட்டர் மாறிவிட்டதென கட்சி ஆதரவார்களே பேச ஆரம்பித்துவிட்டதுதான் இன்றைய செய்தி. கட்சிக்கு தோஷம் ஆரம்பித்துவிட்டது, கட்சியை சிதைக்கும் ஏதோ ஒரு அமானுஷ்யம் தியேட்டருக்குள் புகுந்துவிட்டதென அவர்கள் வெலவெலக்கிறார்கள்.

கட்சிப்பிரமுகர்கள் வரிசையாக கட்சியை விட்டு வெளியில் செல்வதால் கட்சி கிடுகிடுத்துப் போயிருக்கிறது. கொலைக் குற்றச்சாட்டால் முதலில் கமலை வெளியில் அனுப்ப வேண்டியதாகிவிட்டது. பின்னர் சந்திரகுமார் பாய்ந்தார். இப்பொழுது...

கட்சியின் இன்னொரு உயர்மட்ட தலைவர் கல்தா கொடுக்க தயாராகிவிட்டார் என்பதுதான் இன்றைய பரபரப்பு பேச்சு. அவர்ஞ் எதிர்கட்சி தலைவர் சி.தவராசா.

ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா விற்கும், ஈ.பி.டி.பி பிரமுகரான தவராசாவிற்கும் லடாய் முற்றிவிட்டதென்கிறார்கள் கட்சிக் காரர்கள். பெயரை வெளியில் சொல்லி விடாதீர்கள் என அவர்கள் சொன்ன தெல்லாம் அதிர்ச்சி தகவல்கள்.

### தாவுவாரா தவராசா?

சி.தவராசா தமிழ் அரசியல் பரப்பிற்குள் இருக்கும் அறிவுபூர்வமான முகங்களில் ஒன்று. அவர் ஈ.பி.டி.பி கட்சியிலிருந்தாலும் வடமாகாணசபைக்குள் அவருக்கு நற்பெயர் உண்டு. நியதிச்சட்டங்களின் உருவாக்கத்தில் அவரது ஆலோசனைகள் அதிகம் கிடைத்த தாம்.

"புலிப்பயங்கரவாதம்", "இணக்க அரசியல்", "தமிழ்மக்களை புலிகள்தான் அழித்தார்கள்" என மக்களை கடுப்பேற்றும் பேச்சுக்களை கட்சிக்காரர்கள் பேசிக்கொண்டிருக்க, ஓரளவு யதார்த்தமாக பேசிக் கொண்டிருப்பவர் தவராசா. அதனால்த்தான் இப்பொழுது கட்சி யின் முடிவிற்கு அப்பால் சென்று வடக்கு முதல்வரை ஆதரிக்கும் அணியில் இணைந் துள்ளார்.

கட்சியின் நிலைப்பாடு, விருப்பத்திற்கு அப்பால் சென்று ஏன் முதல்வரை ஆதரிக்கிறார் தவராசா?

காலமாற்றங்களிற்கு ஈடுகொடுத்து ஈ.பி.டி.பி தன்னை மாற்றிக்கொள்ளவில்லை, இப்பொழுதும் ஆயுத இயக்க மனோநிலையில் கட்டமைப்பில் செயற்படுகிறது, இதுதான் கட்சியின் வீழ்ச்சிக்கு பிரதான காரணம் என குமுறுகிறார்கள் தீவிர ஆதரவாளர்களில் பலர். ஒருகாலத்தில் பிரமாண்டமாக இருந்த கட்சி, இப்பொழுது கழுதைதேய்ந்து கட்டெறும்பான கதையாக மாறியிருப்பது கட்சியின் புத்தி சாலித்தனமற்ற நடைமுறைகள்தான் என்பது அவர்கள் குற்றச்சாட்டு. கட்சியின் பயணம் யதார்த்த அரசியலை புரிந்ததல்ல என கட்சிக்குள்ளேயே முணுமுணுப்பு எழுந்து விட்டதாம் அதிருப்தியின் விளைவுதான் தவராசாவின் நடவடிக்கை என்கிறார்கள்.

மகிந்த ராஜபக்சவுடன் நெருக்கம், இனப் படுகொலை அரசுடன் ஒட்டியிருந்ததென ஏராளம் அதிருப்திகள் பெரும்பாலான மக்களிடம் அந்தகட்சி மீது உள்ளது. இவை பற்றி அலட்டிக்கொள்ளாமல், தொடர்ந்தும் ஒரேவிதமான அரசியல் செய்வதுதான் பிரமுகர்களை கட்சியை விட்டு தூர செல்ல வைக்கிறதென்கிறார்கள்.

தமிழ்தேசிய கூட்டமைப்பு என்றாலே ஈ.பி.டி.பிக்கு ஆகாது. நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்பதல்ல, தமிழ்தேசிய கூட்டமைப்பை விமர்சிப்பதுதான் அவர் களின் அரசியலே. நிலைமை இப்படியிருக்க, தமிழ்தேசிய கூட்டமைப்புடன் "இணக்க" அரசியல் செய்ய தவராசா முயன்றால் கட்சி சகித்துக் கொள்ளுமா?

### போட்டுக்கொடுத்த கட்சிக்காரர்கள்

பிரச்சனை இங்கிருந்துதான் ஆரம்பமானது என்கிறார்கள். வடமாகாணசபையின் ஆளுங் கட்சிக்குள் குத்துவெட்டு ஏற்பட்டபோது முதல்வரை ஆதரித்த அணியில் தவராசாவும் இருந்தார். எதிர்க்கட்சி தலைவரான தவராசாவின் ஆதரவு முதல்வரிற்கு பெரும் பலமாக இருந்தது. அதனால்த்தான் அப்பொழுது பேச்சு எழுந்தது வடமாகாணச பையின் எதிர்க்கட்சியென்பது ஆளுங் கூட்டணிக்குள்தான் உள்ளது என.

பின்னர் வடமாகாணசபை ஒரு தீர்வுத் திட்ட யோசனையை தயாரித்திருந்தது. அந்த திட்டவரைவில் பங்காற்றியதுடன், தீரவுத் திட்டத்தை பல்வேறு தலைவர்களிடம் கைய ளிக்கும் நிகழ்வில் தவராசாவும் பங்காற்றினார். இதில் இலங்கை எதிர்கட்சி தலைவரும், தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தனிடம் கையளித்ததும் அடக்கம்.

அது கட்சிக்குள் புயலை கிளப்பியுள்ளது. "அண்ணைஞ் என்னண்ணை, உங்களை விட்டிட்டு அங்க குடுத்திருக்கார்" பாணியில் கட்சித்தலைமைக்கு சிலர் எண்ணெயும் ஊற்றிவிட்டிருக்கிறார்கள். பிறகென்ன, முறுகல் முற்ற ஆரம்பித்திருக்கிறது.



**சி.தவராசா**

வடக்கு எதிர்க்கட்சி தலைவர், ஈ.பி.டி.பி

அனைத்து ஆளுனர்கள், முதல்வர்கள் பங்குபற்றிய செயற்பாட்டுகுழு கூட்டத்திற்கு வடக்கு முதல்வர் தனது பிரதிநிதியாக என்னை அனுப்பியதுதான் சர்ச்சைகளை தோற்றுவித்துள்ளதென நினைக்கிறேன். வடமாகாணசபைக்குள் அதற்கு பொருத்தமான துறைசார்ந்த நிபுணத்துவத்தை கொண்ட வேறுயாரும் இருக்கவில்லையென்பதுதான் அதற்கு காரணம். அந்த கூட்டத்திற்கு செல்பவர் நிபுணத்துவ அறிவுடையவராக இருக்க வேண்டும். முதல்வர் தரப்பின் செயற்திறன் குறைவை தொடர்ச்சியாக நான் விமர்சித்து வந்தாலும், அங்கு செல்வதற்கு பொருத்தமான ஆள் நான்தான் என்பதை அவர் தெரிந்து அனுப்பினார். தமிழ்தேசிய கூட்டமைப்பிற்குள் அதற்கு பொருத்தமானவர் கிடையாதென்பதால்த்தான் நான் சென்றேன் என்பதுதான் வெளிப்படையான உண்மை. அதுபோல பல்கலைகழக விவகாரத்தில் முதல்வரும் நானும் இணைந்து அறிக்கைவிட்டது, அதற்கு கூடுதல் அரசியல் பெறுமானம் கிடைக்கும் என்பதற்கு.

இதைத்தான் தவறாக புரிந்து கொண்டு பேசுகிறார்கள். அப்படியான அபிப்பிராயம் கட்சிக்குள் சிலருக்கும் ஏற்பட்டிருக்கலாம். இந்த நடவடிக்கைகளிற்கு அரசியல் காரணங்கள் எதுவும் கிடையாது. கட்சிக்குள் எனக்கு எந்த நெருக்கடியும் கிடையாது. கட்சியை விட்டு செல்வதென்ற செய்திகள் வெறும் வதந்திகள்.



யாழ்ப்பாண பல்கலைழகத்தில் தமிழ் சிங்கள மாணவர்குழு மோதல் நடந்தது. அதற்கு வடக்கு முதல்வரும், தவராசாவும் இணைந்து அறிக்கை வெளியிட்டிருந்தார்கள்.

அண்மையில் முதலமைச்சர்கள், ஆளுனர்கள் கலந்துகொண்ட கூட்டமொன்றிற்கு வடக்கு முதல்வர் செல்ல முடியவில்லை. முதல்வரின் பிரதிநிதியாக சென்றது தவராசா!

**கட்சி வெலவெலத்துப் போனது.**

வடக்கு முதல்வர் தரப்புடன் தவராசா பேணும் நெருக்கம் கட்சித்தலைமைக்கு உவப்பில்லையென்கிறார்கள். அதுபற்றி கட்சித்தலைமை கூறியும், தவராசா அதை பொருட்படுத்தவில்லையென்றும் கூறப்படுகிறது. இந்த முறுகல் சில சமயங்களில் வாய்த்தர்க்கமாகவும் மாறத் தொடங்கி விட்டதென்பதுதான் கட்சிக்குள்ளிருந்து வரும் தகவல்.

தவராசா விரைவில் கட்சியைவிட்டு வெளியில் செல்லலாம் என்றும் ஒரு பரபரப்பு தகவல் அரசியல் வட்டாரத்தில் உலாவத் தொடங்கிவிட்டது. கட்சிக்கும் அது தெரியும் என்கிறார்கள். ஆனால், இந்த விவகாரத்தை கேட்டால் இரண்டு தரப்பும் மறுத்தது.

ஜனநாயக கட்சிக்குள் கருத்து வேறுபாடு, பல அபிப்பிராயங்கள் தோன்றுவது சகஜம் தானே என்கிறார்கள். ஆனால், மண்டை மேலுள்ள கொண்டையை மறைக்க மறந்த கதையாக, உட்கட்சி பிரச்சனை உள்ளுக்குள்ளிருந்து கசிவதை யாராலும் தடுக்க முடியாமல் இருக்கிறதென்பதுதுதான் சுவாரஸ்ய தகவல்.

**சந்திரகுமார் “போர்முலா”**

தவராசா உடனடியாக விலகிச் செல்ல மாட்டார். சந்திரகுமார் விவகாரம் ஒரு பாடமாக அமையும் என்றும் கட்சியின் சில தரப்பிடம் நம்பிக்கை தெரிகிறது. சந்திரகுமார் விலகிச் சென்றதை பெரிய விடயமாக கட்சி காட்டிக்கொள்ளாவிட்டாலும், உள்ளுக்குள் வெடவெடத்தது என்னவோ உண்மை தான்.

சந்திரகுமார் உடனடியாக தமிழ் தேசிய கூட்டமைப்பில் சேர்ந்தால் வில்லங்கமாகிவிடும். தென்னிலங்கை தேசியக்கட்சிகளில் சேரத்தான் வாய்ப்பு. அப்படி நடந்தால் வில்லங்கமாகிவிடும் என்று கட்சி கணக்குப்போட்டது. உடனடியாக தென்னிலங்கை தேசியகட்சிகளுடன் மறைமுக பேச்சு நடத்தியதாகவும், சந்திரகுமாரை கட்சிக்குள் இணைக்ககூடாதென வலியுறுத்தியதாகவும் ஒரு தகவலுண்டு. அதனால்த்தான் தேசியகட்சிகளில் இணையும் திட்டத்தை கைவிட்டு, ரெலோவுடன் நெருக்கம் காட்டுவதாக சொல்கிறார்கள்.

தமிழ்தேசிய கூட்டமைப்பிற்குள் நுழைய முடியாது, தேசிய கட்சிகளில் நுழைய விடாமல் தடுத்தால் சரி. அதிருப்தியாளர்களை முகவரியற்றவர்களாக்கலாம் என்று கட்சி நிரூபித்துவிட்டதென அவர்கள் சொல்கிறார்கள். அதனால் தவராசா இலேசில் வெளியில் செல்லமாட்டார் என்பது அவர்கள் கருத்து.

ஒருவேளை, முதல்வர் தரப்பு தனித்தவில் வாசிக்க புறப்பட்டால்?

இந்தக்கேள்விதான் அவர்களை தலையை பிய்க்க வைக்கிறது. ஏதாவது விவகாரமாகி தவராசாவும் வெளியில் சென்றால் ஈ.பி.டி.பிக்குள் வசீகரமான முகமே கிடையாதென்ற நெருக்கடியையும் கட்சி சிந்திக்காமல் இல்லை.

மகிந்த ராஜபக்சவின் தோல்விக்கு காரணம் குரு தனது நிலையிலிருந்து விலகி அவரை கைவிட்டதுதான் என அவருக்கு நெருக்கமான சோதிடர் ஒருவர் சொன்னாராம். அவரது தோல்வியின் பின்னர் சிறீதர் தியேட்டர் “லக லக” மாளிகையாகியதற்கும் அப்படியேதாவது காரணம் இருக்கலாமென கட்சி ஆதரவாளர்கள் பேசிக்கொள்கிறார்கள். தியேட்டரிற்குள் பேய்தான் புகுந்து விட்டதோ, அப்படி கட்சியை ஆட்டிப்படைக்கிறதென நாம் பேசிய ஆதரவாளர்கள் வெளிப்படையாக கவலைப்பட்டு கொண்டார்கள்.

எப்படியோ விரைவில் பரிகாரம் பண்ணாவிட்டால் விரைவில் எல்லாம் காலியாகி விடும்! ●

ஈ.பி.டி.பியின் தொலைக்காட்சியான டிடிரிவியில் தவராசா சொல்லாத கருத்தொன்றை சொன்னதாக தவராசா அண்மையில் பேஸ்புக்கில் குறிப்பிட்டிருந்தார். மகாவலி திட்டத்தின் கீழ் வடக்கிற்கு நீர் கொண்டுவரும் கலந்துரையாடல் எதிலும் தான் கலந்துகொள்ளாத போதும், கலந்து கொண்டு தெரிவித்ததாக கூறி, சொல்லாத கருத்தை ஈ.பி.டி.பி தொலைக்காட்சி வெளியிட்டது. இது உள்மோதலின் எதிரொலியாக இருக்கலாமென்று கருதப்படுகிறது.



கிரைம் டயரி

# முன்னாள் போராளிகளின் அன்பு கொலையில் முடிந்ததா?

**என்.கரன்**

அம்பாறையின் திருக்கோவில் பகுதியில் அண்மையில் நடந்த ஒரு கொலைச் சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வை ஏற்படுத்தியிருந்தது. படுத்திருந்த கணவனை கோடாரியால் கொத்தி மனைவி கொலை செய்திருந்தார்.

ஆம்... ஆத்திரம் கண்ணை மறைக்கும் என்பார்கள். இந்த கொலையிலும் இதுதான் நடந்திருக்கிறது.



அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்பிலுவில் பிரதேசத்தில் இந்த சம்பவம் நடந்துள்ளது. ஆலையடி வீதி தம்பிலுவில் 2ஐ சேர்ந்த 42 வயதுடைய தங்கராஜா பார்த்தீபன் எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த கொலையை செய்ததாக அவரது மனைவி சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக்கொலைகுடும்பதகராறுகாரணமாகவே நடைபெற்றிருக்கலாம் எனவும் வழமையாக இக்குடும்பத்திற்குள் அவ்வப்போது சண்டை நடைபெறுவதாகவும், சம்பவ தினமும் குடும்பத்திற்குள் கடுமையான சண்டை நடந்ததாகவும், கோபமடைந்த மனைவி தூக்கத்திலிருந்த கணவனின் கழுத்தின் பின் புறத்தில் கோடாரியால் வெட்டி கொலை செய்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவருவதாகவும் பொலிசார் குறிப்பிட்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் பெண் ஏற்கனவே திருமணம் முடித்தவர் என்பதும், கொலை செய்யப்பட்டவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர் விவசாயத்தில் ஈடுபட்டவர். தற்போது வெற்றிலை வியாபாரத்திலும் ஈடுபட்டு வருகிறார். கொலை சந்தேகநபராக கைது செய்யப்பட்டுள்ள அவரது மனைவி தம்பிலுவில் 02ஆம் பிரிவைச் சேர்ந்தவர். இவர் ஏற்கனவே திருமணம் முடித்த நிலையில் அவருக்குஇரண்டு பிள்ளைகள் உள்ளனர். அவரது கணவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார்.

கொலை செய்யப்பட்டவர் பிறிதொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தார் எனும் காரணத்தால் இக்குடும்பத்திற்குள் அவ்வப்போது சண்டை நடைபெறுவதாகவும், சம்பவ தினமான நேற்றும் சண்டை நடைபெற்ற போது கோபமடைந்த மனைவி கோடாரியால் தூக்கத்திலிருந்த கணவனின் கழுத்தின் பின்புறத்தே வெட்டி கொலை செய்துள்ளதாகவும், கழுத்துப்பகுதியில் காயங்கள் உள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவருவதாகபொலிசார் குறிப்பிட்டனர்.



கைது செய்யப்பட்ட பெண், முன்னர் விடுதலைப்புலிகளின் மகளிர் அணியில் இயங்கியுள்ளார். தற்போது கொல்லப்பட்ட வரும் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்துள்ளார். அந்த அமைப்பிலிருந்த சமயத்தில் கொல்லப்பட்டவருக்கு எக்ஸ் என்னும் உயிர் நண்பன் ஒருவர் இருந்துள்ளார். இருவரும் உயிர்த்தோழர்களாக இருந்துள்ளனர்.

தோழர்கள் இருவரும் விடுதலைப்புலிகளின் நிதி பிரிவில் இயங்கி வந்துள்ளனர். அந்த சமயத்தில் எக்ஸிற்கு திருமணம் நடந்தது. மணப்பெண் யாரெனில் தற்போது கொலைச்சந்தேக நபராக கைதானவர்.

இரண்டு நண்பர்களில் யாருக்காவது அசம்பாவிதம் நடந்தால், அவரது குடும்பத்தை மற்றவர் பார்க்க வேண்டுமென அடிக்கடி பேசிக்கொள்வார்களாம். “நான் வீரமரணம் அடைந்தால் எனது குடும்பத்தை நீதான் பார்த்து கொள்ள வேண்டும்“ என பரஸ்பரம் உறுதியெடுத்து கொண்டுள்ளனர்.

எக்ஸ் திருமணம் முடித்தபின்னர், அவரது வீட்டுக்கு கொல்லப்பட்ட பார்த்தீபன் சென்று வருவார். அந்த குடும்பத்தில் ஒருவரை போலத்தான் இருந்திருக்கிறார். இந்தநிலையில் திடீரென எக்ஸ் மரணமடைந்துள்ளார். அவரது மரணத்தின் பின், பார்த்தீபன் அந்த குடும்பத்தை கவனித்து வந்திருக்கிறார். நாளடைவில் எக்ஸின் மனைவி (கொலை சந்தேகநபர்) க்கும் பார்த்தீபனிற்கும் இடையில் திருமணம் நடந்தது.

இருவரின் திருமண வாழ்க்கை ஆரம்பத்தில் அமைதியாகத்தான் சென்றுள்ளது. நாளடைவில் இருவருக்குமிடையில் சிறிய சண்டைகள் தோன்றி விஸ்பரூபம் எடுக்க தொடங்கியதாகவும் அயலவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் மதுபானம் அருந்துவதை கண்டதாகவும் உறவினர்கள் கூறுகிறார்கள்.

சம்பவத்தினத்தன்றும் வழக்கத்தைபோல சண்டை தோன்றியுள்ளது. பார்த்தீபனிற்கு வெறொருபெண்ணுடன் தொடர்பு உள்ளதாக மனைவி கடுமையான குற்றச்சாட்டு சுமத்தியுள்ளார். வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில், பார்த்தீபன் நித்திரைக்கு சென்றுள்ளார்.

ஆத்திரத்துடன் இருந்த மனைவி, நித்திரையில் இருந்த கணவனின் கழுத்தின் பின்பகுதியிலும், தலையிலும் கோடாரியால் கொத்தியுள்ளார். படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தை தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார் கொல்லப்பட்டவரின் மனைவியை (வயது 46) கைது செய்தனர். அவர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ●


தேவராசா

# ஜனாதிபதிக்கு பக்கத்தில் நின்ற என் மகள் எங்கே?

## நல்லிணக்க பொறிமுறையின் கண்ணீர் சாட்சியங்கள்



நேருஜி

நல்லிணக்க பொறிமுறை தொடர்பில் மக்கள் கருத்துக்களைப் பெறும் நடவடிக்கைகள் தற்போது வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இடம்பெற்று வருகிறது. பாக்கியசோதி சரவணமுத்து தலைமையில் நல்லிணக்க பொறிமுறை தொடர்பில் மக்கள் கருத்தறியும் நிகழ்வு கடந்த செவ்வாய் கிழமை வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. 100 பேருக்கு சாட்சியமளிப்புக்கான கடிதங்கள் அனுப்பப்பட்ட போதும் 78 பேர் சாட்சியமளித்தனர். இங்கு இடம்பெற்ற சாட்சியமளிப்பு பதிவுகளில் சில...

ஜனாதிபதியுடன் நிற்கும் மகளை காட்ட முடியாதவர்கள் எப்படி நீதியை தரப்போகிறார்கள்? தாயார் ஜெயவனிதா

இறுதி யுத்தத்தின் போது காணாமல் போன எனது மகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் புகைப்படத்தில் நிற்கின்றார். அவளை என்னிடம் இதுவரை காட்டாதவர்கள் எப்படி நீதியை பெற்றுத்தரப் போகிறார்கள். எமக்கு இந்த அரசாங்கத்திலும் நம்பிக்கை இல்லை.

எனது மகள் இறுதி யுத்தத்தின் போது காணாமல் போயிருந்தார். நான் எனது மகளை தேடி வந்த நிலையில் கடந்த வருடம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன அவர்களால் வெளியிட்டப்பட்ட துண்டு பிரசுரம் ஒன்றில் எனது மகள் ஜனாதிபதியின் அருகில் நிற்பதைக் கண்டேன். இது தொடர்பில் நான் பலரிடமும் முறையிட்டேன். இறுதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களிடம் கூட நேரடியாக தெரிவித்தேன். ஆனால் பல மாதங்கள் கடந்தும் அதற்கு பதில் இல்லை. நான் ஆதாரத்துடன் தெரிவித்திருக்கின்றேன். ஜனாதிபதியுடன் நிற்கும் புகைப்படத்தை வழங்கியுள்ளேன். ஜனாதிபதி நினைத்தால் 15 நிமிடத்திற்குள் கண்டு பிடிக்க முடியும். ஆனால் இதுவரை பதில் இல்லை. அவர் அந்த புகைப்படத்தை எங்கு எடுத்தவர் என்று அவரால் கூற முடியும்.

மகாவம்சத்தை புறம்தள்ளி மதசார்பற்ற அரசு நிறுவப்பட வேண்டும் எஸ்.தெய்வேந்திரம்பிள்ளை

இந்த நாட்டில் அரசாங்கம் மனிதாபிமான போர் எனக் கூறி மனிதாபிமான அற்ற போர் ஒன்றினை நடத்தியது. இதில் மோசமான முறையில் அரசாங்கப் படைகள் நடந்து கொண்டன. இந்த அரசாங்கத்துடன் இணைந்து பல நாடுகள் விடுதலைப்புலிகளை அழிப்பதாக கூறி இந்த போருக்கு உதவின. கொத்துக்குண்டுகள் வீசப்பட்டன. அதை நாம் கண்களால் கண்டோம். போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் தொடர்பில் சர்வதேச விசாரணை நடைபெறவேண்டும்.

மகாவம்சம் ஒரு இதிகாசம். அது வரலாற்று நூல்இல்லை. அதை அடிப்படையாக்கொண்டு இங்கு ஆட்சி மேற்கொள்ளப்படுகிறது. பௌத்த தேசியவாதத்தை இரும்பு கோட்டை போன்று அவர்கள் கருதுகிறார்கள். அதனால் தான் பௌத்த பிக்குகள் கூட அத்துமீறி செயற்படுகிறார்கள். அந்த நிலை மாற வேண்டும். அனைத்து மதங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டு மதச்சார்பற்ற அரசு நிறுவப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம். இது திம்பு கோட்பாட்டில் கூட ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தது. அதனை உறுதிப்படுத்த வேண்டும்.

காணாமல் போன 28 பிள்ளைகள் ஜனாதிபதி மைத்திரியுடன்? நாகமுத்து நாகம்மா

இறுதி யுத்தத் நடைபெற்ற போது காணாமல் போன எனது மகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் புகைப்படத்தில் இருப்பதைக் கண்டேன். ஜனாதிபதி மைத்திரியின் தேர்தல் பரப்புரைக்காக விநியோகிக்கப்பட்ட துண்டு பிரசுரத்திலேயே எமது பிள்ளைகளின் படங்கள் உள்ளன. அவருடன் 28 தமிழ் பிள்ளைகள் நிற்கின்றார்கள். அவர்கள் காணாமல் போனவர்களாகத் தான் இருக்க வேண்டும். அதில் உள்ள நான்கு பிள்ளைகளை இனங்கண்டு விட்டோம். அந்த பிள்ளைகள் எங்கு இருக்கிறார்கள் என்பது அவர்களுடன் இணைந்து புகைப்படம் எடுத்த ஜனாதிபதிக்கு தெரிக்க வேண்டும். எனவே எங்களது பிள்ளைகள் தொடர்பில் ஜனாதிபதி பதில் அளிக்க முடியும். அவர் எமது பிள்ளைகளை கண்டுபிடித்து தரவேண்டும். அவர்களை விடாவிட்டாலும் பராவாயில்லை. ஒரு தடவை காட்டுங்கள் எனத் தெரிவித்தார்.

கொத்து குண்டு, இரசாயன குண்டு வெடித்ததை கண்ணால் கண்டேன்: கி.தேவராசா

யுத்தம் ஏற்பட்டமைக்கான காரணங்களை கண்டுபிடித்து அதனைத் தீர்தப்பதன் மூலமே இந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். இறுதி யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் எனது மகனை ஒப்படைத்தேன். அதற்கு இந்த அரசாங்கமும், படைகளும் பதில் சொல்ல வேண்டும்.


நாகம்மா


ஜெயவனிதா


செல்வதீபன்

கையில் கொடுத்த மகன் எங்கே. இறுதி யுத்தத்தின் போது கொத்துக் குண்டுகள் பயன் படுத்தப்பட்டன. வானத்தில் இருந்து வரும் குண்டுகள் வெடித்து அங்கும் இங்குமாக சிதறும். அதன் பின்னும் அந்தக் குண்டுகள் வெடிக்கும். கொத்துக் குண்டுகள், இராசா யனக் குண்டுகள் வெடித்ததை என் கண்களால் கண்டேன்.

இவ்வாறான மோசமான மனித உரிமை மீறல்களுக்கு சர்வதேச விசாரணை மூலமே தீர்வைக் காணமுடியும். இந்த நாட்டின் நீதித்துறையில் ஆதாரத்துடன் வெளிப் படுத்தப்பட்ட குமரபுரம் படுகொலை வழக்குக்கு நடந்தது என்ன..? இவ்வாறான நிலையில் உள்ளக விசாரணையில் எப்படி நீதியை எதிர்பார்க்க முடியம். 2009 மே மகனான எமது உறவினர் ஒருவின் உடல் புதைத்த இடத்தை கூட இராணுவம் அழித்து விட்டது.

சுதந்திர தினத்தில் தமிழில் தேசிய கீதம் பாடுவதால் நல்லிணக்கம் வந்து விட முடியாது முன்னாள் போராளி த.செல்வதீபன்

இறுதி யுத்தத்தின் போது இராணுவம் வார்த்தைகளால் கூற முடியாதளவு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்காக பெருமளவு நிதி வருகின்றது. அந்த நிதியைப் பயன்படுத்தி அரசாங்கம் வேறு வேலைகளை செய்கிறது. யுத்ததால் பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், பொதுமக்களுக்கான உதவிகள் அரசாங்கத்தால் சீராக வழங்கப்படவில்லை. உடலில் குண்டுச் சிதறகளுடன் முன்னாள் போராளிகள், பொதுமக்கள், மாணவர்கள் என பலரும் இருக்கிறார்கள்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் கூட இராணுவ முகாம்களை அலங்கரிப்பதற்கும், அங்கு பூச்சாடி வைப்பதற்கும், முட்கம்பி அடிப்பதற்கும் செலவு செய்யும் பணத்தை கூட யுத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செலவு செய்ய இந்த அரசாங்கம் தயாராக இல்லை. வடக்கு, கிழக்கு பகுதிகளில் சில திணைக்களங்களில் முற்று முழுதாக சிங்கள மொழி பேசும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வெறுமனே சுதந்திர தினத்தில் தமிழ் தேசிய கீதம் பாடுவதால் மட்டும் நல்லிணக்கம் வந்து விட முடியாது.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் நடைபெறும் நிகழ்வுகளில் முழுமையாக தமிழில் தேசிய கீதம் பாடப்பட வேண்டும். இந்த அரசாங்கம் செய்ய உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை மூலமே நீதியைப் பெற முடியும்.

**முதலமைச்சருக்கு அதிகாரங்கள் தேவை: எஸ்.பூபாலபிள்ளை**

இந்த நாட்டில் வந்த யாப்பு சீர்திருத்தங்கள் தமிழ் மக்களை சிறுபான்மை இனமாக சித்தரித்து வந்திருக்கிறது. முதலில் இந்த நாட்டில் சிறுபான்மை இனம் என்ற சொற்பதம் பயன்படுத்தப்படாது தேசிய இனம் என்ற சொற்பதம் பயன்படுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களும் ஆட்சி அதிகாரத்திற்கு வரக்கூடிய நிலை உருவாக வேண்டும். அல்லது தமிழ் மக்கள் வரக்கூடிய உபஜனாதிபதி முறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

மதச் சார்பற்ற அரசு வரவேணும். அரசை விட அதிகாரம் கூடினவர்களாக பிக்குமார் இருக்கிறார்கள். இந்த நிலைமை மாற வேண்டும். தமிழ் மக்களின் பூர்வீக நிலத்தில் புத்தர் சிலைகள் எதற்கு?

எங்களுக்கு இழப்பீடு தேவையில்ல. எங்கட பிள்ளைகள் வேணும். காணாமல் ஆக்கப்பட்டோர் எங்காவது பாதாள சிறைகளில் இருக்கலாம். எங்கட பிள்ளைகள் காணாமல் போகவில்லை. அவர்களை இராணுவத்திடம் ஒப்படைத்தோம். அவர்கள் இறந்திருந்தால் ஆதாரத்துடன் மரணச் சான்றிதழ் தரவேண்டும். ●

**யுத்தம் முடிவடைந்த பின்னர் கூட இராணுவ முகாம்களை அலங்கரிப்பதற்கும், அங்கு பூச்சாடி வைப்பதற்கும், முட்கம்பி அடிப்பதற்கும் செலவு செய்யும் பணத்தை கூட யுத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செலவு செய்ய இந்த அரசாங்கம் தயாராக இல்லை.**

18 க்கு முன் நடந்த மனித உரிமை மீறல் தொடர்பில் சர்வதேச விசாரணை மூலம் தீர்வு காணப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இறந்த எமது உறவுகளை நினைவு கூருவது எமது கடமை. அதனை தடுக்க முடியாது.

இன்று மாவீரர் துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டு இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த நிலை மாற்றமடைய வேண்டும். மாவீரர் தினம் அனுஸ்டிக்க அனுமதி வழங்க வேண்டும். துயிலும் இல்லம் என நினைத்து பொது




தெய்வேந்திரம்பிள்ளை



# வடக்கு கல்வித்துறை சீரழிவு

## நிர்வாக சீர்கேடு காரணமா?



கருணாகரன்

வடக்கின் கல்வித்துறையில் ஏற்பட்டிருக்கும் சீரழிவைப்பற்றித் தொடர்ந்து செய்திகள் வந்துகொண்டேயிருக்கின்றன. ‘மாணவர்கள் மீது ஆசிரியர் வன்முறை’, ‘துஸ்பிரயோகம்’ என்பது தொடக்கம் ‘கல்வி நிலையில் வீழ்ச்சி’ என்பது வரை ஏராளம் செய்திகள் தினமும் வந்து கொண்டிருக்கின்ற. இந்தச் செய்திகளால் மனம் பதற்றத்துக்குள்ளாகிறது. மனம் மட்டுமல்ல, சமூகமே பதற்றமடைகிறது. இந்தச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளைக் காணவில்லை என்பதும் கல்வி மேம்பாட்டுக்குரிய நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரியவில்லை என்பதும் சமூகத்தின் தொடரும் பதற்றத்துக்குக் காரணமாகின்றன.

தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் பாதகமான செய்திகளையெல்லாம் கல்வித் துறையினர் கண்டும் காணாதிருப்பது ஏன்? கல்வித்துறையைப் பற்றி நீதிபதிகள் பொதுவெளியில் கண்டனம் தெரிவித்துக் கருத்துச் சொல்லும் அளவுக்கு கல்வி அமைச்சும் அதனுடைய நிர்வாகமும் இடமளித்துக் கொண்டிருப்பது எதற்காக? ஊடகங்களும் சனங்களும் கண்டபடி கதைக்கும் அளவுக்கு நிலைமை கீழிறங்கிக் கொண்டிருக்கும்போது, அதைக் கட்டுப் படுத்துவதற்கான தன்னுடைய பொறுப்பை உணராமலும் ஏற்றுக்கொள்ளாமலும் எதற்காகப் பிடிவாதமாக மௌனம் சாதிக்கிறது கல்வித்துறை? குறிப்பாகக் கல்வி அமைச்சு? என்பதே பலருடைய இன்றைய கேள்விகளாகும்.

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் நிச்சயமாக வடக்கின் கல்வி அமைச்சுப் பதில் சொல்லப்போவதில்லை. அது இவற்றையெல்லாம் பொருட்படுத்தப்போவதுமில்லை. ஏற்கனவே சில இடங்களில் கல்வி நிர்வாக ஒழுங்கின்மைகளுக்கும் நீதியற்ற நடவடிக்கைகளுக்கும் எதிராக மக்களாலும் மாணவர்களாலும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. அந்தப்போராட்டங்களின் நியாயத்தன்மையை கல்வி அமைச்சு உணர்ந்து நடவடிக்கை எடுக்கவில்லை. அவற்றைக் கருத்திற் கொண்டு அவற்றுக்கு மதிப்பளிக்கவும் இல்லை.

“இப்படியான போராட்டங்களும் எதிர்ப்பும் வந்தால், அதைப்பற்றி கண்டு கொள்ளாதீர்கள். இரண்டொரு நாளிலோ இரண்டொரு வாரங்களிலோ போராட்டத்தை முன்னெடுப்போர் களைத்துச் சலித்து கைவிட்டு விடுவார்கள். அதன்பிறகு எல்லாம் வழமையாகி விடும்“ என்று அதிகாரிகளுக்கு கல்வி அமைச்சர் தெரிவித்ததாக சொல்லப்படுகிறது. இது உண்மையா இல்லையா என்பதற்கு அப்பால், நிலைமைகளைக் கூர்மையாக அவதானித்தால் அப்படி அவர் சொல்லியிருக்கக் கூடும் என்று நம்பும்படியாகவே நிலைமைகள் உள்ளன.

உதாரணமாகக் கிளிநொச்சி, கனகபுரம் மகாவித்தியாலயத்தில் அதிபர் நியமனத்தை எதிர்த்து பெற்றோராலும் பழைய மாணவர்களாலும் நடத்தப்பட்ட உண்ணா விரதத்தை கல்வி அமைச்சர் கையாண்ட விதம் இதை நிரூபிக்கிறது. உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றவேளை தவிர்க்க முடியாமல் அங்கே வந்த கல்வி அமைச்சர், “உங்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து சில நாட்களில் நடவடிக்கை எடுக்கலாம்” என்று பொத்தாம் பொதுவாகச் சொன்னார். இந்தப்பதிலில் திருப்தியற்றிருந்த போராட்டக்குழுவினர், காலக்கெடுவொன்றை விதித்து, அந்தக் காலப்பகுதிக்குள் தீர்வைத்தருமாறு கேட்டனர். “பார்க்கலாம்“ என்று சொல்லிவிட்டுச் சென்ற கல்வி அமைச்சர், பின்னர் உரிய தீர்வைக் கொடுக்கவில்லை.

அப்படியே ஆறப்போட்டு, பிரச்சினையை பழைய கஞ்சியாக்கி விட்டார். இதனால் மிகக் கோபமும் சலிப்புமடைந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர் மக்களும் பழைய மாணவர்களும். ஆனாலும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. வேண்டுமானால், அடுத்த தேர்தலுக்கு “மச்சான் வரட்டும். அப்பொழுது பார்த்துக் கொள்கிறோம்” என்று சொல்லிக் கொள்ளலாம். வேறு எதுவும் செய்ய முடியாது.

வேண்டுமானால், “இதைப்பற்றி முதலமைச்சருக்குக் கடிதம் எழுதுங்கள். அவர் கவனித்துக்கொள்வார்” என்று சிலர் சொல்லக் கூடும். இதைப்போலப் பல பிரச்சினைகளுக்கு அவற்றைக் குறிப்பிட்டு முதலமைச்சருக்கு எழுதிய கடிதங்களுக்கெல்லாம் ஒருவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதில்லை. இது கல்வி அமைச்சருக்கும் தெரியும். நிர்வாகிகளுக்கும் தெரியும். ஆகவே நீங்கள் எங்கே தெரியப்படுத்தினாலும் அவர்கள் கவலைப்படப்போவதில்லை. பதிலாக காலை ஆட்டிக்கொண்டு புரியாணி சாப்பிடுவார்கள்.

இதைப்போலக் கிளிநொச்சி ம.வியின் அதிபர் நியமனப்பிரச்சினை தொடர்பான விவகாரத்திலும் கல்வி அமைச்சு குழப்பமான நடவடிக்கைகளையே மேற்கொண்டது. மாதக்கணக்கில் இழுபட்ட இந்தப்பிரச்சினையிலும் கல்வி அமைச்சர் “பாராநிலைப்போக்கையே“ கடைப் பிடித்தார். “நிர்வாகத்தில் தலையிட விரும்பவில்லை“ என்று அவர் கூற முற்படலாம். இந்தப் பதில் ஏற்புடையதல்ல. ஏனென்றால், சில வலயங்களில் அவர் வலயக்கல்விப்பணிப்பாளர்களைக் கடந்து அங்குள்ள நிர்வாக உத்தியோகத்தர்களுடனும் கணக்காளர்களுடனும் நேரடியாகத் தொடர்பு கொண்டு கட்டளைகளைப் பிறப்பிக்கிறார். விவரங்களைக் கேட்டறிகிறார். இது முறையற்ற தலையீடாகும். இந்த மாதிரி ஒரு காலம் ஆளுநர் தலையீடுகளைச் செய்தபோது கொதித்தெழுந்தவர் இந்த முன்னாள் கல்விப்பணிப்பாளர் என்று சுட்டிக்காட்டுகிறார் ஒரு அதிகாரி. அப்படியென்றால், கல்வி அமைச்சர் இப்பொழுது கல்வி அமைச்சராகச் செயற்படுகிறாரா? அல்லது சில வலயங்களின் பணிப்பாளராகப் பணியாற்றுகிறாரா? என்றும் அந்த அதிகாரி கேட்கிறார்.

இதைத் தவிர, மறுபுறத்தில் ஒரு பிரச்சினை மாதக்கணக்கில் தொடரும்போதும், அந்தப்பிரச்சினையைப்பற்றிய செய்திகள் பகிரங்கமாக அனைத்து ஊடகங்களிலும் வெளியாகிக் கொண்டிருக்கும்போதும் ஆசிரியர்களும் மாணவர்களும் குழப்பமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றபோதும் அதைப்பற்றியெல்லாம் கண்டுகொள்ளாமல், அந்தத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் “ஞானநிலை”யில் இருப்பது சரியானதா? ஆனால், அப்படியான ஒரு மனோபாவத்தில்தான் கல்வி அமைச்சர் இருக்கிறார் என்று அவரை நன்கறிந்தவர்கள் சொல்கிறார்கள்.

இப்படிக் கல்வி அமைச்சு பாராமுகமாகக் “கள்ள மௌனம்” சாதிக்கும்போது நிலைமை மேலும் மேலும் எல்லைமீறிச் சென்று கொண்டிருக்கிறது. ஒரு பக்கத்தில் ஊடகங்கள் தங்கள் பாட்டுக்குக் கல்வித்துறையைப் பற்றியும் ஆசிரியர்களைப் பற்றியும் செய்திகளை வெளியிட்டுக்கொண்டேயிருக்கின்றன.

இப்பொழுது கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம் இதேபோன்றதொரு பிரச்சினையில் எரிந்து கொண்டிருக்கிறது. இரண்டு பேர் அந்தப்பாடசாலைக்கு அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஒரு அதிபர் பாடசாலையை நடத்திக்கொண்டிருக்கிறார். இன்னொரு அதிபர் மரத்துக்குக் கீழே புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கிறார். இரண்டையும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றனர் ஆசிரியர்களும் மாணவர்களும். இதைப்பற்றிச் சிரித்துக் கதைத்துக் கொண்டிருக்கிறது கல்விச் சமூகம். ஒரு பாடசாலைக்கு இரண்டு அதிபர்களா?! என்று கேள்விக்குறியோடும்



**ஒரு பிரச்சினைகள் மாதக்கணக்கில் நீடிக்கும்போது செயற்பாடுகள் சீர்குலைவது மட்டுமல்ல, அதனோடு இணைந்தவர்களுடைய உளநிலையும் பாதிக்கப்படுகிறது. ஆசிரியர்களும் மாணவர்களும் என்ன செய்வது என்று தெரியாத நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.**

வியப்புக்குறியோடும் செய்திகளை வெளியிட்டுக்கொண்டிருக்கின்றன ஊடகங்கள். வலயக்கல்விப் பணிப்பாளருக்கும் கோட்டக் கல்விப்பணிப்பாளருக்கும் ஒரே குழப்பம். இந்தப் பிரச்சினையை என்ன செய்வது என்று அவர்களுக்குப் புரியவேயில்லை. இதைப்பற்றி கல்வி அமைச்சின் செயலாளரிடம் கேட்டால், அவர் எரிந்து விழுகிறார். இடையில் இரண்டு அதிபர்களையும் செயலாளரும் வலயக்கல்விப்பணிப்பாளரும் தனித்தனியாக அழைத்துப் பேசியிருக்கிறார்கள். இரண்டு அதிபர்களும் அந்தப் பாடசாலையை விட்டு வேறு பாடசாலைக்குப் போக மறுத்து விட்டனர். இந்த நிலையில் என்ன செய்வது என்று தெரியவில்லை ஒருவருக்கும். இதற்கும் தீர்ப்புமில்லை. தீர்வுமில்லை.

ஆனால், "இந்தமாதிரிப் பிரச்சினைகளுக்கெல்லாம் தங்களால் தீர்வு காணமுடியும். எங்களுக்குப் பின்னுக்கிருக்கும் கைகள்தான் பிரச்சினையாக இருக்கிறது" என்று சொல்கிறார் மாகாணக் கல்வி அமைச்சின் மூத்த அதிகாரியொருவர். நிர்வாகத்தில் அரசியற் கைகள் தலையிடாமல் இருந்தால் எங்களால் பிரச்சினைகளை உருவாக்காமலே நிர்வாகத்தை வழிநடத்த முடியும் என்றும் சொல்கிறார்கள்.

இப்படிப் பல உதாரணங்களைச் சொல்ல முடியும். இதனால்தான், இன்று வடக்கின் கல்வித்துறையைப் பற்றிப் பொது வெளியில் பலரும் கண்டபடி கதைக்கின்ற நிலை உருவாகியுள்ளது. இதேவேளை இன்னொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். பாடசாலைகளில் நடக்கின்ற பிரச்சினைகளுக்கு அங்கேயே நியாயமானமுறையில் தீர்வு கண்டால் அல்லது அப்படிப் பிரச்சினை நடக்காது பார்த்துக் கொண்டால், யாருடைய வாய்க்கும் அவல் கிடையாமல் போய்விடும். சில சந்தர்ப்பங்களில் தவறிழைக்க முற்படும் ஆசிரியர்களைக் கண்டு, அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தாலும் பிரச்சினைகள் உண்டாவதைத் தவிர்த்துக்கொள்ளலாம். ஆனால் அப்படி நடப்பது குறைவு.

இதனால் நீதிமன்றங்களும் நீதிவான்களும் ஆசிரியர்களைப் பொதுமைப்படுத்திக் குற்றம் சாட்டுவதாக அபிப்பிராயம் தெரிவிக்கும் போக்கு உருவாகியிருக்கிறது.

"இருந்தாலும் இது நியாயமேயில்லை" என்று கவலைப்படுகிறார்கள் ஆசிரியர்கள். "சமூக நல்நோக்கத்தோடு இப்படிச் செய்திகளை வெளியிடுவதும் அபிப்பிராயம்தெரிவிப்பதுமாக இருந்தாலும் யதார்த்தத்தைச் சரியாக அறியாமல், அவற்றின் தாற்பரியங்களைப் புரிந்து கொள்ளாமல் நீதிவான்கள் கருத்துகளை வெளியிட்டிருக்கின்றனர் தீர்ப்புகளை அளிக்கின்றனர்" என்றும் அவர்கள் கவலைப்படுகிறார்கள்.

இப்படியெல்லாம் நிகழும்போது ஆசிரியர்கள் மீதான மதிப்பிறக்கமே நிகழ்கிறது. இதனால் சமூகத்திலும் மாணவர்களிடத்திலும் தம்மைப்பற்றிய தவறான கற்பிதங்களே உருவாகின்றன. இந்த நிலையில் தாம் எப்படி உளநிறைவோடும் அர்ப்பணிப்போடும் கற்பித்தலைச் செய்ய முடியும்? என்று கேள்வி எழுப்புகின்றனர் ஆசிரியர்கள். "சில இடங்களில் சில சம்பவங்கள் நடந்தது உண்மையாக இருக்கலாம். அதற்காக ஒட்டுமொத்தமாக எல்லா ஆசிரியர்களையும் ஒரே நோக்கில் பார்க்க முடியுமா?" என்றும் அவர்கள் கேட்கின்றனர்.

இன்றைய நிலையில் ஆசிரியர்களிடத்திலே ஒருவிதமான உளநெருக்கடி நிலைஏற்பட்டிருப்பதைக் காணலாம். ஒன்று ஊடகங்கள் பொறுப்புடன் நடந்து கொள்வதில்லை என்ற கவலை. மற்றது நீதிமன்றங்களும் நீதிபதிகளும் ஆசிரியப்பணியின் முக்கியத்துவத்தையும் ஆசிரியர்களின் உளநிலையையும் அவர்களுக்குரிய மதிப்பையும் பொருட்படுத்திக் கருத்துகளை வெளியிடவில்லை என்ற துக்கம்.

மொத்தத்தில் ஆசிரியர்களின் மதிப்பைப் பேணிக்காப்பாற்றியிருக்க வேண்டிய பொறுப்பிலிருந்து கல்வி அமைச்சுத் தவறிவிட்டது.

பிரச்சினைகள் எங்கேயும் எப்போதும் வருவதுண்டு. குடும்பங்களில் இருந்து சமூகம் வரை, துறைகள் உள்ளடங்கலாக அனைத்து நிர்வாகங்களிலும் ஏற்படுவது இயல்பு. ஆனால், அவற்றை முடிந்தவரை விரைவில் தீர்த்துக்கொள்ள வேண்டும். அதற்கான பொறிமுறையை வகுத்து வைத்துக் கொண்டால், எந்தப்பிரச்சினையையும் இலகுவில் தீர்த்துக்கொள்ள முடியும். அதற்காகத்தான் நிர்வாக விதிமுறைகளும் படிமுறைகளும் அதிகாரமும் வசதிகளும் உள்ளன.


வடக்கின் கல்வி மிகச் சடுதியாக வீழ்ச்சியடைந்து கொண்டிருப்பதற்குக் காரணம், அதிகரித்த அரசியல் தலையீடுகளும் கள்ளத்தனமான நிர்வாக நடவடிக்கைகளும்தான் என்பது பகிரங்கமானது. அவைதான் எல்லாப்பிரச்சினைகளையும் வளர்த்துப் பெருக்கிக்கொண்டிருக்கின்றன.

## இதய அஞ்சலிகள்

தீபம் வாரமலரின் நீண்ட கால விளம்பர அனுசரணையாளரும் சமூக சேவையாளருமான. அல்பா மிக்ஷர் உரிமையாளர்

**பற்குணராஜா பாலமுருகன்**

08.08.2016 அன்று காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும் மற்றும் அல்பா மிக்ஷர் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்....



தீபம் குழுமம்

ஆசிரியர்கள் தொடர்பான பிரச்சினைகள், மாணவர்கள் தொடர்பான விவகாரங்கள், அதிபர், ஆசிரியர் நியமனப்பிரச்சினை, இடமாற்றங்கள், பதவி வழங்கல்கள் தொடர்பான விவகாரம் என நிறைந்திருக்கும் பிரச்சினைகளைப்பற்றி ஆராய்ந்து அதற்குத் தீர்வைக்காணும் வழிமுறைகளைச் செய்வதற்கு இன்னும் கல்வி அமைச்சு முன்வரவேணும். அப்படி முன்வராமல் பின்னிற்பதற்குக் காரணம், பகிரங்கமாக இவற்றைப்பற்றி ஆராய முற்பட்டால்,தவறான, ஒழுங்கீனமான நடவடிக்கைகளுக்குக் "கட்டளையிட்டமை" வெளியே தெரியவரும். ஆகவே, என்னதான் நடந்தாலும் எவர் எப்படித்தான் கதைத்தாலும் கல்வி எப்படித் தான் சீர்கெட்டாலும் எல்லாவற்றையும் கண்டும் காணாதிருப்பதே சிறந்தது என்று கல்வி அமைச்சும் அமைச்சரும் உள்ளமை நன்றாகப் புரிகின்றது. இது உண்மையில் கல்வி அமைச்சுக்கு ஏற்பட்ட அவமானமும் கரும்புள்ளியுமாகும். "வடக்கின் கல்வி வரலாற்றில் இப்படியான ஒரு நிலை ஏற்பட்டதில்லை" என்று மூத்த கல்விமான் ஒருவர் வருத்தத்தோடு சொன்னார்.

ஒரு பிரச்சினைகள் மாதக்கணக்கில் நீடிக்கும்போது செயற்பாடுகள் சீர்குலைவது மட்டுமல்ல, அதனோடு இணைந்தவர்களுடைய உளநிலையும் பாதிக்கப்படுகிறது. ஆசிரியர்களும் மாணவர்களும் என்ன செய்வது என்று தெரியாத நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதனால் அதிகமாகப் பாதிக்கப்படுவது மாணவர்களின் கல்வியே. இதனால் தான் இலங்கையில் கடைசி மாகாணமாக வடக்கும் இறுதி மாவட்டங்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்றவையும் உள்ளன. தவிர, மாணவர்கள் என்பது எதிர்காலத்துக்குரியவர்கள். ஆகவே எதிர்காலத்துக்குரியவர்கள் பாதிக்கப்பட்டால், எதிர்காலம் பாதிக்கப்பட்டு விடும்.

ஆசிரியர்களின் மதிப்பு உயர்வாக இருந்தால்தான் அவர்களால் மாணவர்களை வழிப்படுத்தவும் கற்பிக்கவும் முடியும். ஆகவே ஆசிரியர்களின் மதிப்பைப் பேணிக் காக்க வேண்டிய பொறுப்பு மாகாணக்கல்வி அமைச்சுக்குண்டு. தவறிழைக்கும் ஆசிரியர்கள் மீதும் மாணவர்கள் மீதும் நடவடிக்கைகளை எடுப்பதைப்பற்றியும் அவர்களை எப்படிக் கையாள்வது என்பதைப்பற்றியும் மாகாணக் கல்வி அமைச்சு சிந்திப்பது அவசியம்.

எத்தனையோ தீர்மானங்களை நிறைவேற்றுகின்ற வடக்கு மாகாணசபை வடக்கின் கல்வித் துறையில் நடக்கும் சீரழிவையும் நிர்வாக அலங்கோலங்களையும் பற்றி ஒரு தீர்மானம் எடுக்காமல் இருப்பது எதற்காக? ●



# மனிதத்தின் தீர்ப்பு!

ஆவர்த்தனி

தென்மராட்சி பிரதேசத்தில் வலுவிழந்த இளம்பெண்ணை கூட்டு வன்புணர்விற்கு உட்படுத்தியவர்களிற்கு யாழ் மேல்நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது. அண்மையகாலத்தில் பாலியல் வன்புணர்வு வழக்கில் வடக்கில் வழங்கப்பட்ட முக்கிய, கவனத்தில் நிற்கும் தீர்ப்பு இது.

வடக்கில் பெண்களிற்கு எதிரான வன்முறைகள் கட்டற்று அதிகரித்து செல்லும் நிலையில் யாழ் மேல்நீதிமன்ற தீர்ப்பு ஒரு ஆறுதலாக அமைந்துள்ளது. இந்த வழக்கில் குற்றவாளிகள் தண்டனை பெற்றார்கள் என்பதை வரவேற்கிறோம் என்பதன் அர்த்தத்தை, சில தனிமனிதர்களிற்கு வழங்கப்பட்ட தண்டனையில் மகிழ்ச்சியடைவதாக அர்த்தப்படுத்தக்கூடாது.

பெண்களிற்கு எதிரான வன்முறைகள் தலைவிரித்தாடும் இன்றைய காலத்தில் சில கடிவாளங்கள் அவசியம். பெண்களிற்கு எதிரான வன்முறையென்பது தனிநபர் சார்ந்ததல்ல. அது ஒரு சமூகக்குற்றமாக உருவெடுக்கிறது. பெண்களிற்கு எதிரான வன்முறை எங்காவது ஒரு இடத்தில், யாருக்காவது ஒருவருக்கு நிகழும் குற்றமல்ல. எல்லா இடங்களிலும், எல்லா பெண்களிற்கும் அச்சுறுத்தல் நீடிக்கிறது.

தென்மராட்சியில் 2009 யூலை மாதம் 21ம் திகதி இந்த கொடூர குற்றம் நடந்தது. அவரை வலுக்கட்டாயமாக கடத்திச் சென்ற குற்றவாளிகள் பற்றையொன்றிற்குள் வைத்து ஒருவர் பின் ஒருவராக கூட்டு வன்புணர்வுக்கு உள்ளாக்கியுள்ளனர். நான்கு குற்றவாளிகளையும் பாதிக்கப்பட்ட பெண் அடையாளம் காட்டியுள்ளார். மாற்றுத் திறனாளியான பெண் செவிப்புலன் இழந்த, பேசும் திறன் குறைந்த வன்புணர்விற்கு உள்ளாகுவது சாதாரண விடயமல்ல. அது சமூக பெறுமானங்களையே கேள்விக்குட்படுத்தும் விடயம். ஓட, நடக்க, பேச, பார்க்க, கேட்க முடியுமான மனிதர்கள் மத்தியில் இயற்கையின் படைப்பில் சில மாற்றுத்திறனாளிகள் பிறக்கிறார்கள். அது படைப்பின் விசித்திரம். அவர்களை பேணி பாதுகாப்பது ஒவ்வொரு மனிதர்களின் கடமை, பொறுப்பு.

அப்படியான பெண்ணுக்கே குற்றமிழைக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த மனித விழுமியங்களையும் கேள்விக்குட்படுத்திய இந்த விவகாரத்தில் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டுள்ளார்கள். மனிதம் ஆறுதலடைய இதுதான் முக்கிய காரணம்.

பெண்களிற்கு எதிரான வன்முறைகள் பெருகும் இன்றைய காலத்தில் நமக்கு தேவை சில கறாரான தீர்ப்புக்கள். ●



## சந்திரகுமாருக்கு வாசல் திறக்கும் ரெலோ?

ஈ.பி.டி.பி கட்சியிலிருந்து வெளியேறிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தமிழ்தேசியகூட்டமைப்பின் அங்கம் வகிக்கும் ரெலோ கட்சியில் இணையலாம் என உள்கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.


ஈ.பி.டி.பியிலிருந்து வெளியேறிய சந்திரகுமார் பல்வேறு கட்சிகளுடன் பேச்சு நடத்தியதாகவும், இறுதியில் ரெலோவுடன் இணையும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. ரெலோ கட்சியின் தலைமையுடன் சந்திரகுமார் நல்ல நெருக்கத்தை பேணுவதாக கூறப்படுகிறது. அவரை கட்சியில் சேர்ப்பதில் கூட்டமைப்பு தலைமைக்கு அதிருப்தி ஏதாவது உள்ளதா என்பதை நாடிபிடித்து பார்க்கும் நடவடிக்கையில் கட்சி ஈடுபட்டுள்ளதாம்.

## கட்டுப்பாடில்லாத இளைஞர்கள்

பருத்தித்துறையிலிருந்து காலை எட்டு மணிக்கு புறப்பட்டு மண்டான் ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் இ.போ.ச பேரூந்தில் பயணம் செய்யும் இளைஞர்கள் குழு பற்றி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். பொதுமக்களிற்கு இடையூறாக பயணம் செய்வதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி நிறுவனமொன்றில் கல்வி பயிலும் மாணவர்கள் பேரூந்தின் முன்பக்க வாயில் கதவில் அடைந்து கொண்டு பயணிப்பதால் தரிப்பிடங்களில் இறங்கும், ஏறும் பயணிகள் சிரமங்களை சந்திக்கின்றனர். குறிப்பாக பெண் பயணிகள் பெரும் அசௌகரியங்களை சந்திக்கின்றனர்.

இளைஞர்குழு வாயிலை அடைத்துக்கொண்டு நின்றாலும், சாரதியோ நடத்துனரோ அதை கண்டிப்பதில்லையென்றும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.





## ஆளிருக்கு: கடிதம் வராது!

வவுனியா தபாலகத்திற்கு உட்பட்ட மணிபுரம் கிராம மக்களுக்கு கடிதங்கள் நேரடியாக விநியோகிக்கப்படுவதில்லை என்று கிராமமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மணிபுரம் கிராமத்தில் நூற்றிற்கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வருகின்றன. எனினும், அங்கு தபால் விநியோகம் இடம்பெறுவதில்லை. அனைத்து கடிதங்களும் கிராமத்திலுள்ள தேவன்கடை என்ற கடையில் தபால் விநியோகிப்பவரால் கொடுக்கப்படுகின்றன. கிராமத்தவர்கள் கடைக்கு வந்து, தமக்கான கடிதங்கள் கிடைத்துள்ளனவா என்று பார்த்து எடுத்து செல்கிறார்கள்.

அங்குள்ள இளைஞர், யுவதிகளின் நேர்முகத் தேர்வு உள்ளிட்ட பல அவசியமான கடிதங்கள் உரியகாலத்தில் கிடைக்காமல் காலதாமதமாவதாகவும், இதனால் பல இடையூறுகளை சந்திக்க வேண்டியுள்ளதாகவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.


## தாகத்தை தீர்த்து வையுங்கள்!

வவுனியா கற்குளம் 4 பகுதியில் குடிநீர் பெறுவதில் மக்கள் சிரமத்தை சந்திக்கின்றனர்.

2010ம் ஆண்டு பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்களில் இருந்த 87 குடும்பங்கள் இங்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்டன. தற்போது 150 வரையான குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்த கிராமத்தில் நான்கு குழாய் கிணறுகளும், நான்கு கிணறுகளும் மாத்திரமே உள்ளன. தற்போதைய கடும் வறட்சியில் கிணற்றிலும் நீர் வற்றிச் சென்றுவிட்டது. அத்துடன் அந்தப்பகுதி நிலத்தடி நீரில் கல்சியச் செறிவு அதிகரித்து சிறுநீரகநோயால் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. சுத்தமான குடிநீரை பெற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது மக்களின் கோரிக்கை.






## மீண்டும் அதிருப்தியை வாங்கிய விக்கி!

பொருளாதார மத்திய நிலைய விவகாரத்தில் உறுப்பினர்களின் கருத்தை வடக்கு முதல்வர் கருத்தில் எடுக்கவில்லையென்ற அதிருப்தி பரவலாக ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே ஓமந்தை விவகாரத்தில் ஒரு தரப்புடன் முரண்பட்ட முதல்வர், இப்பொழுது ஓமந்தையை ஆதரித்தவர்களின் கருத்தை கேட்காமல் மாங்குளத்தில் பொருளாதார மத்திய நிலையத்தை அமைக்க முயல்வதாக அதிருப்தி எழுந்துள்ளது.

பொருளாதார நிலையம் ஓமந்தையிலா, தாண்டிக்குளத்திலா என்ற பலப்பரீட்சை தோன்றியபோது இதை ஜனநாயகரீதியில் முடிவு செய்யுமாறு தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைமை அறிவித்திருந்தது. அதன்பின் நடந்த வாக்கெடுப்பில் 21 உறுப்பினர்கள் முதல்வரை ஆதரித்திருந்தனர். அதன்படி ஓமந்தையில் பொருளாதார மத்திய நிலையம் அமையுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது அந்த முடிவு மாற்றப்பட்டு மதகுவைத்தகுளத்திலும், மாங்குளத்திலும் பொருளாதார மத்திய நிலையங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மாற்றம் தொடர்பில் உறுப்பினர்களுடன் முதல்வர் வெளிப்படையான கலந்துரையாடல் நடத்தவில்லையென்ற அதிருப்தி எழுந்துள்ளது. அமைச்சர்கள் ஐங்கரநேசன், சத்தியலிங்கம், டெனிஸ்வரன் ஆகியோருடன் மாத்திரம் கலந்துரையாடி இந்த முடிவுக்கு வந்ததாக உறுப்பினர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.



'எங்க வீட்டு பிள்ளை' எம்.ஜி.ஆர், நம்பியார்.

# நிழலில் எதிரிகள் நிஜத்தில் நண்பர்கள்

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்** பற்றி பேசினால் நம்பியார் பற்றி பேசாமல் இருக்க முடியாது. எம்.ஜி.ஆர். படங்களில் வில்லனாக நம்பியார் வந்த பிறகுதான் படத்தில் விறுவிறுப்பு கூடும். படத்தில்தான் எம்.ஜி.ஆருக்கு அவர் வில்லனே தவிர, உண்மையில் நெருங்கிய நண்பர். எம்.ஜி.ஆரை பெயர் சொல்லி அழைக்கும் உரிமை பெற்ற ஒரு சிலரில் நம்பியாரும் ஒருவர். ரொம்ப ஜாலியான பேர்வழியும் கூட. அவரது நகைச்சுவையை எம்.ஜி.ஆரும் விரும்பி ரசிப்பார். இருவரும் நிழலில் எதிரிகள். நிஜத்தில் நண்பர்கள்.

எம்.ஜி.ஆர். கத்தி சண்டைக் காட்சிகளில் நடிப்பதை பார்த்து அவரை 'அட்டை கத்தி வீரர்' என்றெல்லாம் அக்காலத்தில் விமர்சனங்கள் எழுந்தது உண்டு. ஆனால், உண்மையான கத்தியைக் கொண்டே எம்.ஜி.ஆர். படங்களில் சண்டை போட்டிருக்கிறார். அவர் பயன்படுத்திய கத்திகள் சென்னையில் உள்ள அவரது நினைவு இல்லத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளன.

'சர்வாதிகாரி' படத்தில் நம்பியாருடனான வாள் சண்டைக் காட்சியில் எம்.ஜி.ஆரின் கத்தி நம்பியாரின் கட்டை விரலை ஊடுருவி விட்டது. அதேபோல, 'அரசிளங்குமரி' படம் எம்.ஜி.ஆரின் வாள் வீச்சுக்காகவே புகழ்பெற்றது.

அந்தப் படத்தில் எம்.ஜி.ஆருக்கும் நம்பியாருக்கும் ஆக்ரோஷமான சண்டை. ஒருநாள் படப்பிடிப்பில் நம்பியாரின் கத்தி எம்.ஜி.ஆரின் கண்ணுக்கு மேலே புருவத்தில் பட்டு கிழித்து விட்டது. படத்துக்கான மேக்அப் இல்லாமல் எம்.ஜி.ஆர். தனது வழக்கமான தோற்றத்தில் இருக்கும்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களில் இடது புருவத்தில் அந்தத் தழும்பு தெரியும்.

படப்பிடிப்பின்போது எம்.ஜி.ஆரின் புருவத்தில் நம்பியாரின் கத்தி பட்டு ரத்தம் கொட்டுகிறது. இன்னும் இரண்டு அங்குலங்கள் கீழே பட்டிருந்தால் எம்.ஜி.ஆரின் கண் பார்வை பறிபோயிருக் கும். அங்கிருந்த அனைவரும் அதிர்ச்சியில் உறைந்து போய்விட்டனர். ஓடிவந்த உதவியாளர் ஒருவர், எம்.ஜி.ஆரின் புருவத்தில் ரத்தம் கொட்டிய இடத்தில் துணியை அமுக்கிப் பிடித்தபடி, நம்பியாரைப் பார்த்து, "என்னண்ணே, பார்த்து செய்யக் கூடாதா? நீங்க கூடவா இப்படி?" என்று இரைந்தார். நம்பியாருக்கும் வருத்தம்.

எம்.ஜி.ஆர். உடனே, "அவருக்கு என்மீது கோபம் இல்ல; அந்தக் கத்திக்குத்தான் என்மீது கோபம்" என்று சொல்லி அந்த இடத்தில் சகஜ நிலையை ஏற்படுத்தினார்.



'அன்னமிட்ட கை' படத்தில் எம்.ஜி.ஆர் நம்பியார்.

பின்னர், நம்பியாரைப் பார்த்து, "ஏன்யா இப்படி செஞ்சீரு?" என்று எம்.ஜி.ஆர். கேட்டார்.

"நியாயமாக பார்த்தால் எனக்கு நீங்கள் நன்றி சொல்லணும்" நம்பியார் பதில்.

தெரியாமல்தான் என்றாலும் கத்தியாலும் குத்தி விட்டு, அதற்கு நன்றி வேறா? என்று நினைத்தபடி "ஏன்?" என்று கேட்ட எம்.ஜி.ஆருக்கு, "டைரக்டர் சொன்ன இடத்தில் குத்தாமல் இருந்ததற்காக" என்று மேலும் புதிர் போட்டார் நம்பியார்.

"டைரக்டர் என்ன சொன்னார்?" வியப்புடன் கேட்டார் எம்.ஜி.ஆர்.

"நெஞ்சில் குத்தச் சொன்னார்" என்ற நம்பியாரின் பதிலைக் கேட்ட எம்.ஜி.ஆர். சிரித்த சிரிப்பால் படப்பிடிப்பு அரங்கமே அதிர்ந்தது.


எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது அவரைப் பார்க்க அவரது வீட்டுக்கு நம்பியார் சென்றுள்ளார். அமைச்சர்கள் உட்பட வி.ஐ.பிக்கள் எம்.ஜி.ஆரை பார்க்க காத்திருந்தனர். நம்பியார் வந்துள்ள விஷயம் எம்.ஜி.ஆருக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் உடனே தனது அறையின் கதவைத் திறந்து நம்பியாரைப் பார்த்து உள்ளே வரும்படி சைகை காட்டிவிட்டு சென்றார்.

தங்களைத்தான் எம்.ஜி.ஆர். கூப்பிடுகிறார் என்று நினைத்துக்கொண்டு அங்கிருந்த அமைச்சர்கள் சிலர் எம்.ஜி.ஆர். அறைக்குச் சென்றனர். நம்பியார் வராததைப் பார்த்த எம்.ஜி.ஆர். மீண்டும் தனது அறையின் கதவைத் திறந்து, நம்பியாரைப் பார்த்து "உன்னைத்தான். உள்ளே வாய்யா" என்றார். நம்பியார் உள்ளே வந்த பின் உதவியாளரிடம் எல்லோருக்கும் காபி கொண்டு வருமாறு எம்.ஜி.ஆர். கூறினார். அந்த உதவியாளரை நம்பியார் தடுத்து, "எனக்கு மட்டும் ஒரு காபி கொண்டு வாருங்கள்" என்றார்.

அங்கிருந்த அமைச்சர் ஒருவர் நம்பியாரைப் பார்த்து, "ஏன், நாங்க என்ன பாவம் செஞ்சோம்?" என்று நம்பியாரிடம் கேட்டார். அதற்கு, "இங்கே நான் மட்டும்தான் விஜபி" என்ற நம்பியாரின் பதிலால் எம்.ஜி.ஆர் மட்டுமின்றி கேள்வி கேட்ட அமைச்சர் உட்பட எல்லோரும் சிரித்தனர்.

நகைச்சுவை உணர்வு உள்ளவர்களால்தான் நல்ல நகைச்சுவையை ரசிக்க முடியும். எம்.ஜி.ஆருக்கு நகைச்சுவை உணர்வு அபாரம்.

பல்வேறு இடையூறுகளுக்கு இடையே



எம்.ஜி.ஆரின் இடது புருவத்தில் தழும்பு இருப்பதை காணலாம்.

'நாடோடி மன்னன்' படத்தை எம்.ஜி.ஆர். தானே தயாரித்து, இயக்கி, கதாநாயகனாக நடித்தார். பிரம்மாண்டமான வெற்றியைப் பெற்ற இந்தப் படத்தின் வெற்றி விழா 16.10.1958ல் மதுரையில் நடந்தது. மதுரை ரயில் நிலையத்தில் இருந்து விழா நடந்த தமுக்கம் மைதானம் வரை 4 குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியில் மக்களின் ஆரவார வரவேற்புக்கு இடையே எம்.ஜி.ஆர். ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

எம்.ஜி.ஆர். சென்ற சாரட் வண்டிக்கு முன் உலக உருண்டையின் மீது 110 பவுனில் தங்க வாள் எடுத்துச் செல்லப்பட்டது. விழாவில் எம்.ஜி.ஆருக்கு தங்க வாளை நெடுஞ்செழியன் பரிசளித்தார். முதன்முதலில் பொதுமக்கள் முன்னிலையில் நடந்த திரைப்பட வெற்றி விழா இதுதான்!

வெளிநாடுகளில் எம்.ஜி.ஆர். எடுத்து வெளியிட்டு மிகப்பெரும் வெற்றிபெற்ற 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தில்தான் நடிகை லதா அறிமுகம். முதல் படத்திலேயே கதாநாயகி. அதிலும் உச்சநட்சத்திரமான எம்.ஜி.ஆருக்கு ஜோடி. ஆரம்பத்தில் எம்.ஜி.ஆர். என்ற ஆளுமை முன் நடிப்பதில் லதாவுக்கு உள்ளூர நடுக்கம். படத்தின் இயக்குநரும் எம்.ஜி.ஆர்தான். லதா நடித்த காட்சிகளில் அவர் எதிர்பார்த்த அளவுக்கு நடிக்கவில்லை. காரணம் கேட்டார் எம்.ஜி.ஆர்.

"சார், உங்கள் முன் நடிக்க எனக்கு தயக்கமாக இருக்கிறது" என்றார் லதா. இவ்வளவு ஏற்பாடுகளுக்குப் பிறகு, நடிக்கத் தயக்கம் என்றால் யாருக்குத்தான் கோபம் வராது? ஆனாலும், லதாவின் நிலையை எம்.ஜி.ஆர். புரிந்துகொண்டார்.

அவருக்கு தைரியம் ஏற்படுத்த எம்.ஜி.ஆர். சொன்னதைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்த லதா, இயல்பான நிலைக்கு வந்து நன்றாக நடிக்கத் தொடங்கிவிட்டார். லதாவின் தயக்கத்தை போக்குவதற்காக எம்.ஜி.ஆர். கேட்ட கேள்வி...

"பேசாமல் படத்தின் கதாநாயகனை மாத்திடலாமா?"

தொடரும்.





## காதலுக்கு ஓகே சொல்லும் கீர்த்தியின் பெற்றோர்

இன்னும் காதல் வரவில்லையென்றுள்ளார் கீர்த்தி சுரேஷ். இன்றைய திகதியில் இளைஞர்களின் கனவுக்கன்னியாக கீர்த்தி சுரேஷ்தான் விளங்குகிறார். தற்போதைய சினிமா என்றால் கவர்ச்சிதான். அதிலும் தெலுங்கு என்றால் சொல்லவும் தேவையில்லை. அப்படியான இடத்திலும் தாக்குப்பிடிக்கிறார். அண்மைய பேட்டியொன்றில் தனக்கு இன்னும் காதல் வரவில்லையென்றுள்ளார். சினிமாவில் தீவிர கவனம் செலுத்துவதால் காதல் விவகாரத்தில் கவனம் செலுத்தவில்லையென்றார். அப்படி காதல் வந்தாலும், வீட்டில் பிரச்சனை வராதாம். ஏனெனில் பெற்றோர் இருவரும் காதலித்து திருமணம் செய்தவர்கள் என்றுள்ளார்.



## கார் திருடும் நீச்சலுடை நாயகி!

ஒளிப்பதிவாளர் நட்டி என்கிற நட்ராஜ் நடித்துவரும் படம் போங்கு. ஹைடெக்காக கார்களை திருடுபவர்கள் பற்றிய கதை. இதில் நட்டி ஜோடி பாலிவுட் பால்கோவா ரூஹி சிங். ராஜஸ்தானை சேர்ந்த இவர் ஆரம்பத்தில் மொடலாக இருந்தவர். பின்னர் ஆங்கிலப்படமொன்றில் அறிமுகமானார். பின்னர் கலண்டர் கேர்ள்ஸ் உள்ளிட்ட இந்திப்படங்களில் நடித்தவர். போங்கு படத்தில் நட்டியின் காதலியாகவும், கார்களை திருடுபவராகவும் நடித்துள்ளார். கவர்ச்சிக்கும் குறை வைக்கவில்லையாம் கலண்டர் கேர்ள்ஸ் படத்தில் நீச்சலுடையில் நடித்தவர் என்றால் சும்மாவா?

## சல்மான், சாருக், அமீர் போலில்லை ரஜினி!

படம் வெற்றியடைந்தால் நாயகர்கள் இலாபத்தில் பங்கு கேட்பது வழக்கம். சல்மான், சாருக், அமீர் எல்லாம் இதில் கறாராக இருப்பார்களாம். படம் வெற்றியடைந்தால் தயாரிப்பாளர் வீட்டு கதவை அவர்களே போய் தட்டுவார்களாம். இதுதான் திரையுல வழமை. ஆனால் ரஜினி அப்படியல்ல. கபாலி தாறுமாறி வெற்றிபெற்றுள்ளது. தயாரிப்பாளரின் கல்லா கண்டபடி நிறைந்துவிட்டது. ஆனால் ரஜினி இன்னும் இலாபத்தில் பங்கு கேட்கவில்லையென்கிறது கபாலி வட்டாராம். இந்த தகவல் ரஜினி ரசிகர்களை நெகிழச் செய்துள்ளதாம்!

# டூரிங் டாக்கீஸ்



## இலியானாவிற்கு இல்லையாம்!

இலியானாவிற்கு கடவுள் நம்பிக்கை இல்லையாம். முன்னர் இருந்ததாம். இப்போது சுத்தமாக இல்லையாம். அதற்காக, கடவுள் நம்பிக்கைக்காரர்களிற்கு எதிரியும் கிடையாதாம். "இயற்கையை மீறிய சக்தியென்று உலகத்தில் எதுவம் கிடையாது. ஆற்றல்கள் மீதே எனக்கு நம்பிக்கை உள்ளது. நேர்மறை ஆற்றல்களும், எதிர்மறை ஆற்றல்களும் மனிதர்களிற்குள் கலந்துள்ளது. நேர்மறை ஆற்றல்கள் நல்லவற்றையும், எதிர்மறை ஆற்றல்கள் தீயவற்றையும் கொடுக்கின்றன. எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லாவிட்டாலும், பெற்றோருக்கு உள்ளது" என தத்துவம் பேசியுள்ளார்.



## முத்தத்திற்கு தயாரான இஷா

இரண்டு வருடங்களின் முன் தில்லுமுல்லு படத்தில் சிவா ஜோடியாக நடித்தவர் இஷா தல்வார். இப்பொழுது மீண்டும் ஒரு காதல் கதையில் நடிக்கிறார். முத்தக்காட்சியில் நடிக்கவும் அவர் தயாராக உள்ளாராம். மனித வாழ்க்கையில் முத்தமும் ஒரு அங்கம் என தத்துவம் வேறு பேசியிருக்கிறார். கதைக்கு தேவையென்றால் முத்தக்காட்சியிலும் நடிப்பேன். அதில் தப்பு கிடையாது என்றுள்ளார். மற்ற மொழிபடங்களில் நடித்ததால் தமிழில் இடைவெளி ஏற்பட்டுவிட்டதென்றும், இனிமேல் தமிழில் தொடர்ந்து நடிப்பேன் என்றும் கூறிள்ளார்.



## தல படம்- புதிய தகவல்

சத்யஜோதி பிலிம்ஸ் அஜித் படத்தை தயாரிப்பது இதுதான் முதல்முறை. "ஏகே 57" என்ற புதிய படத்தை தயாரிக்கிறார்கள். அஜித்தின் மனைவியாக காஜல், கூடவெ அக்ஷரா என பல வெரைட்டிகள் உள்ளது கூடுதல் எதிர்பார்ப்பு. படத்தின் கதையும் இலேசாக கசிந்துள்ளது. தமிழ்நாட்டில் நடக்கும் கொலைக்குற்றம் ஒன்றை ஐரோப்பா வரை சென்று விசாரிக்கும் இன்ரபோல் அதிகாரியாக அஜித் நடித்துள்ளார். கடந்த 7 மாதமாக ஓய்வில் இருந்து வந்த அஜித், இந்தப்படத்திற்காக தினமும் 56 மணிநேரம் உடற்பயிற்சி செய்தாராம். இதனால், அக்ஷன் காட்சிகளில் தல புகுந்து விளையாடுவார் என எதிர்பார்க்கலாம்.



## இது என்ன மாயமோ?: அமலாபால் ஜோடியின் நாடகமா?

அமலாபால் விஜய் விவாகரத்து நீதிமன்றம் வரை சென்றுவிட்டது. குடும்பநல நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் உள்ள வசனம் ஒன்றுதான் எல்லோரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. "எங்கள் இருவருக்கும் 2014 யூன் 10ம் திகதி திருமணம் நடந்தது. ஒரு ஆண்டிலேயே கருத்து வேறுபாடு ஏற்பட்டு 2015 மார்ச் 03ம் திகதியே பிரிந்து தனித்தனியாக வாழ்கிறோம்" என குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் கடந்த வருடம் நடந்த இரண்டு நிகழ்வுகளில் இருவரும் ஒன்றாக கலந்து கொண்டுள்ளனர். இவர்கள் பிரிந்ததாக குறிப்பிட்டதற்கு அடுத்த மாதமான ஏப்ரலில், விஜய் இயக்கிய இது என்ன மாயமோ திரைப்பட இசைவெளியீட்டில் அமலாபாலும் உற்சாகமாக கலந்து கொண்டிருந்தார். அடுத்ததாக கடந்த ஒகஸ்டில் பாக்கியராஜ் மகன் சாந்தனுவின் திருமண வரவேற்பு நடந்தது. அதிலும் இருவரும் மகிழ்ச்சியாக கலந்து கொண்டிருந்தனர். ஆக, தமது பிரிவு யாருக்கும் தெரியக்கூடாதென இருவரும் நாடகம் ஆடியுள்ளது தெளிவாகிறது.





# குழந்தைப் போராளி

தனிமையான ஓர் இடத்தில் இருந்து கொண்டு வாழைபழங்களைச் சாப்பிட்டபடி நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஏதோ உலகத்திற்கு வெளியே போய்விட்ட மாதிரி ஓர் அழகிய உணர்வு. இந்த மகிழ்வில் ஹெலன் அங்கு வந்ததை நான் கவனிக்கவில்லை. மின்னல் வானத்தில் இருந்து ஒரு கணத்தில் கீழிறங்குவது போல அவளங்கு நின்றுகொண்டிருந்தாள். சன்னமான குரலில் என் பெயரைக் கூப்பிட்டவள் "அங்குஎன்னசெய்துகொண்டிருக்கிறாய்?" எனக் கேட்டாள். நான் மறைப்பதற்கு எந்தப் பிரயத்தனமும் எடுக்காமல் "உனக்கும் ஒரு வாழைப்பழம் வேண்டுமா?" எனக் கேட்டேன்.

"அப்பாவிடம் சொல்லப் போகிறேன்" என்றாள் ஹெலன்.

ஹெலன் என்னைப் பயமுறுத்துகிறாள் என நினைத்து நான் சிரிக்கத் தொடங்கினேன். மீண்டும் சொன்னதையே அவள் திருப்பி திருப்பிச் சொல்ல உண்மையிலேயே அப்பாவிடம் சொல்லப் போகிறாள் என்பது உறுதியாயிற்று. அடிவானத்தில் இடி முழக்கம் கேட்டது. அல்லது அது ஒரு காட்டுமிருகத்தின் ஓலமாகவும் இருக்கலாம்.



"ஹெலன் நீயும் நானும் ஒரே தாயின் பிள்ளைகள், கொஞ்சம் கருணை காட்டு இதையெல்லாம் நீ அப்பாவிற்குச் சொல்லக் கூடாது"

கடைசியாக அவளின் கையைப் பிடித்துக் கொஞ்சினேன்.. என் கன்னங்களில் கண்ணீர் வழியத் தொடங்கியது. அவளோ அசைந்து கொடுக்கவில்லை. என்னை இறுகப் பிடித்தாள். ஒரு கையைச் சுவரில் பற்றிப் பிடிக்க முயற்சித்த என்னைக் காட்டிக்கொடுக்கும் சகோதரி மறுபக்கம் இழுக்க என் கையில் வலுவில்லாது போனது. ஹெலன் ஒரு கையில் என்னையும் மறு கையில் நான் சாப்பிடத் தொடங்கியிருந்த வாழைப்பழத்தையும் பிடித்திருந்தாள். இறுதியில் அப்பாவின் முன்னால் நின்றேன். சிற்றன்னை தனது மாய்மாலக் கண்ணீரை வடித்துக் கொண்டே தான் எவ்வளவு செய்தாலும் அதை யாரும் மதிப்பதில்லை எனத் தொடங்கி முடிவுறாமல் பொய்களையும் கண்ணீரையும் உதிர்த்துக்கொண்டிருந்தார். பொய்களும் கண்ணீரும் தொடர அப்பாவின் கோபமும் அதைபோல ஏறத் தொடங்கியது. நன்றாகக் கோபம் தலைக்கேறிய நிலையில் அப்பா என்னைத் தரையில் தள்ளிக் காலால் மிதித்தார். "வாழைப்பழத்தை ஏன் திருடினாய்?" என்று கேட்டுக் கேட்டு மிதித்தார். நான் வாயைத் திறக்கவேயில்லை. நான் ஏதாவது மறுமொழி சொல்ல அதைத் தொட்டு சிற்றன்னை அப்பாவின் கோபத்தை மேலும் ஏற்றிவிடக் கூடும். பேசாமலிருப்பதே உத்தமம். எனக்கு விழும் ஒவ்வொரு அடியையும் சிற்றன்னை வெகுவாக ரசித்துக் கொண்டிருந்தார். அப்பாவும் அதைக் கவனித்திருக்கக் கூடும். பார்வையை ஒருகணம் சிற்றன்னை பக்கம் திருப்பினார். பின்பும் அடிகள் தொடர்ந்து விழுந்தன. பின்பு அப்பா படுக்கையறைக்குச் சென்று தனது நீள அங்கியைக் கொண்டுவந்தார். எனது கட்டிலின் மேல் அதனை விரித்தார். இது வழமையாக நடப்பதுதான், அன்றிரவு நான் அந்த அங்கிக்கு மேல் தான் படுத்துத் தூங்கவேண்டும்.

எப்போதும் செய்ய முடியாதவைகளைச் செய்ய நிர்பந்திக்கப்படுவதற்காகவும் அவர் என்னைச் சோதித்துப் பார்ப்பதற்காவும் அழுதேன். மெதுவாக எனக்குள்ளே பாடிக்கொண்டேன். தூக்கத்தை விரட்ட வேண்டியிருந்தது. காலை எழுந்தபோது இருதயம் கழுத்துவரை வந்து விட்டது. அங்கி ஈரமாகத் தெரிந்தது. தொட்டுப்பார்தேன் குளிர்ந்தது. தொட்டவிரலை மூக்கினருகில் வைத்துப்பார்தேன். நேற்றைய தண்டனையின் இரத்தவாடை எழுந்தது. எங்காவது ஓடிப்போய்விடலாமா? காயங்கள் என் ஆன்மாவிலும் உடலிலும் மீண்டும் மீண்டும் திறந்து கொண்டன.

ஹெலனை வரவேற்பறையில் பார்த்ததும் வெறுப்பும் ஆத்திரமும் என்னுள் தீயாக எரியத்தொடங்கியது. வெளியே அப்பாவின் வருகைக்காகக் காத்திருக்கத் தொடங்கினேன். நீண்ட நேரக் காத்திருப்பிற்குப் பின் வெளியே வந்த அவரிடம் ஒன்றுமே சொல்லாது அங்கியை நீட்டினேன். பல நிமிடங்களாகக் கையும் களவுமாகப் பிடிபட்ட திருடனை போல அவர் கண்களைத் தாழ்த்தித் தரையைப் பார்த்துக்கொண்டு நின்றார். கடைசியில் யாரையாவது கூப்பிட்டுப் பிரம்பை எடுத்து வரத்தான் சொல்லப் போகிறார். நான் எனது பார்வையைத் தாழ்த்தவே இல்லை. அவரது கண்களை நேராகப் பார்த்தேன். என் கண்களில் கண்ணீர் துளிகளாக உருண்டன. நான் அவரைக் கோபப்படுத்த முயற்சிக்கவில்லை. ஆனால் அப்பா என்னை ஒரு குழந்தையாகப் பார்க்கவும் ஒரு குழந்தையாக ஏற்கவும் வேண்டுமென்றும், அவர் என்ன செய்கின்றார் என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டுமென்றும் அவருக்கு மௌனமாக உணர்த்த முயன்றேன். அவரின் கண்களில் குற்ற உணர்வையும் வெட்கத்தையும் நான் கண்டேன். அவருக்கு அப்போது அழுவதா சிரிப்பதா என்று தெரியாது இருந்திருக்கவேண்டும். அதனால் தான் அப்பா தன் கண்களை உருட்டிக் கொண்டிருக்கிறாரோ? அவரது கண்களில் என்ன செய்வதென்று அறியாத குழப்ப உணர்வு மறைந்து மறுபடியும் கோபம் தெரியும்வரை என் கண்களை அவரின் கண்களிலிருந்து நான் எடுக்கவே இல்லை. நான் சொன்ன சேதி அவருக்கு விளங்கியிருக்குமா? அல்லது உறைந்திருந்த என் இரத்தம் அவருக்கு அருவருப்பை ஊட்டியிருக்குமா?

அன்று மதியம் கழிந்த பின் நான் ஹெலனையும் மாஹியையும் வழமையாக நாங்கள் சந்திக்குமிடத்திற்கு வரச் சொன்னேன். மாஹி ஹெலனுக்குப் புரியவைக்க முயன்றாள்: "நாம் எதைத்தான் செய்தாலும் நாங்கள் ஒருபோதும் சிற்றன்னையின் ஆழமான வெறுப்பிலிருந்து தப்பிக்கப் போவதில்லை. நாமெல்லோருமே ஒரே தோணியில் தான் பயணம் செய்கின்றோம். நாம் ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்தால் அது சிற்றன்னைக்குத்தான் மகிழ்வைக் கொடுக்கும். அவள் எங்களைப் பார்த்துக் கேலியாகச் சிரிக்கத்தான் அது உதவும்".

ஹெலன் அழத் தொடங்கினாள். நாங்கள் அவளை விட்டுவிட்டு வத்தாழைக் கிழங்குப் பாத்திகளைத் தேடிக் கிழங்குகள் பிடுங்கச் சென்றோம். சிறிது நேரத்தில் அங்கு வந்த ஹெலன் இனித்தான் ஒருவரையும் காட்டிக் கொடுக்கப்போவதில்லை என எங்களுக்குச் சத்தியங்கள் செய்து கொடுத்தாள்.

தொடரும்...




▶ அரசியல்கைதிகளை விடுவிக்க கோரி யாழ்ப்பாணத்தில் கடந்தவாரம் ஆர்ப்பாட்டமொன்று நடந்தது.



# வைத்தியரிடம் கேளுங்கள்

கந்தையா சோதிதாசன்
drsothithas@gmail.com.
0776284687






**நிலலோஜினி (30), சுழிபுரம்.**

**கேள்வி:** எனக்கு நீண்டநாட்களாக வயிற்று எரிவு இருக்கிறது. வயிற்றுப்புண்ணாக இருக்குமா? வயிற்றுப்புண் ஏன் ஏற்படுகின்றது. அதன் அறிகுறிகள் என்ன?

**பதில்:** சரியான வேளைகளில் உணவு எடுக்காமை உணவுவேளைகளில் அதிகம் தேநீர் அருந்துதல் தொடர்ச்சியாக மது மற்றும் சிகரட் பாவனை ஊறுகாய் போன்ற காரமான உணவுகளை சாப்பிடுவது அஸ்பிறின் போன்ற சில ஆங்கில மருந்து களின் தொடர்ச்சியான பாவனை போன்ற காரணங்களினால் ஏற்படுகின்றது. வயிற்று வலி, வயிற்று எரிவு, நெஞ்செரிவு போன்ற சாதாரண அறிகுறிகள் வாந்தியில் இரத்தம் கலந்து வெளியேறுவதுடன் மலத்துடன் இரத்தம் வெளியேறல் வாந்தி உடல் எடை குறைவது போன்ற அறிகுறிகள் நோயின் தீவிரத் தன்மையைக் காட்டும். சித்த மருத்து வத்தில் இதற்குப் பல மருந்துகள் சொல்லப் படுகின்றது. பாஸ்கரலவண சூரணம், ஹிங்குல்ஷ்தாதி சூரணம், பஞ்சகதிபாகினி சூரணம் போன்றவற்றை வைத்தியரின் ஆலோசனையுடன் எடுக்கலாம்.

**செபஸ்ரியன் (40), மண்டைதீவு**

**கேள்வி:** மருந்து இல்லாமல் ஆண்மைக் குறைவை நீக்கக் கூடிய சித்த மருத்துவ முறைகள் இருக்கிறதா?


**பதில்:** ஆண் தன்மையை அதிகரிக்கும் சக்தி தேனுக்கும், பேரீச்சம் பழத்திற்கும், இருக் கின்றது. இதனைப் பயன்படுத்தி இயற்கை யாகவே உங்கள் ஆண்தன்மையைக் கூட்டிக் கொள்ளலாம். பேரீச்சம் பழங்களை ஒரு வாயகன்ற பாத்திரத்தில் இட்டு அதனுடன் தேன் கலந்து 3 மணிநேரம் வெயிலில் வைத்து எடுக்கவும். இரவு உணவின் பின் 3 பேரீச்சம் பழங்களை பசும்பாலுடன் அருந்தி வாருங்கள். இது உங்கள் ஆண்மை சக்தியை அதிகரிக்கும். ஆண்களின் விந்து அணு வீரியத்திற்கு காரண மான மூலக்கூறு தக்காளியில் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே நீங்கள் தக்காளி சூப் செய்தும் அருந்தலாம்.

**தேன்மொழி (30), நுணாவில்**

**கேள்வி:** ஆறுமாதம் கர்ப்பமாக இருக்கி றேன். நாரி, இடுப்பு, முதுகுப் பகுதிகளில் பிடிப்பு ஏற்படுகின்றது. எழுந்து நடமாடக் கஸ்டப்படுகின்றேன். என்ன செய்யலாம்.

**பதில்:** கற்பகாலத்தில் இப்படியான அசௌகரியங்கள் ஏற்படுவது இயல்பானது தான். இருந்தாலும் கடினமான மருந்துகள் அல்லாத சிகிச்சை முறையைப் மேற் கொள் ளலாம். பாவட்டை, நொச்சி, ஆமணக்கு, இலைகள் தவிர்ந்த இளம் சூடான நீரில் குளிப்பது ஓர் சிறந்த முறையாகும். இதோடு பொட்டாசியம், கல்சியம் சேர்ந்த உணவுகள் இத்தகைய பிடிப்புக்கள் ஏற்படுவதை தவிர்க் கும். எனவே வாழைப்பழம், பச்சைக்கீரை வகைகள், செத்தலி போன்ற உணவுகளை அதிகமாக சேர்த்துக் கொள்ளுங்கள்.





**தயாபரன் (28), நவாலி**

**கேள்வி:** காலை நித்திரையால் எழும்பும் போது கண் எரிச்சல் இருக்கின்றது. அதோடு லேசான தலைச்சுற்றும் இருக்கின்றது. பித்தம் அதிகரிப்பதனால் இப்படி ஏற்படுமா? மருந்து சொல்லுங்கள்.

**பதில்:** பித்தம் நீங்குவதற்கு தலைக்கு எண் ணெய் தேய்த்துக் குளித்தல் சிறந்த பரிகார மாகும். சீரகம் கொத்தமல்லி போன்றவற்றை சிறிதளவு எடுத்து நல்லெண்ணையில் இட்டு சிரகம் சிவந்து வரும் வரை காய்ச்சி ஆறவிட்டு பின் தலைக்கு வைத்து 1 மணி நேரம் கழித்து சியாக்காய் தேய்த்து குளித்து வர வேண்டும். இந்த எண்ணெய் குளியல் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கும் சிறந்ததாகும்.

**அனோஜன் (28), மாதகல்**

**கேள்வி:** எனக்கு அடிக்கடி தோல் தடித்து அலர்ஜி ஏற்படுகின்றது. இது ஏன் ஏற்படு கின்றது.

**பதில்:** எமது உடலில் நோய் எதிர்ப்பு அமைப்புக்கள் காணப்படுகின்றது. உடலில் ஒவ்வாத பொருள் நுளையும் போது நோய் எதிர்ப்பு அமைப்புக்கள் அதனை எதிர்த்துப் போராட உயிர் இரசாயனங்களை உண்டாக்குகின்றன. இதன் தாக்கமே அலர்ஜியாக வெளிப்படுகிறது. தோல் அரிப்பு, தடிப்பு, நீர்கசிவுடன் கூடிய புண்கள், வாந்தி, வயிற்றுப் போக்கு, மூக்கடைப்பு, தும்மல், தொண்டை அரிப்பு, ஆஸ்மா போன்ற நோய் அறிகுறிகள் ஏற்படலாம். காற்றில் உள்ள தூசுக்கள், மகரந்த மணிகள், றால், நண்டு, போன்ற சிலவகைப் புரத உணவுகள், அஸ்பிறின் போன்ற சில ஆங்கில மருந்துகள், உடலில் அலர்ஜி என்கிற ஒவ்வாமையை தோற்றுவிக்கலாம்.

**துவஷி (24), அரியாலை**

**கேள்வி:** எனக்கு சவர்க்காரங்கள் ஒத்துவரு தில்லை. குளியல் பொடி செய்வதற்கான முறை ஒன்று தருவீர்களா?

**பதில்:** கஸ்தூரி மஞ்சள், வெட்டிவேர், சந்தனத்தூள், கார்போக அரிசி, கோரைக் கிழங்கு, ஏலம், பாசிப்பயறு, என்பவற்றை வாங்கி மாவாக இடித்து வைத்துக் கொண்டு குளிக்கும் போது உடலில் பூசிக் குளிக்கவும். இது உடலுக்கு வாசனையை தருவதுடன் சொறி, சிரங்கு, தேமல், என்பவற்றுக்கு உடனடி நிவாரணியாக மாறுகிறது. ●




## சீனக் கிளி சோசியம்

கிளி சோசிய ரகசியம் என்று யாராவது புத்தகம் எழுதினால் தேவலை! சமீபத்தில் சீனத்தின் யாஞ்சி நகரில் உலவிக்கொண்டிருக்கும் போது இந்தக் கிளி சோசியத்தைப் பார்த்தேன். இது எப்படி வேலை செய்கிறது என்று கேட்டேன். சோசியர் ஒரு பெரிய அட்டவணையை விரித்து வைத்திருக்கிறார். அதில் வருடம், மாதம் இருக்கிறது. அருகில் கட்டங்களை மறைக்கக்கூடிய அளவில் பல அட்டைகள் உள்ளன. அந்த ட்டைகளில் பிறந்த தேதியும், மாதமும் உள்ளன.

நாம் சோசியருக்குக் காட்டாமல் வருடம், மாதமுள்ள கட்டத்தை பிறந்த தேதி (உதாரணமாக நவம்பர் 5லிருந்து 10 வரை என்று எழுதியிருக்கும் அட்டையை) உள்ள அட்டையால் மூடிவிட வேண்டும். உடனே சோசியர் கிளியைக் கூப்பிட்டு இவர் பிறந்த திரியைச் சொல்லி, பலனைக் காட்டும் அட்டையை எடு என்கிறார். அது ஒரு அட்டையை உருவி எடுக்கிறது. எடுத்ததால் மிகச்சரியாக நம் பிறந்த தேதியைச் சொல்லி, நம்மைப் பற்றி சொல்லி நமக்கான பலனைச் சொல்லிவிடுகிறது. அது எப்படி என்று தெரியவில்லை

பேஸ்புக்கில் பதிவிட்டவர்: www.facebook.com/narayanan.kanna ●

# வியாழமாற்றம்
## பன்னிரண்டு ராசிக்கும் கொடுக்கும் பலன்கள் - 2

சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392



### 01. சிம்மராசி

சிம்மராசிக்காரர்களுக்கு இரண்டாம்நிலையில் அமைந்து சாதகமான பலன்களை அனுபவிக்கச் செய்யும். ஒருவரது பிறப்பு சாதக அமைப்பில் 2,4,5,9,10 ஆம் இடங்களில் குரு காணப்பட்டு சிம்ம ராசியில் பிறந்திருப்பின் இந்த வியாழ மாற்றம் மிகச் சிறப்பான பலன்களைக் கொடுக்கும் நிதி நிலை, குடும்பவாக்கு, வசீகரம், கௌரவம், புகழ், அந்தஸ்து என்பவை பாதிப்பில்லாத நிலை பெறும். முன்னைய கடன் நிலுவைகள் வந்து சேரும். அசையும், அசையாத சொத்துக்கள் சேரும் நிலை காட்டும். குடும்பம், மனைவி, பிள்ளைகள் உறவு பாதிப்பில்லாது தொடரும். கல்வி நிலையில் ஈடுபட்டுள்ளவர்கள் நல்ல தேர்ச்சி நிலை பெறுவார்.

நோய், பிணி குறைதல், குடும்பப் பகைகள் இல்லாது போதல், பிரிந்தவர்கள் ஒன்று சேரும் நிலை காணுதல், காதலர்கள் மகிழ்ச்சி நிலையில் காணப்படுவார். தெய்வ வழிபாடும், குல தெய்வ வழிபாடும் மேலோங்கும். கலை, கலாச்சாரம் அழகியல் என்பன நல்ல நிலை காட்டிவரும். குருவின் 5 ஆம் பார்வை இந்த இராசிக்காரருக்கு 6 ஆம் வீடாக இருப்பது எதிரி பகையாளிகளை வெற்றி கொள்ளுதல், கடன் பளுவிலிருந்து மீளுதல் போன்ற பலன்களைக் கொடுக்கும். பிரயாண அலைச்சல் இடையிடையே காணப் படும்.

#### மக நட்சத்திரம்.

தேகநலன், கல்வி, பணப்புழக்கம், குடும்ப நலன் என்பன நன்றாயமையும். சுப கருமங்கள் நடந்தேறும், ஆன்மீக ஈடுபாடு அதிகம் தரும், பெரியோர், அதிகாரிகள் ஆதரவு உண்டு. செய்தொழில் பாதிப்பில்லாத வகையில் தொடரும். புதிய புதிய முயற்சிகள் ஆரம்பிக்கும் நோக்கம் இருப்பின் சோதிட ஆலோசனை வழிகாட்டலில் பாதகமில்லாத நாட்கள், காலத்தை அனுசரித்து செய்யவும். ராகு, கேது வழிபாடு செய்வது நல்லதாகும்.

#### பூர நட்சத்திரம்

தொழில் நிலையில் பெரிய புள்ளிகள் என வர்ணிக்கப்படுவோரின் தொடர்புகள் கிட்டும். தேகசுகம், காணி, மனை, வாகனம், மற்றும் விலை மதிப்பு அதிகம் உள்ள பொருட்கள் சேரும் நிலை காட்டும். பெண்கள் மூலம் நல்ல ஆதரவு கிடைக்கும். குல தெய்வ வழிபாடு தான தர்மப் பணிகளும் நல்லது.

#### உத்தரம் 1 ஆம் பாகம்.

செல்வம், செல்வாக்கு, புகழ்சேரும். சில கருமம் அதிர்ஷ்ட வசமான நிலையில் கைகூடி வரும். மனதில் எண்ணியதை நிறைவாக்க லாம். நிலையான சொத்து, சுபகருமம், நீண்ட தூரப்பயணம், தாய், தந்தை வழி மூதாதையர் சொத்து சேர்தல், மற்றும் அரச அதிகாரிகள் ஆதரவு கிட்டும்.

### 02. கன்னிராசி

ஜென்ம குரு காலம் இதுவாகும். இதனை நல்லது எனக் கூற முடியாது. ஆனாலும் திரிகோண நிலையில் பார்வை செய்வதும் கேந்திர நிலையில் பார்வை செய்வதும் ஏற்றம், இறக்கம், நன்மை, தீமை, லாபம், நஸ்டம், எனப் பலன்களை மாறி மாறிக் காட்டும். அதிக பணவிரயம், கடன்படும் நிலை, சொத்து விற்று இன்னொன்றை வாங்குதல் போன்ற நிலை தரும். திருமணம் ஒரு சிலருக்குக் கைகூடலாம். இன்னும் சிலருக்குக் குழந்தைப் பாக்கியம் தடையாய் அமையலாம். கல்வி முயற்சியுள்ளோர் அதிக சிரத்தை காட்டினால் முன்னேறலாம். கருத்து பேதங்களால் மனக்கவலை உண்டாகும். மன நிம்மதியுடன் தொழில் செய்ய முடியாத நிலையும் தரும்.

குரு 5 ஆம் பார்வையாய் இராசிக்கு 5 ஆம் வீட்டை நோக்குவதும், 7 ஆம் பார்வையாய் இராசிக்கு 7 ஆம் வீட்டை நோக்குவதும் 9 ஆம் பார்வையால் இராசிக்கு 9 ஆம் வீட்டை நோக்குவதும் திருமண விவாகாரம், தொழில், பூர்வீகச் சொத்து என்பன சேரவும் நீண்டநாள் தடங்கலாய் இருந்த பிரச்சனைக்குத் தீர்வு கிடைக்கவும் வழக்குகள், பிணக்குகள், நெருக்கடிகள் குறையவும், அரைகுறை வேலைகள் முழுமை பெறவும் பணப்புழக்கம் கணிசமான நிலையை எட்டவும் பலன்கள் உண்டாகும்.

#### உத்தரம் 2,3,4 ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்.

எந்தவொரு கருமத்திலும் வரக் கூடிய இடர்களை களையப் பெற்ற சக்தியினைப் பெற்று பாதகமான நிலைகளை இல்லாமல் போக்குவீர்கள். சூரியனைக் கண்டால் பனி நீங்குவது இயல்பு. இதனால் உங்களுக்கு சாதகமாக்கி நடப்பீர்கள். புதிதாக எதையும் தொடங்குவதைத் தள்ளிப் போடுவது நல்லது. தெட்சணாமூர்த்தி தரிசனம், குரு கிரக வழிபாடு, தானம், தர்மம், நன்மைக்கு உதவும்.

#### அத்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்.

தேகபலம், தேகசுகம் உண்டு. மனக்குழப்ப நிலை நீங்கப் பெறுதல் காட்டும். பலரது ஆதரவு உதவி நாடினால் கிடைக்கும் நிலை தரும். சிலருக்கு கடல் கடந்த பயணத்திற்கு வழி பிறக்கும். உணவுப்பொருள், கடல் வளம், தோட்டம், பத்திரிகைத்துறை இவற்றில் ஈடுபட்டுள்ளவர்கள் பயன் பெறுவார். பாதகமான காலம் எது என்பதை உணர்ந்து கொண்டு புதிய முயற்சிகளை முற்றாகத் தவிர்க்கவும்.

#### சித்திரை 1 ஆம், 2 ஆம் பாகம்.

எதையும் சமாளிக்கும் மனோபலம் பெறுவீர்கள், இனசனபந்து உறவால் சில நன்மைகள் கிடைக்கும். தூரதேச உறவுகளைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். பணக் கொடுக்கல் வாங்கல் திருப்தியாய் அமையும். தானியவகை, மருந்துப் பொருள், படப்பிடிப்பு, வாகன இயந்திரம், மெக்கானிக் தொழில், இவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் சாதகமான நல்ல பலன்களைப் பெறுவார். பாதகமான காலம் எது என அறிந்து கொண்டு எச்சரிக்கை உற்சாகம், விளிப்புடன் இருக்கவும்.

### 03. துலாராசி.

துலாராசிக்கு 12 ஆம் நிலையில் குரு பகவான் வந்துள்ளார். விவேகமாக, சமயோசிதமாக, தெய்வவழிபாட்டு ஈடுபாட்டுடன் செயல்களில் அக்கறை கொண்டால் ஓரளவு நிம்மதியும் ஆறுதலும் தரும். சில கருமங்களுக்காக கடன்படும் நிலையும் காணப்படும். எவ்வாறாயினும் கடன்களை அடைக்கக் கூடிய நிலையும் பெறுவீர்கள். இதற்கு அயராது தொழிற்படும் நிலையும் காணப்படும். கல்வி முயற்சிகள் நன்மை தரும். சிறப்புத் தேர்ச்சி பெறுவது கடினமாகும். கல்வி முயற்சிக்காக பலரது ஆதரவுகள், உதவிகள் தேவைப்படலாம், அவை கிடைக்கவும் பலன் அமையும், சிலருக்கு நோய், பிணி அதிகம் தரும், இன்னும் சிலருக்கு அறுவை சிகிச்சை செய்யும் நிலையும் வரலாம்.

குரு பார்வையால் இராசிக்கு 4 ஆம் வீட்டினை நோக்குவதும் 7 ஆம் பார்வையால் இராசிக்கு 6 ஆம் வீட்டை நோக்குவதும், 9 ஆம் பார்வையால் 8 ஆம் வீட்டை நோக்குவதும், தாயாரின் உடல்நிலை சீர் பெறும். ஒரு சிலருக்கு தாய் வழி மூலமான சொத்து சேரும். சிலருக்கு வாகனம் சேரும் பலன் தரும். சிலர் இடமாறும் நிலையைப் பெறுவார்கள். எதிரி, பகையாளி தொல்லைகள் நீங்கும்.

#### சித்திரை 3 ஆம் 4 ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்.

பல விதமான கஸ்டங்களை அனுபவித்தே சாதகமான சில பலன்களை அனுபவிக்க முடியும். மதிநுட்பம், ஆட்பலம் அறிந்து வியா பாரம் சம்பந்தப்படும் முயற்சிகள் செய்தால் சாதக நிலை உண்டு. காணி, நிலம் கிடைக்கும், ஒப்பந்த வேலைகள் அற்ப சொற்ப லாபம் தரும், செய்து வரும் தொழிலைத் தொடர்வதும் புதிய முயற்சிகள், முதலீடுகள் குறைந்தளவில் செய்வதும் நிம்மதியும், ஆறுதலும் தரும். இரவு பகல் பாராது உழைக்கும் நிலை சில சாதகமான முடிவுகளைப் பெற வைக்கும்.

#### சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்.

அனுகூலமான பலன்களை அனுபவிப்பது கஸ்டமே. ராகு 11 இல் இருப்பது ஓரளவு ஆறுதல் தரும். தேக ஆரோக்கியம் படிப்படி யாக சீர்பெறும். சில எதிர்பார்த்த கருமங்கள் தாமதமாகவேனும் சீர் நிலை பெறும். வியாபார முயற்சிகளில் அழகியல், ஏற்றுமதி, திருத்தவேலை, பெயின்ற் வகைகள், போக்குவரத்து வாகனம், சம்பந்தப்படுவோர் நன்மை பெறுவார். சோர்வில்லாது சாதனை புரியும் நிலையும் உண்டு. விவேகம், பத்தி, நல்ல மனிதர்கள் தொடர்பு, மற்றும் பணவிரயங்கள் நல்ல நிலையை நோக்கி உங்களை செயற்பட வைக்கும்.

#### விசாகம் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்.

வங்கி நடவடிக்கைகள் பாதிப்பு பெறும். வட்டி வாங்குவதிலும் சிரமங்களை எதிர் கொள்ள நேரிடும். தேக ஆரோக்கியம் நன்று, பெரிய மனிதர்கள் ஆதரவு, தானிய உற்பத்தி நல்ல நிலை மற்றும் வாழ்க்கை சுப ஜீவனம் என்பவையும் படிப்படியாக சீர்மை பெறும். பெண்களுக்கு காதல் விவகாரங்களால் சில பாதிப்பு நிலை வரலாம். மற்றும் நிதி, நீதி கற்றல் கற்பித்தல், தொலைத்தொடர்பு நிலைகளில் நல்ல அவதானம் அவசியப்படும். பிராமணருக்குத் தானமும், ஏழைகளுக்குத் தர்மமும் போட வேண்டும்.

### 04. விருச்சிகராசி

உங்களது இராசிக்கு 11 ஆம் நிலைக்கு குரு பகவான் மாற்றம் பெற்றுள்ளார். 2,5,7,9,11 ஆம் இடங்களில் எங்கு இருந்தாலும் சாதக மான நன்மையான விசேடமான பலன் களைத் தருவார். 11 ஆம் நிலையில் உள்ளது மிகவும் சிறப்புப் பலன்களே ஆகும். தொட்ட தெல்லாம் துலங்கும். தூர இடம், தூரதேசத் தில் உள்ளவர்களால் பல நன்மைகளை எதிர் கொள்ளலாம். இதுவரை இருந்துவந்த பணப்புழக்கம், வங்கிநிலைகள், என்பவற்றில் நல்ல சீர் நிலை பெறும். காணி, பூமி, மனை, கட்டிடம் சம்பந்தமாய் நல்ல பெறுபேறுகள் அடையலாம். கல்வி நிலை நல்ல முன்னேற்றம் தரும்.

தொழில்நுட்பக் கல்வியானால் பல நன்மைகள் பெறலாம். வெளிநாட்டுத் தொடர்புகளுக்கு நன்று. கௌரவம், புகழ் பேணப்படும். தேக ஆரோக்கியம் படிப்படியாய் நல்ல நிலைக்கு வரும். குடும்பசுகம் பாதிப்பில்லாது தொடரும். காதல் விவகாரம் உட்பட நல்ல கல்யாண நிலை பெறுபவர்கள் எல்லோரும் திருப்தியான சந்தோச மனநிலை கொள்வார். தொழில், விவசாயம், கலை, அரசியல், விவகாரங்களில் உள்ளவர்கள் லாபம், நன்மை, சிறப்பு, பொறுப்புகள், என்ற நிலையை அடைவார்கள்.

குரு 5 ஆம் பார்வையால் இராசிக்கு 3 ஆம் வீட்டை நோக்குவதும், 7 ஆம் பார்வையால் 5 ஆம் வீட்டை நோக்குவதும், 9 ஆம் பார்வையால் 7 ஆம் வீட்டை நோக்குவதும், வெளிநாடு செல்லும் முயற்சிகள் மனை

தொடர்ச்சி 19-ம் பக்கம்




# கைதவறிப் போகும் காலம்

நட்சத்திரா ஐயாத்துரை

வந்தாரை வரவேற்பது தமிழ் பண்பாடு என்கிறோம். தமிழ் பண்பாட்டின் அடையாளம் யாழ்ப்பாணம் என்கிறார்கள். அப்படி சொல்வதில் யாழ்ப்பாணத்தாருக்கு ஒரு பெருமை. சைவமும் தமிழும் ஒரு பக்கத்தால் பெருக்கெடுத்து ஓடுகிறது, தமிழ் கலாசாரம் இன்னொரு பக்கத்தால் பெருக்கெடுத்து ஓடுகிறது என்பதுதான் நம்மவர்களின் கருத்து. நம்மவர்கள் என்று சொன்னது யாழ்ப்பாண சமூகத்தை.

தமிழர்களை பொறுத்தவரை சமூகம் என்பது என்ன?

உண்மையான அர்த்தத்தில் சமூகம் என்பது எல்லா மனிதர்களாலும் ஆனது. ஆனால், தமிழர்களை பொறுத்தவரை அப்படியல்ல. அது படித்தவர்களால், உயர்பதவிகளில் இருப்பவர்களால் மட்டும் ஆனது. சமூகத்தின் முடிவுகள் என எடுக்கப்படுபவை எல்லாம் இந்தவகையானவர்களால் எடுக்கப் படுபவைதான். சமூகத்தில் உள்ள கடைநிலையினர் அதில் கலந்து கொள்வதில்லை. அவர்களின் விருப்பங்கள் பிரதிபலிக்கப்படுவதில்லை.

நீண்டபோராட்ட வரலாற்றையுடைய தமிழர்கள், பல்வேறு காலகட்டங்களிலும் சிவில் சமூகம் என்ற பெயரில் ஒன்றை உருவாக்குவார்கள். அண்மையிலும் அந்த பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கினார்கள். அப்படியொரு அமைப்பு இருப்பது எத்தனை பேருக்கு தெரியும்?

வைத்தியர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், விரிவுரையாளர்கள் என்பது போன்ற தராதரமுடையவர்கள்தான் அதில் அங்கம் வகிப்பார்கள். நல்ல அரச சம்பளம், பாதுகாப்பான வாழ்க்கை, பிள்ளைகள் ஐரோப்பிய, அமெரிக்க பல்கலைகழகங்களில் படிப்பு, இவர்கள் இங்கிருந்து ஓய்வுநேர புரட்சி. கொடுத்து வைத்த வாழ்க்கை. இந்தவகையானவர்களின் "சிவில் சமூக" முடிவுகள் ஒருபோதும் கடைநிலை மக்களின் நாடித்துடிப்பை அறிந்ததல்ல. அதாவது தமிழ் சிவில் சமூகமென்பது எல்லா தரப்பு மக்களின் கருத்துக்களையும் கொண்டதல்ல. அதனால்த்தால் தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள் குறிப்பிடத்தக்க வெற்றிகளை பெறவில்லை.

சமூகம் என்பது தமிழர்களின் அர்த்தத்தில் குறிப்பிட்ட சில அரசஉத்தியோகங்களில் உள்ள நாலுபேரின் சங்கமம். அவர்கள் உற்பத்தி செய்யும் கருத்து சரியானதா?

அண்மையில் ஒரு நண்பியுடன் யாழ் போதனா வைத்தியசாலைக்கு சென்றேன். சிகிச்சை முடிந்து வெளியில் வரும்போது நண்பி சொன்னாள் தமிழ் பண்பாட்டிற்கு இழுக்கு என்று. அவள் நகைச்சுவையாகத்தான் சொன்னாள். ஆனால் அர்த்தசெறிவுடன்.

தமிழ்சூழலில் மருத்துவத்துறை நோயாளி உறவென்பது ஆண்டான் அடிமை பாரம் பரியத்தை ஒத்ததாகத்தான் உள்ளது. வைத்திய சாலைகளிற்கு சிகிச்சைபெற செல்லும் பெரும் பாலானவர்கள் ஏதோ ஒரு அதிருப்தி யுடன்தான் திரும்புகிறார்கள். கடைநிலை ஊழியரில் இருந்து வைத்தியநிபுணர்கள் வரை அனைவருமே மக்களுடன் எரிந்துதான் விழுகிறார்கள். நோயாளி வைத்தியத்துறை உறவென்பது அதளபாதாளத்தில் உள்ளது. நோயாளிகளுடன் எப்படி உரையாடுவதென்பது மருத்துவத்துறையிலுள்ள மிகமிக பெரும்பான்மையினருக்கு தெரியாது. அவர்கள் நினைக்கிறார்கள், திருப்பி கேளாமல் சொல்வதை மட்டும் கேட்டுச் செல்ல வேண்டுமென. நான் சொல்வதை நம்பவில்லையென்றால், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்களை ஒருமுறை சந்தித்து பேசுங்கள். தமக்குள்ள வருத்தம் என்ன, என்னவகையான சிகிச்சை வழங்கப்படுகிறது, எதிர்காலத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது அவர்களில் பெரும்பாலானவர்களிற்கு தெரியாது. அறிந்துகொள்ள துடித்தாலும், அறிய மார்க்கம் இல்லை.

சோதித்து பார்க்க வேண்டுமென்றால், பரபரப்பான ஏதாவதொரு வைத்திய சாலைக்கு சென்று பாருங்கள். அங்குள்ள தாதிகள், சிற்றூழியர்கள், வைத்தியர்களிடம் எதையாவது கேட்டு பாருங்கள். எத்தனைபேர் உங்களின் சந்தேகம் தீர்க்கிறார்கள். எத்தனை பேர் "அங்கால போம்ஞ் யாரும்மை இதில வரச்சொன்னது" வகை பதில் தருகிறார்கள் என.

மாணவர்களாக இருக்கும்போது தனியே நோய்களையும், அதற்கான பரிகாரங்களையும் மட்டும் கற்பிக்கப்பட்டவர்கள் அவர்கள். வளர்ச்சியடைந்த நாடுகளில் நோயாளி வைத்தியர் உறவு உயர்மட்டத்தில் காணப்படுகிறது. அதற்கான மனநிலையை உருவாக்குவதென்பது சாதாரண விடயம் கிடையாது.

நோயாளிக்கு வைத்தியம் செய்வது வைத்தியசாலைகளின் கடமை. அதற்காகத்தான் அரசு அவர்களிற்கு சம்பளம் வழங்குகிறது. சிகிச்சைபெற செல்லும் ஒவ்வொருவருக்கும் அதை முழுமையாக பெற உரிமையுண்டு. வைத்தியசாலைகளில் தமக்குள்ள உரிமைகள் பற்றி மக்கள் முழுமையாக அறிந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அண்மையில் மருத்துவம் படிக்கும் ஒரு நண்பி சொன்னாள் நோயாளிகளுடன் சிறப்பான தொடர்பாடலை வைத்தியசாலையிலுள்ளவர்கள் மேற்கொள்ளாதது மிகப் பெரிய குறைப்பாடு. நோயாளர்களுடன் எப்படி அணுகுவது, நோயாளி வைத்தியர் உறவு பற்றிய அறிவூட்டல் முயற்சிகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக.

வந்தாரை வரவேற்கும் கலாசாரம் உள்ள பூமியில், வந்தாரை எப்படி வரவேற்பது என்பதை சொல்லிக் கொடுக்க வேண்டியுள்ளதென்பது எவ்வளவு பெரிய கொடுமை!

தொடர்ச்சி 18-ம் பக்கம்

வாங்குதல், மனை கட்டுதல், பலரது ஆதரவு, உதவி கிடைத்தல், பிள்ளைகளின் தொழில் நிலை, விவகாரநிலை, வழக்கு, பிணக்குகளில் வெற்றி கிட்டுதல், தலையாத்திரை செல்லல், கல்வி மற்றும் துறைகளில் திறமைகளை வெளிப் படுத்துதல், மற்றும் சுபகரும நிகழ்வுகள் நடந்தேறவும் பலன் தருவார் குருபகவான்.

**விசாகம் 4 ஆம் பாதம் பிறந்தவர்கள்.**

பண விவகாரம், ஆலய தரிசனம், குழந்தை கிட்டுதல், விவாகம் கைகூடுதல், மற்றும் பணிகள் யாவும் நன்றாயமையும். அளவான முதலீடும், லாபமும் போதும், என்ற ரீதியில் காணப்படும். பாதகமான காலம் அறிந்து அதனைத் தவிர்க்கவும்.

**அனுஷ நட்சத்திரம் பிறந்தவர்கள்.**

பொங்கு சனி நிலையில் உள்ளதால் குரு பகவானால் நன்மையுண்டு. தேக ஆரோக்கியம் நல்ல நிலை பெறும். சொத்து விவகாரங்களில் அணுகுமுறையைப் பொறுத்து நல்ல பலனமையும். முதலீடுகள் அளவாகச் செய்து நன்மை பெறுக.

**கேட்டை நட்சத்திரம் பிறந்தவர்கள்.**

விவேகம் வேகம், புத்தி சாதுரியம், எல்லாம் செய் கருமங்களில் அவசியப்படும். பணம், நகை, சொத்து, மனை, வாகனம் இவை எல்லாம் படிப்படியாகக் கிடைக்கப் பெறும்.

**இவ்வாரத்திற்கான சுபநாள் நேரம் பின்வருமாறு.**
**14.08.2016 முதல் 20.08.2016 வரை.**

வாக்கிய பஞ்சாங்கம்.

- வீடு கட்டுதல், குடி புகுதல் (கிழக்கு, மேற்கு வாசல் மனைகள் மட்டும்) 19.08.2016 வெள்ளிக் கிழமை பகல் 8.04 மணி முதல் 9.50 மணிவரை. பிற்பகல் 2.41 முதல் 4.13 வரை.
- விவாகம் இவ் வாரம் சுப நாள் தரப்படவில்லை.
- பொன்னுருக்கல், விவாகப்பதிவு, நிச்சயார்த்தம், 19.08.2016 வெள்ளிக் கிழமை பகல் 8.04 மணி முதல் 9.50 மணிவரை. பிற்பகல் 2.41 முதல் 4.13 வரை.
- காதுகுத்துதல் இவ் வாரம் சுப நாள் தரப்படவில்லை.
- வியாபாரம் செய்தல், புதுக்கணக்குப் பதிதல், சோறு தீற்றுதல் கருமங்கள் 19.08.2016 வெள்ளிக் கிழமை 10.02 மணி முதல் 10.31 மணிவரை.

**திருக்கணித பஞ்சாங்கம்.**

- வீடு கட்டுதல், குடி புகுதல் 19.08.2016 வெள்ளிக்கிழமை காலை 6.27 மணிமுதல் பகல் 7.51 மணிவரை (கிழக்கு, மேற்கு வாசல் மட்டும்)
- விவாகம், 19.08.2016 வெள்ளிக்கிழமை பகல் 9.57 முதல் 10.27 வரை.
- பொன்னுருக்கல், விவாகப்பதிவு, நிச்சயார்த்தம், என்பவற்றிற்கு 19.08.2016 வெள்ளிக்கிழமை பகல் 9.45 முதல் 10.25 வரை.
- காதுகுத்துதல், சோறு தீற்றுதல் இரண்டுக்கும் நாள் தரப்படவில்லை.
- வியாபாரம் செய்தல் புதுக்கணக்குப் பதிதல் 19.08.2016 வெள்ளிக்கிழமை பகல் 9.45 முதல் 10.25 வரை.

**சிரார்த்தம்(திவஷம் திதி)**

14.08.2016 ஞாயிறு ஆடி மாதம் வளர்பிறை ஏகாதசி திதி.
15.08.2016 திங்கள் ஆடி மாதம் வளர்பிறை துவாதசி திதி.
16.08.2016 செவ்வாய் ஆடி மாதம் வளர்பிறை திரயோதசி திதி.
17.08.2016 புதன் ஆவணி மாதம் வளர்பிறை.
18.08.2016 வியாழன் ஆவணி மாதம் சதுர்த்தசி, பூரணை. இரண்டு முறை வருவதால் தமிழுக்கு ஆவணிக் கடைசியில் வருவதை கைக்கொள்ளவும்.
19.08.2016 வெள்ளி ஆவணித் தேய்பிறை பிரதமை திதி.
19.08.2016 வெள்ளி ஆவணித் தேய்பிறை துதியை திதி.
20.08.2016 சனி ஆவணித் தேய்பிறை திருதியை திதி.

**இவ் வார சந்திராஸ்டமம்.**

இடப ராசி 14,15 ஆம் திகதி.
மிதுன ராசி 16,17 ஆம் திகதிகள்.
கடக ராசி 18,19 ஆம் திகதிகள்.

மேற்குறித்த 3 இராசிக்காரர்களும் சம்பந்தப்படும் நாட்களில் விளிப்புணர்வுடன் செயலாற்றுவது அவசியம். இந்த சந்திராஸ்டம நாட்களில் நோய், பிணி, துன்பம், துயரம், கஷ்டம், நஷ்டம், அலைச்சல், இழப்பு, நிகழலாம் என்பது சோதிட விதி ஆகும்.

**வாரம் ஒரு தகவல்.**

விநாயகர் சதுர்த்தியும், சங்கடஹர சதுர்த்தியும்.

1. ஒவ்வொரு வருடமும் ஆவணி மாதத்தில் வளர்பிறையில் சதுர்த்தி தினத்தன்று "விநாயகர் சதுர்த்தி" வரும். இதனை விநாயகர் அவதார நாள் என்றும், விநாயகர் நிருத்தம் செய்த நாள் என்றும் அழைப்பார். அன்று விரதமிருத்து பிள்ளையாரை சேவிப்பது உத்தமம்.
2. அன்று இரவு நிலாவைப் பார்க்கக் கூடாது.
3. சங்கடஹர சதுர்த்தி மாதம் தேய்பிறை நான்காம் நாள் சதுர்த்தி திதியில் வரும்.
4. விரதமிருந்து மாலையில் விரதம் முடிந்து சாப்பிட்டு விட்டு உறங்க வேண்டும். சந்திரனைப் பார்த்த பின் உறங்குவது நல்லது.



> நாங்கள் வன்னியிலே பிறந்து வன்னியிலே வாழ்ந்தவர்கள். ஒருவரை இறக்கிவிட்டு மேலே ஏறுகின்ற பண்பற்ற செயலை நாங்கள் செய்வ தில்லை. நாங்கள் வீரம் செறிந்த மண்ணிலே வாழ்பவர்கள். நேரடியாக நெஞ்சிலே குத்துவோமே தவிர ஒருகாலமும் முதுகில் குத்துவதில்லை.

# ‘நான் வன்னிமகன்... நெஞ்சில் குத்துவேன்’

## அதிரவைக்கும் அன்ரனி ஜெகநாதன்

எஸ்.என்.நிக்ஸன்

**தீபம்:** யுத்தத்திற்குப் பிறகு முல்லைத்தீவு மாவட்டம் எப்படியிருக்கிறது?

**அன்ரனி ஜெகநாதன்:** தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்கள், தமிழ் மக்களுடைய காணிகள் ஆக்கிரமிக்கப்பு என 'முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு பிரச்சனைகள் உள்ளன. இந்த பிரச்சனைகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றனவே தவிர இவற்றைத் தீர்க்கும், நிறுத்தும் நடவடிக்கைகள் நடக்கவில்லை. யுத்தத்திற்குப் பின்னர் மாவட்டத்தில் இருக்கின்றதையும் இழக்கின்ற நிலையே காணப்படுகின்றது.

**தீபம்:** இந்த பிரச்சனைகளை தீர்த்து வைப்பதில் மாகாண, மத்திய அரசுகள் அக்கறை காட்டவில்லையா?

**அன்ரனி ஜெகநாதன்:** போரால் அதிகம் பாதிக்கப்பட்டது முல்லைத்தீவு மாவட்டம். எல்லோரும் இந்த மாவட்டத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். மாகாணசபை தன்னாலான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் மத்திய அரசு எதையும் செய்யவில்லை.

புதிய அரசு வலிகாமத்தில் காணிகளை விடுவித்தாலும் வவுனியா, மன்னார், முல்லைத் தீவு பிரதேசங்களில் எந்தகாணியும் விடுவிக்கப்படவில்லை.

**தீபம்:** முல்லைத்தீவில் அடிக்கடி சர்ச்சையைஏற்படுத்துவது தென்னிலங்கைமீனவர் விடயம். இப்போது எப்படியிருக்கிறது நிலைமை?

**அன்ரனி ஜெகநாதன்:** தென்னிலங்கை மீனவர்கள் வருவது அதிகரித்து கொண்டு தான் இருக்கிறது. தொழில் செய்ய வந்து, இப்பொழுது குடியேறும் நிலை ஏற்பட்டு விட்டது. இராணுவத்தின் ஆதரவுடன் தொழில் தொடங்கி, இன்று குடும்பமாக வந்து தங்கியிருந்து தொழில் செய்கிறார்கள். யாரும் இதை தடுப்பதாக இல்லை.

கடந்த அரசென்றாலும், இந்த அரசென்றாலும் கரையோர பகுதி மக்களின் வாக்குகளால் பெற்றவர்கள்தான் கடற்தொழில் அமைச்சர்களாக இருக்கிறார்கள். அதனால் அவர்கள் தென்னிலங்கை மீனவர்களிற்கு சாதகமாக செயற்படுகிறார்கள். தெற்கிலேயே அனுமதியை பெற்றுவந்து இங்கு மீன்பிடிக்கிறார்கள். நமது மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடி முறையையே கடைப்பிடிக்கிறார்கள். சிங்களவர்கள் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறையை பாவிக்கிறார்கள். அவர்களிற்கு இராணுவம், கடற்படை, பொலிஸ் ஆதரவு உள்ளது. அதனால் ஒன்றும் செய்ய முடியாமலுள்ளது.

**தீபம்:** எல்லைக்கிராமங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நடக்கிறது, விகாரை கட்டப்படுகிறது என செய்திகள் வந்தபடியிருக்கின்றன. அங்கு என்னதான் நடக்கிறது?

**அன்ரனி ஜெகநாதன்:** தமிழ் மகனுக்குச் சொந்தமான காணியைப் படித்து பிக்கு ஒருவர் விகாரை அமைத்து வருகின்றார். பிக்கு ஒருவரே அங்கு அடாவடித்தனமாக செயற்படுகிறார்.

கொக்குளாயை ஆக்கிரமித்துள்ள சிங்களவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள். ஒருவர் கூட பௌத்தரில்லை. பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பிக்கு விகாரை அமைக்கிறார். யாருக்காக இது நடக்கிறது?

1984ஆம் ஆண்டு கொக்குளாய், கொக்குத்தொடுவவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு பகுதிகளிலிருந்த தமிழ் மக்களை வெளியேற்றிவிட்டு அந்தப் பிரதேசம் போர் வலயம், யுத்த சூனியம் என்று எங்களுக்கும் உலகுக்கும் அரசாங்கம் சொன்னது. ஆனால் அவ்வாறு சொல்லிக் கொண்டு 1984 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை அவர்கள் அங்குசெய்தது சிங்களக்குடியேற்றங்களைத்தான். இப்பொழுதும் சிங்களவர்கள் காணி பிடிக்கிறார்கள். மீன்பிடிக்கிறார்கள். இராணுவம் எமது நிலங்களை பிடித்து விவசாயம் செய்கிறது. இதுபற்றி வடமாகாண சபையில் பேசியிருக்கிறோம். ஜனாதிபதியின் கவனத்திற்கு முதலமைச்சர் கொண்டு சென்றுள்ளார். பலன்தான் இல்லை.

**தீபம்:** வட மாகாணசபையின் பிரதி அவைத்தலைவராக இருக்கிறீர்கள். அவ்வாறிருந்தும் மாகாணசபையை பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கிறீர்கள். என்னதான் பிரச்சனை?

**அன்ரனி ஜெகநாதன்:** மத்திய அரசின் சில செயற்பாடுகளால் மாகாணசபை செயற்பட முடியாதிருக்கிறதென்பதை மக்களுக்கு பகிரங்கமாகச் சொல்ல வேண்டும். இதனை விடுத்து மக்களை ஏமாற்றக் கூடாது. மக்களுக்கு உண்மையைச் சொல்லாமல் இருந்து அடுத்த தேர்தலுக்காக காத்திருப்பதில் அர்த்தமில்லை. இது அடுத்த தேர்தல்களில் ரிக்கெற் வாங்கும் முயற்சியல்ல.

மக்கள் எங்களை நம்பி வாக்களித்தார்கள். அதனால் நாங்கள் மக்களின் குரலாக இருக்க வேண்டும். மக்களைச் சமாளிக்கின்ற பேச்சுக்களை நாங்கள் பேச முடியாது. செய்ய முடியாது போனால் இராஜநாமா செய்யவும் நான் தயாராக இருக்கிறேன். ஆனால் நான் தனியே இராஜநாமா செய்தால் எனக்குப் பின்னால் இருக்கின்ற ஒருவர் என்னுடைய இடத்திற்கு வருவாரே தவிர எமது பிரச்சனைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. நான் இராஜஜீனாமா செய்தால் எல்லாம் தருவதாக அரசாங்கம் கூறினால் நான் இராஜனாமா செய்யத்தயார்.

**தீபம்:** மாகாணசபையில் பிரதி அவைத் தலைவரான உங்களை யாரும் கண்டுகொள்ளவில்லையென குறைபட்டு கொள்கிறீர்களே...

**அன்ரனி ஜெகநாதன்:** கிழக்கு மாகாணத்திலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாகாணசபையின் பிரதி அவைத் தலைவராக பிரசன்ன இந்திரகுமார் என்பவர் இருக்கிறார். அந்தச் சபைக்கு அவர் வந்து ஒன்றரை வருடங்கள்தான் இருக்கும். ஆனால் அந்தச் சபையில் அவர் 27 முறை தலைமை தாங்கியிருக்கிறார். ஆனால் வட மாகாண சபை அவைத் தலைவர் அதை விரும்புகிறார் இல்லை. பிரதி அவைத் தலைவராக இருக்கின்ற என்னை மேலே கொண்டு செல்ல விரும்பவில்லை. இது சம்மந்தமாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது எமது கட்சி. ஆனால் அவர்கள் இதை கவனிக்கவில்லை. இந்த விடயங்களை அவைத் தலைவருக்கு விளங்கப்படுத்தி சபையை ஜனநாயக முறைப்படி நடத்த செய்யவேண்டியது கட்சி.

நாங்கள் வன்னியிலே பிறந்து வன்னியிலே வாழ்ந்தவர்கள். ஒருவரை இறக்கிவிட்டு மேலே ஏறுகின்ற பண்பற்ற செய்லை நாங்கள் செய்வதில்லை. நாங்கள் வீரம் செறிந்த மண்ணிலே வாழ்பவர்கள். நேரடியாக நெஞ்சிலே குத்துவோமே தவிர ஒருகாலமும் முதுகில் குத்துவதில்லை.

பிரதி அவைத் தலைவருக்குரிய கடமைகளை அவைத் தலைவர் கொடுக்க வேண்டும். எனது கடமைகளை கொடுக்கும்படி முதலமைச்சரும் அவைத் தலைவருக்கு கடிதமும் எழுதியுள்ளார்.

எனக்குரிய கடமைகளை அவைத்தலைவர் கொடுக்காததால் அவைத்தலைவருக்குரிய மதிப்பை அவர் இழந்திருக்கிறார். நான் நினைத்தால் உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று அவைத் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து அவரைப் பதவி இழக்கச் செய்யவும் முடியும்.

நாங்கள் மிகப் பலமானவர்கள். எதையும் செய்யும் வல்லமையும் கொண்டவர்கள். இருந்தும் கட்சிக்கு சங்கடத்தை கொடுக்க விரும்பவில்லை. கட்சிதான் இதை சரி செய்ய வேண்டும். எதிர்க்கட்சித்தலைவர் உட்பட பல உறுப்பினர்களும் சொல்லியிருக்கின்றார்கள். ஆனாலும் அவைத் தலைவர் அதனைச் செய்ய விரும்பவில்லை. அவைத் தலைவரின் விடுமுறை, சுகயீன காலங்களில்தான் நான் சபையை வழிநடத்த முடிகிறது.

**தீபம்:** தேசியத் தலைவர் சம்பந்தன் என நீங்கள் கூறியதாக சமூகவலைத்தளங்களில் ஒரு சர்ச்சை ஏற்பட்டதே...

**அன்ரனி ஜெகநாதன்:** நான் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவன். எங்களுடைய கட்சியனுடைய தலைவர் மாவை சேனாதிராசா. எங்கள் கட்சிகளுடைய தேசியத் தலைவர் சம்மந்தன் ஐயா. தமிழ் மக்களின் தேசியத் தலைவர் என்றால் பிரபாகரன்தான். அதில் எந்த மாற்றமும் இல்லை. சில கட்சிகளிலே தேசியத் தலைவர் என்று இருக்கின்றார்கள். அதேபோன்றுதான் சம்மந்தன் ஐயாவும். எமது கட்சியைப் பொறுத்தவரையில் கட்சிக்கு தேசியத் தலைவராக சம்மந்தன் ஐயா உள்ளார். அதேநேரம் தமிழ் மக்களின் தேசியத் தலைவர் பிரபாகரன் தான். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. உலகம் அழியும்; வரை அது மாறப்போவதில்லை. ●

## பெண்ணெழுத்து 10

பி.சியா



அண்மைய பேருந்து பயணமொன்றில் நடந்தது. எனக்கு முன்னிருக்கையில் உட்கார்ந்திருந்த இரண்டு வயதான பெண்கள் ஓரளவு சத்தமாக பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் உடலசைவு சுவாரஸ்யமாக இருக்கவே, பேச்சை காது கொடுத்து கேட்டேன். இருவரும் ஒரு பெண்ணைப்பற்றி விமர்சித்துக் கொண்டிருந்தார்கள்.

'அவள் திமிர்பிடித்தவள். ஆம்பிளையளை போல நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு நடக்கிறாள். ஆளும் நல்ல சைஸ். ஒரு வெட்கம் கிட்கம் இல்லை' என பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் பேச்சிலிருந்து கிடைத்த மேலும் ஒரு தகவல், அந்த பெண்ணிற்கு சில கல்யாண பேச்சுக்கள் வந்து குழம்பி விட்டதாம். 'இப்பிடி ஆண்மூச்சு பிடிச்சவளை ஆர்தான் கட்டுறான்' என்ற கொமண்ட் வேறு.

இதையெல்லாம் பேசியது இரண்டு பெண்கள். பேசியது ஒரு பெண்ணைப்பற்றி. நமது சமூகத்தில் பெண்களின் நிலை கவலைக்குரியதென விழுந்து விழுந்து எழுதும் ஒவ்வொருவரிற்கு முன்னாலுமுள்ள பெரிய சவால் இது. பெண்கள் தொடர்பாக ஆண்கள் உருவாக்கியுள்ள எல்லா அபிப்பிராயத்தையும் பெண்களே எதிரொலிக்கிறார்கள் என்பது மிகப்பெரிய துயரம்.

தாய்வழி சமூகமாக அதிகாரத்தில் இருந்த பெண்கள், பின்னர் 'இன்றைய பெண்களாக' உருமாற்றப்பட்ட வரலாறு மிக நுட்பமானது. சமயம், புராணம், இலக்கியம், பழக்கவழக்கம், சடங்கு, சம்பிரதாயம் என அத்தனையும் பெண்களிற்கு வேலியிட மிக நுணுக்கமாக உருவாக்கப்பட்டவை. பல்லாயிரம் ஆண்டுகளாக இவை உருவாக்கிய கருத்து பெண்களின் ஆழ்மனத்தில் படிந்துள்ளது. இலகுவில் அதிலிருந்து மீளமுடியாது.

பெண்கள் உருவாகுவது பெண்களிலிருந்துதான் என்பதே துயரமானது. குடும்பத்தில் தாய்தான் ஒரு பெண்பிள்ளையை உருவாக்குகிறார். எதை செய்யலாம், செய்யக்கூடாது, எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதில் யாரை திருமணம் செய்ய வேண்டும் என்பது வரை தாய்தான் பெண்பிள்ளையை வழிநடத்துகிறார். தாயென்பது யாரெனில் ஆண்களால்

**எதையும் எதிர்கொள்ளும் தைரியம் இல்லாமல் பெண்பிள்ளைகள் வளர்க்கப்படுவதால் என்ன நிகழும்? சந்தர்ப்பத்திற்காக அலையும் யாரோ ஒருவனிற்கு இரையாகவும் நேரிடலாம்.**

உருவாக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதி.

பெண்பிள்ளைகளின் வாழ்வில் தாய்மாரே அனைத்தையும் தீர்மானிப்பதன் பெரிய விளைவு என்னவென்றால், திருமணம் செய்த இடத்தில் பிரச்சனை வரும்போது பெண்கள் நேராக தாய்வீட்டிற்கே ஓடிச்செல்கிறார்கள். பிரச்சனையை எதிர்த்து நிற்கும் துணிவு பெண்களிற்கு உடனடியாக வருவதில்லை. எந்தவழியும்கிடையாதென்ற நிலையில்த்தான் எதையாவது செய்யத்துணிகிறார்கள். அது பெரும்பாலும் புத்திபூர்வமான வழியாக அமைவதில்லை. பிரச்சனைகளை சந்திக்கும் துணிவு, எதிர்கொள்ளும் வழிவகைகள் பற்றிய அறிவு என்பன சிறுவயதிலிருந்தே பெண்பிள்ளைகளிற்கு ஊட்டப்பட வேண்டும். இந்த சமூகம் ஓரவஞ்சனையானது. ஆண்களிற்கு எண்ணற்ற வாய்ப்புக்களை, சுதந்திரத்தை வழங்கி, பெண்களிற்கு ஓரவஞ்சனை செய்வது. இதில் வாழ்வதற்கு அதிக நுட்பம், சூட்சுமம் தெரிந்தவர்களாக பெண்கள் இருக்க வேண்டியது அவசியம்.

ஆனால் நமது சமூகத்தில் பெண்பிள்ளைகள் எப்படி வளர்க்கப்படுகிறார்கள்?

சிறுவயதில் இருந்தே பாடசாலை வாசலில் இறக்கி, ஏற்றி வருகிறோம். எங்கு சென்றாலும் கூடவே செல்கிறோம். யாரும் கதை கேட்டால் பேசாமல் வா என்றுதான் சொல்லிக் கொடுக்கிறோம். யாரையும் நிமிர்ந்து பார்க்காதே என்றுதான் அறிவுரை சொல்கிறோம்.

வீதியால்செல்லும்பெண்கள் தலைகுனிந்து செல்லும்போது நக்கல் செய்யும் வாலிபர்கள் அதிகமா?. நிமிர்ந்து, தைரியமாக நடந்து செல்லும் பெண்களை நக்கல் செய்பவர்கள் அதிகமாக? ஏதாவது கதை கேட்டால் தலையை குனிந்தபடி விலகிச்செல்லும் பெண்ணை தொந்தரவு செய்ய யாருக்கும் அதிக துணிவு வேண்டியதில்லை. மாறாக, இடத்திற்கு தக்க பதில் சொல்லிச்செல்லும் பெண்களை இலகுவில் நெருக்க யாரும் துணிவதில்லை. ஆனால் அந்த துணிவு வெகுசிலருக்குத்தான் கிட்டும். வளர்ந்தபின் பார்த்துக் கொள்ளலாம் என விடும் விடயம் அல்ல இது.

எதையும் எதிர்கொள்ளும் தைரியம் இல்லாமல் பெண்பிள்ளைகள் வளர்க்கப்படுவதால் என்ன நிகழும்? சந்தர்ப்பத்திற்காக அலையும் யாரோ ஒருவனிற்கு இரையாகவும் நேரிடலாம். அண்மையில் நடந்த சம்பவம் ஒன்று இதற்கு உதாரணம்.

கிளிநொச்சியில் உள்ள நான்கு பிள்ளைகளின் தாய்க்கு நேர்ந்தது. இளவயது திருமணம். யுத்தத்தில் கொல்லப்பட்ட கணவன். விளைவு இளவயதிலேயே நான்கு பிள்ளைகளுடன் வாழ்க்கையுடன் போராட வேண்டிய நெருக்கடி. அவரை இனி மதி என்றே குறிப்பிடுவோம்.

இருப்பதற்கு முறையான வீடு இல்லாத போதும், அரசவீட்டுத்திட்டமும் கிடைக்கவில்லை. சமுர்த்தி உதவி, சிறிய கூலி வேலைகளுடன் நாட்களை கடத்திக்கொண்டிருந்தார்.

ஒருநாள் தெரிந்த ஒருவரின் மூலம் ஒரு தகவல் வந்தது. புலம்பெயர்ந்துள்ள ஒருவர் நாட்டுக்கு வந்திருக்கிறார், யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களிற்கு உதவ விரும்புகிறார், கிராமத்தில் நடக்கும் உதவிவழங்கும் நிகழ்வில் நீயும் வந்து உதவி பெறலாம் என. மதி அந்த நிகழ்விற்கு சென்றார். சிறிய உதவிப்பொருட்கள் கிடைத்தன. மதியுடன் அவர் பேசினார். உதவி கிடைக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பில் சிறுபிள்ளைகளை படிக்க வைக்க முடியாமல் சந்திக்கும் நெருக்கடிகளையெல்லாம் கொட்டித்தீர்த்தார். மதியின் தொடர்பு விபரங்களை பெற்று, பின்னர் தொடர்பு கொள்வதாக கூறி சென்றார்.

சிலநாளில் தொடர்பு கொண்டார். மதியின் வீட்டுக்கும் வந்தார். மதியின் பிள்ளைகளை படிக்க உதவிகள் செய்தார். மதியின் வாழ்க்கைச் சுமையை வெகுவாக குறைத்தது அவரது உதவிகள். மதியின் வீட்டிலேயே அடிக்கடி சாப்பிட்டார். பின்னர் அங்கேயே தங்கவும் தொடங்கினார். உதவி செய்தவரை தங்க வேண்டாமென மறுக்கவும் முடியாதே. சங்கடத்தில் நெளிந்தார் மதி. வேலிக்கு மேலால் அயல்வீட்டு தலைகள் எட்டிப்பார்ப்பதை அறியாதவளல்ல அவள்.

சிலநாளில் அவர் புறப்பட்டார். தனது நாட்டிற்கு செல்ல வேண்டுமாம். அவர் போனதும், ஊரில் எல்லோரும் பூராயம் கேட்டனர். எதேதோ பொய் சொல்லி சமாளித்தாள். ஆனால், சிலமாதங்களில் அவர் திரும்பி வந்துவிட்டார்.

மதியின் வீட்டில் ஒரேயடியாக தங்கவும் தொடங்கிவிட்டார். மதியின் பிள்ளைகளின் கல்விச்செலவு, உடை, வீட்டுச்செலவு எல்லாவற்றையும் அவர் பொறுப்பேற்றார். மதிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அடுத்து, தன்னை திருமணம் செய்யும்படி மதியை கேட்டார்.


மதி மறுத்தார். அவரை வீட்டைவிட்டு வெளியில் செல்லும்படி சொன்னார். ஆனால் அவர் செல்லவில்லை. பிள்ளைகளுடன் அன்னியோன்யமாக இருந்தார். ஊரில் பிரமுகர்களாக இருந்த சிலரிடம் மதி முறையிட்டார். பலனில்லை.

இந்தசமயத்தில்த்தான் புலம்பெயர்ந்து வாழும் தேசத்தில் அவருக்கு ஒரு குடும்பமிருப்பது தெரியவந்தது. விடுமுறையில் வந்த இடத்திலும் ஒரு குடும்பம் தேவைப்பட்டது தெரியவர, மதி நேரே பொலிசிற்கு போனார். இறுதியில் பொலிசார் தலையிட்டு அவரை வீட்டைவிட்டு அனுப்பினார்கள்.

அவர் வீட்டைவிட்டு அகற்றப்பட்டாரே தவிர, சமூகத்தின் பார்வையில் புதிய பெயர் ஒட்டிக்கொண்டது. நடத்தை பிறழ்ந்தவள்.

இனி மதியின் வாழ்க்கை முழுவதும் அந்த பெயர் நிலைத்திருக்கும். மதியின் குழந்தைகளையும் அந்த பெயர் தொடரும். குறிப்பாக, மதியின் பெண்குழந்தையின் திருமண சமயத்தில் அது மீண்டும் தூசுதட்டப்படும். எந்த சிதைக்குள் தீக்குளித்து எழுந்தாலும் மதியாலும், அவர் பெண் பிள்ளைகளாலும் அந்த பெயரை துறக்க முடியாது. ●





▶ துணுக்காய், ஒட்டுசுட்டான் பிரதேசங்களில் உள்ள மாணவர்கள் 22 பேருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. மாகாணசபை உறுப்பினர் ரவிகரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடந்தது.

# முதுமையை தடுக்கும் ஒலிவ் ஒயில்

## அழகின் இரகசியம் 30

திருமதி
ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி
Joykarthiha 3014@gmail.com





ஒலிவ் எண்ணெய் விட்டமின்கள் கனிமச் சத்துகள் மற்றும் நச்சுரல் ஃபேட்டி அசிட்டுக்கள் அடங்கியுள்ளன. இந்த எண்ணெய் அனைத்து வகையான சருமத்தினருக்கும் ஏற்ற ஒன்று. இதில் அன்டி அக்ஸிடன்ட் பொருள் ஏராளமாக இருப்பதால்தான் இது சரம பராமரிப்பிற்கு வருகிறது.

இத்தகைய ஒலிவ் ஒயிலை தினமும் இரவில் படுக்கும் முன் முகத்தில் தடவி நன்கு மசாஜ் செய்து மறுநாள் காலையில் முகத்தை கழுவினால் ஏராளமான நன்மைகள் பெறலாம்.

ஒலிவ் ஒயில் சருமத்தின் ஆரோக்கியதிற்கு தேவையான விட்டமின் ஈ மற்றும் ஏ ஏராளமாக நிறைந்துள்ளது. எனவே தினமும் இரவில் ஒலிவ் ஒயில் கொண்டு முகத்தை மசாஜ் செய்து வந்தால் பாதிக்கப்பட்ட சரும செல்கள் புதிப்பிக்கப்பட்டு முகம் புத்துணர்ச்சியுடன் அழகாக காணப்படும்.

முகத்தில் ஏதெனும் தழும்புகள் இருந்தால் தினமும் இரவில் ஒலிவ் ஒயிலால் மசாஜ் செய்து வாருங்கள். இதனால் அவ்விடத்தில் புதிய செல்கள் புதுப்பிக்கப்பட்டு சருமத்தின் நெகிழ்ச்சி தன்மை அதிகரிக்கும். மேலம் இதன் மூலம் நாளடைவில் தழும்புகளும் மறையும்.

தினமும் ஒலிவ் ஒயில் கொண்டு மசாஜ் செய்வதன் மூலம் அதில் உள்ள விட்டமின் ஈ சரும செல்கள் சீரழிவதைத் தடுத்து சருமம் விரைவில் முதுமைத் தோற்றம் அடைவதைத் தடுக்கும். மேலும் ஒலிவ் ஒயிலில் உள்ள ஸ்குவாலின் அமிலம் சரமத்தின் நெகிழ்வுத் தன்மையை அதிகரித்து சருமம் தளர்வதைத் தடுத்து இளமையுடன் வைத்துக் கொள்ள உதவும்.

உங்களுக்கு மிகுந்த வறட்சியான சருமம் என்றால் ஒலிவ் ஒயிலை கொண்டு தினமும் இரவில் சருமத்தை மசாஜ் செய்து வாருங்கள். இப்படி தினமும் செய்வதன் மூலம் சரும வறட்சி ஏற்படுவதை தடுக்கலாம்.

தொடரும்...

# திருமணத்தின் பின்



திருமணத்தின் பின்னர் பெண்களை பொறுத்தவரை கர்ப்பம் என்பது சவாலான ஒரு விடயமாகிறது. சிலருக்கு கர்ப்பம் தரிக்க முடியவில்லை என்பது சிலருக்கு கர்ப்பம் தரித்த பின்னர் வரும் பிரச்சினைகள் சந்தேகங்கள் கேள்விகள் என்று ஏராளம் பிரச்சினைகள் ஆரம்பிக்கிகன்றன.

***கருத்தரித்திருப்பதை எப்படி உறுதிப்படுத்திக் கொள்வது?***

மாதவிலக்கு தள்ளிப் போவது கர்ப்பத்துக்கான முதல் அறிகுறி. பிறகு மருத்துவரை அணுகி சிறுநீர்ப் பரிசோதனை மூலம் அது கர்ப்பம்தானா என்பதை உறுதிசெய்துகொள்ளலாம்.

முன்புபோல 40 45 நாட்களெல்லாம் காத்திருக்க வேண்டிய அவசியமின்றி விலக்காக வேண்டிய நாளிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

***எந்த வயதில் கருத்தரித்தால் தாய்க்கும் சேய்க்கும் நலம்?***

இருபத்தொரு வயதிலிருந்து முப்பத்தைந்து வயதுவரைதான் கருவுற சரியான காலகட்டம். அப்போதுதான் கருப்பை உள்ளிட்ட அனைத்து உறுப்புகளும் முழுமையான வளர்ச்சி அடைந்திருக்கும். கருவுறுவதற்கு கைகொடுக்கும் வகையில் மாதாமாதம் ஆரோக்கியமான சினைமுட்டை சீறிவருவதும் இந்த வயதில்தான். முப்பத்தைந்து வயதுக்குப் பிறகு கருத்தரித்தல் என்பது தாய்க்கும் அசௌகரியம். குழந்தையும் உடல் கோளாறுகளோடு பிறக்க அதிக வாய்ப்பிருக்கிறது.

***மாதவிலக்குக்குப் பிறகு எந்தெந்த நாட்களில் தாம்பத்ய உறவு வைத்துக் கொண்டால் கரு தங்கும்?***

மாதவிலக்கு ஆன தினத்திலிருந்து பதினான்கு அல்லது பதினைந்தாவது நாள்தான் அந்த சுபயோகத் திருநாள். அப்பொழுதுதான் சினைப் பையிலிருந்து சினை முட்டை வெடித்து வரும். மாதத்துக்கு ஒரு முறை வெளிவரும் இந்த சினை முட்டை ஒரே ஒரு நாள்தான் உயிரோடு இருக்கும். அதற்குள் தாம்பத்ய உறவு நடந்தால்தான் பெண்ணின் வஜினாவில் சேரும் உயிரணு சினை முட்டையோடு சேர்ந்து கருவாகும்.

இதில் ஆச்சரியமான விஷயம்.. சினைமுட்டை வெடிக்கும் அந்த நாளில் பெண்ணுக்கு தாம்பத்திய உணர்வு அதிகமாக இருக்கும். அதை வைத்தும் இன்றுதான் 'அந்த' நாள் என்பதை கண்டுபிடிக்கலாம்.

***ஆணும் பெண்ணும் உடலால் இணையும் உறவுதான் கருத்தரித்தலின் முதல் நிலை. ஓ.கே. அதன் பிறகு என்ன நடக்கிறது?***


உடல் உறவின்போது பெண்ணின் வஜினாவை அடையும் ஆணின் விந்துவில் கோடிக்கணக்கான உயிரணுக்கள் இருக்கும். அவை அனைத்தும் பெண்ணின் சினை முட்டையைத் தொட்டுவிட வேண்டும்என்றுமுட்டி மோதினாலும்கடைசியில் வெற்றி வாய்ப்பு ஒரே ஒரு உயிரணுவுக்குத்தான். உடனே மற்ற உயிரணுக்கள் உள்ளே நுழைய முடியாதபடி சினை முட்டையின் சவ்வுப் பகுதி இறுகிவிடும். இப்போது வெற்றி பெற்ற உயிரணுவும் சினை முட்டையில் இருக்கும் உட்கருவும் கைகோர்க்க பெண் கர்ப்பிணி ஆகிறாள்.

***பிறக்கும் குழந்தை ஆணா? பெண்ணா? என்பது எப்போது எப்படி தீர்மானிக்கப்படுகிறது?***

பெண்குழந்தை பெற்றாள் என்பதற்காகவே மனைவியை வெறுக்கும் கொடிய மனம்கொண்ட கணவர்களுக்கு இந்த பதில் அதிர்ச்சியைத் தரும். ஆமாம் குழந்தை ஆணா பெண்ணா என்பதை தீர்மானிப்பதே கணவன்தான். சினைமுட்டையின் உள்ளே செல்லும் ஆணின் உயிரணுவில் உள்ள குரோமோசோம்தான் அதை தீர்மானிக்கிறது.. அதுவும் கூட உயிரணுவும் சினைமுட்டையும் சேரும் அந்த நொடியிலேயே.

# சமையலறையில் சில டிப்ஸ்

1 பச்சை மிளகாயில் அதன் காம்பு பாகத்தை அகற்றி அதை ப்ரிட்ஜில் வைக்கவும். அவ்வாறு செய்தால் நீண்ட நாட்களுக்கு அந்த மிளகாயை ப்ரெஷ்ஷாக பயன்படுத்தலாம்.
2. காளான்களை அலுமினிய பாத்திரங்களில் சமைக்கக்கூடாது. ஏனென்றால் அவை பாத்திரத்தை கருமையாக மாற்றிவிடும்.
3. தோல் பொருள்களில் மைப்பேனா குறிகளை அழிப்பதற்கு பாலும் சிறி தளவு ஸ்பிரிட்டும் கலந்து சுத்தம் செய்யவும்.
4. எண்ணெய் கறையை அழிப்பதற்கு எலுமிச்சம் பழத்தை இரண்டு துண்டாக வெட்டி அதை உப்பில் வைக்கவும். பின்னர் அந்த துண்டுகளை வைத்து தேய்க்கவும்.
5. மண் கறைகளை துணிகளிலிருந்து நீக்குவதற்கு உருளைக்கிழங்குகளை வேக வைத்த தண்ணீரில் அந்த துணியை ஊற வைத்து சுத்தம் செய்யவும்.
6. பால் பொங்கும் போது அதை அடக்க முடியவில்லை என்றால் சிரமப்படாமல் அதை அடக்குவதற்கு சிறிது துளிகள் குளிர்ந்த தண்ணீரை தெளிக்கவும்.
7. பாலை காய்ச்சுவதற்கு முன் அந்த பாத்திரத்தை நன்கு தண்ணீரால் சுத்தம் செய்த பின்னர் காய்ச்சினால் பால் பாத்திரத்தின் அடியில் பிடிப்பதை தவிர்க்கலாம்.
8. முட்டையை வேக வைக்கும் போது அதனுள் இருப்பவை வெளியில் வராமல் இருப்பதற்கு வேக வைக்கும் தண்ணீரில் ஒரு டீஸ்பூன் வினிகரை விடவும். அவ்வாறு விட்டால் முட்டையின் ஓடு வெடித்தாலும் கூட உள்ளே இருப்பவை வெளியில் வராது.
9. ஒரு முட்டையானது கெடாமல் புதியதாக இருக்கிறதா என்பதை அறிவதற்கு அந்த முட்டையை குளிர்ந்த உப்பு தண்ணீரில் முழுகும்படியாக வைக்கவும். முட்டையானது முழுகாமல் மேலே வந்தால் அதை நீங்கள் தூக்கி எறியலாம். அது தண்ணீரில் மூழ்கினால் அதை சமையலில் பயன்படுத்தலாம்.
10. வெங்காயம் நறுக்கும் போது கண்ணிலிருந்து தண்ணீர் வராமல் இருப்பதற்கு நறுக்க வேண்டிய வெங்காயங்களை முன்பே ப்ரிட்ஜில் வைத்த பின்னர் ஆரம்பிக்கலாம்.
11. உருளைக்கிழங்குகளை வெங்காயங்களுடன் வைத்தால் அவை சீக்கிரமாக கெட்டுப்போய் விடும். அவ்வாறு அவை கெடாமல் இருப்பதற்கு அந்த உருளைக்கிழங்குகள் இருக்கும் பைக்குள் ஒரு ஆப்பிள் பழத்தை வைக்கவும்.
12. பால் புளிக்காமல் இருப்பதற்கு ஏலக்காயை பால் காய்ச்சும் போதே அதனுடன் சேர்க்கவும். அவ்வாறு செய்தால் நீண்ட நேரத்திற்கு பால் புளிக்காமல் இருக்கும்.





# உங்கள் முகமும் பளபளப்பாக வேண்டுமா?

எல்லோருமே சிவந்த நிறமாக இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். எந்த நிறத்திலும் பொலிவு இருந்தால் ஒரு ஈர்ப்பு வரும். உங்கள் சருமத்தில் பளபளப்பையும் போஷாக்கையும் தரும் இந்த குறிப்புகளை பார்க்கலாமா?

தேன் மற்றும் க்ரீன் டீ : க்ரீன் டீ டிகாஷனை எடுத்து அதில் சிறிது தேன் கலந்து வெதுவெதுப்பான நிலையில் முகத்தில் தடவி மேல் நோக்கி மசாஜ் செய்யுங்கள். 15 நிமிடங்கள் கழித்து முகம் கழுவுங்கள். முகத்தில் புது பொலிவு வரும்.

**எலுமிச்சை சாறு:** எலுமிச்சை சாறு சருமத் துவாரங்களை சிறிதாக்கும். சருமத்தை இறுகச்செய்யும். சுருக்கங்களைப் போக்கும். சிறிது தயிருடன் 1 ஸ்பூன் எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் தடவி மசாஜ் செய்து வாருங்கள். முகத்தில் சூரிய கதிர்களால் உண்டாகும் கருமை மறைந்து சருமம் ஒரே மாதிரியான நிறத்திற்கு மாறும்

**வாழைப்பழம்:** உங்களுக்குஏதாவதுவிசேஷங்களுக்கு போக வேண்டும். பார்லர் செல்லவும் நேரமில்லை. உடனடியாக எப்படி பொலிவான தோற்றத்தை பெறுவது? இதை ட்ரை பண்ணுங்க. வாழைப்பழத்தை மசித்து அதில் தேன் கலந்து முகத்தில் பேக் போல போடுங்கள். 15 நிமிடங்கள் கழித்து கழுவினால் முகம் பளபளக்கும்.

**தக்காளி பேக்:** உங்கள் முகத்தில் ஆங்காங்கே மரு தழும்பு முகப்பரு கருமை என சுத்தமாக இல்லாவிட்டால் இந்த குறிப்பு கை கொடுக்கும். அரை துண்டு தக்காளியை மசித்து அதோடு மஞ்சள் மற்றும் பால் கலந்து முகத்தில் தடவி மசாஜ் செய்யுங்கள். 20 நிமிடங்கள் காய்ந்ததும் முகத்தை கழுவினால் முகம் பிரகாசமாய் இருக்கும். வாரம் இருமுறை செய்தால் சருமம் மிகவும் சுத்தமாகி முகப்பருக்கள் வராமல் தடுக்கும்.

**பால் மற்றும் குங்குமப் பூ:** குங்குமப் பூவை பொடி செய்து சிறிது பாலில் குழைத்து முகத்தில் தடவி காய்ந்ததும் கழுவினால் அட்டகாசமான பொலிவு கிடைக்கும். சருமம் மிக மென்மையான அழகாக மாறும்.

# உயரமானவர்களுக்கான உடை அலங்காரங்கள்



பருமனாக இருந்தால் 'டாக்' நிறம்பொருந்தும். மாநிறம் கருப்பு நிறத்தவர்களுக்கு 'டாக்' கலர் வேண்டாம். அழுத்தமான கருப்பு,வெள்ளை, பச்சை,மஞ்சள், பெரிய வர்ண பூக்கள், குறுக்கு கோடுகள் தைரியமாக தெரிவு செய்யலாம்.

அகலமான கரை வைத்த புடவைகள் முப்பு (சேலையின் மொத்த உயரத்தை மூன்றாகப் பிரித்து 2 அல்லது 3 கலரில் வரும்) புடவைகள் உங்களுக்காகவே உருவாக்கப்பட்டவை.

பெரிய உடம்பும் பெரிய மார்பகங்களும் இருந்தால் மெல்லிய ஆடைகளே வேண்டாம். உருவமும் உடல்பாகங்களும் மேலும் பெரிதாகத் தோற்றம் தரும்.

பட்டு கஞ்சி போட்ட கொட்டன் சில்க் போன்றவை ஒல்லியாக இருப்பவர்களை ஓரளவு பூசினாற்போல காட்டும். நீளத் தலைப்பு வைத்துக் கொள்ளுங்கள்.

பிறிண்ட் டிசைன் புடவைகளை அணியும்போது அதற்கு பொருத்தமான பிளவுஸ் போடுங்கள். அகல போடர் புடவை நல்லது. உயரத்துக்கு அழகான தோற்றம் தரும்.

பெரிய உருவங்கள் அச்சிடப்பட்ட புடவை கட்டுங்கள்.

உயரமானவர்கள் சுடிதார் டக்ஸ்சை சற்று இறக்கமாக வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் உயரத்தை சற்ற குறைத்து காண்பிக்கும்.

லைட் கலரில் திக்கான உடைகளைத் தேர்ந்தெடுங்கள்.

நிறைய பூக்கள் வைத்த லைனிங் லேஸ் சருகை வைத்து தைத்த உடை உங்களுக்கு நன்றாக இருக்கும்.





# ஆயிரம் சூரியன் ஆயிரம் சந்திரன்

## ஒரே ஒரு பூமி

இயற்கை பற்றிய புரிதல் இல்லாமல் தயாரிக்கப்படும் ஒரு பொருள் கூட, மனித வாழ்க்கையை மட்டுமல்ல ஒட்டு மொத்த சூழலையும் சீரழித்துவிடும். கொசுக் கொல்லிகளின் வருகை இந்த விதமான சீரழிவுகளைக் கொண்டு வந்துள்ளது. குழந்தைகளைக் கொசு கடித்தால் உருவாகும் நோய்கள் பற்றிய விளம்பரங்கள் வழியாகத்தான் கொசுக் கொல்லிகள் வீடுகளுக்குள் நுழைந்தன. நச்சுப் புகை பரப்பும் கருவிகளை படுக்கை அறைக்குள் வைத்துக் கொண்டு உறங்கும் வழக்கம் பெரும்பாலான வீடுகளில்இருக்கின்றது.

கொசுக்களை கொலை செய்வதாக நம்பிக்கொண்டு உறங்கும் மனிதர்கள்,தம்மைத் தாமே சீரழித்துக் கொள்வதை அறியாதிருக்கிறார்கள். ‘கொசுவிரட்டி’ என்ற சொல் விளம்பரங்களில் பயன்படுத்தப்பட்டாலும் அவை ‘விரட்டிகள்’ அல்ல ‘கொல்லிகள்’ கொசுக்களைக் கொலை செய்யும் அளவுக்கு நஞ்சு அந்தக் கருவிகளில் உள்ளது.

மிக எளிமையான கேள்வி ஒன்றைக் கேட்டுப் பாருங்கள். கொசுக் கொல்லிகளைப் பயன்படுத்தத் தொடங்கிய பின்னர் காய்ச்சல்களின் தீவிரம் குறைந்து விட்டதா..? அதிகரித்துள்ளதா?. ஒவ்வொரு பருவநிலை மாற்றத்தின் போதும் சிலவகைக் காய்ச்சல்களைப் பற்றி பதற்றம் உருவாக்கப்படுகின்றது. இதன் ஊடாக கொசுக்களின் மீதான அச்சம் தூண்டப்படுகின்றது. விளைவாக, வீட்டு மளிகைப் பொருட்களின் பட்டியலில் கொசுக் கொல்லிகளும் இணைக்கப்பட்டுவிட்டன. கடந்த 20 ஆண்டுகளாக கொசுக்களை முன்வைத்து முன்னெடுக்கப்படும் பெருவணிகத்தின் மதிப்பு பல்லாயிரம் கோடி ரூபாய்க்கு அதிகம் இதைக் ‘கொசுப் பொருளாதாரம்’ என்றே அழைக்கலாம்.

கொசுக் கொல்லிகளின் வருகைக்குப் பின்னர் நிகழ்ந்த மிக முக்கிய மாற்றம் நுரையீரல் நோய்களின் பெருக்கம். இதைப் புரிந்து கொள்ள எந்தப் புள்ளி விபரங்களையும் தேடாதீர்கள். எல்லா புள்ளிவிபரங்களும் நிறுவனங்களின் தயாரிப்புகள்தான்.

> **கழிவுநீரிலும் அழுகிய உணவுகளிலும் உருவாகும் நுண்ணுயிர்களை உணவாக உட்கொண்டு சூழலைச் சுத்தமாக வைத்திருக்கும் பொறுப்பு பல உயிரினங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கொசுக்கள் இவற்றில் முதன்மையானவை.**

உங்கள் சுற்றத்தாரைப் பாருங்கள். 10 ஆண்டுகளுக்குமுன்னர் உங்களைச்சுற்றிலும்எத்தனை மூச்சிரைப்பு நோயாளிகள் இருந்தனர். இப்போது எவ்வளவு பேர் இருக்கின்றார்கள் எனக் கணக்கிடுங்கள். உங்கள் குழந்தைகளின் நுரையீரலை சளி எவ்வளவு மோசமாகப் பற்றிக் கொண்டுள்ளது எனப் பாருங்கள். சளி தொடர்பான தொல்லைகளுக்காக நீங்கள் மேற்கொள்ளும் மருத்துவ முயற்சிகள் எவ்வளவு தீவிரம் அடைந்துள்ளன எனக் கவனியுங்கள். சீராக மூச்சுவிடுவதற்குக் கூட மருந்துகளை நம்பி இருக்கும் மனிதர்களின் எண்ணிக்கை பல்கிப்பெருகுவதை உற்று நோக்குங்கள். சுவாசத்தைச் சீராக்குவதற்கான பொருட்களின் விளம்பரங்கள் எவ்வளவு அதிகரித்துள்ளன எனப் பாருங்கள்.

நமது மரபு மருத்துவக் கொள்கைகளின்படி தோல் நோய்களும் நுரையீரல் நோய்களுக்கும் உறவு உண்டு. கடந்த 20 ஆண்டுகளாக தோல் நோயாளிகளின் எண்ணிக்கையும் நீங்களே உணர்ந்து புரிந்து கொள்ளுங்கள். உங்கள் சிந்தனைக்கு ஒரு திறவுகோலை நான் தருகின்றேன். இனி நீங்களே சிந்தித்து நிலைமையின் தீவிரத்தை உணர வேண்டும்.

மூடிய அறைக்குள் நச்சுப் புகையைப் படரவிட்டால் கொசுக்கள் மட்டும் செத்து விழும் மனிதர்கள் நலமாக இருப்பார்கள். என்ற நம்பிக்கையை புரிந்து கொள்ளவே முடியவில்லை. நிறுவனங்களின் நச்சுத்தயாரிப்புக்கள் எல்லாவற்றிலும் ஓர் ‘எச்சரிக்கை’ அறிவிப்புக்கள் இருக்கும். கொசுக் கொல்லிகளிலும் இந்த அறிவிப்புக்கள் உண்டு. மனதாரச் சொல்லுங்கள் நீங்கள் இந்த அறிவிப்புக்களைப் படித்ததுண்டா? ஒருவேளை படித்தாலும் அதை உங்களால் கடைப்பிடிக்க முடியுமா? கொசுக்கொல்லிகளைப் பயன்படுத்தும்போது எல்லாக் கதவுகளையும் மூடி வைக்கக்கூடாது என்பது ஓர் அறிவிப்பு. இதை உங்களால் செயல்படுத்த முடிகிறதா?


‘கதவுகளைத் திறந்தாலே கொசுக்கள் உள்ளே புகுந்துவிடும்.’ என்ற அச்சத்திலும் அருவருப்பிலும் அல்லவா நீங்கள் வாழ்கின்றீர்கள். நிறுவனங்களும் அவற்றைத் தாங்கிப் பிடிக்கும் மேதைகளும் எல்லா பூமியின் உயிர்ச்சூழலும் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

கொசுக்களின் உணவு, மனிதரத்தம் அல்ல. மனிதக் கண்களுக்குத் தெரியாத நுண்ணுயிர்களும்,தாவரச்சுரப்பிகளும்தான் அவற்றின் முதன்மை உணவுகள். சக உயிர்களின் இரத்தமும் அவற்றின் உணவுதான். அந்தச் சக உயிரினங்களில் மனிதர்கள் கடைசி இடத்தில் இருக்கின்றார்கள்.

ஒரு காலத்தில் வீடுகளைச் சுற்றிலும் தவளைகளும் பிள்ளைப் பூச்சிகளும் மரவட்டைகளும் நத்தைகளும் வாழ்ந்தன. இவை எல்லாம் வாழ்வதற்கு ஏற்ற வகையில் செடிகளும் புதர்களும் அப்போது இருந்தன. தவளை, நத்தை, கரப்பான் போன்ற எண்ணற்ற பூச்சியினங்கள் செயலாற்றுகின்றன. கொசுக்களும் ஈக்களும் அவற்றில் குறிப்பிடத் தக்கவை.

நவீன சமூகக்கட்டமைப்பில்மேற்கொண்ட உயிரினங்களில் பெரும்பாலானவை ஒழிக்கப் பட்டன. குறிப்பாக ஈக்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டது. பிள்ளைப் பூச்சி என்னும் அருமையான வகையினம் ஏறத்தாழ அழிந்துவிட்டது. தவளைகள் காடுகளுக்குத் துரத்தப்பட்டன. காடுகளும், ஏரிகளும் நகர விரிவாக்கத்தாலும் தொழிற்சாலைகளாலும் அழிக்கப்பட்டன. நத்தைகளுக்கு வயல்களில் கூட வாழ்க்கை இல்லை. எல்லா வயல்களும் பூச்சிக்கொல்லி நஞ்சுகளால் நிரப்பப்பட்டன. வெறும் 50 ஆண்டுகளில் இவ்வாறான முற்றுகைப் போர் சக உயிரினங்களின் மீது ஏவப்பட்டது.

இந்தப் போரில் கொசுக்கள் மட்டும் கூடுதல் ஆற்றலோடு போராடத் தொடங்கின. தவளைகள் இல்லாத நகரங்களில் கொசுக்கள் மனித ரத்தம் தேடுகின்றன. படைத்தவரின் விதிகள் மிக முக்கியமானது ‘எளியவை அழிக்கப்பட்டால் வலியவை மிகுந்து விடும்’ என்பது. பிள்ளைப் பூச்சிகளை அழித்தால் கொசுக்கள் மிகுந்துவிடும் என்பதும் அந்த விதியின் விளைவுதான். ரசாயன



சட்டங்களில் இருந்தும் தப்பிவிடுவார்கள். ஏனெனில் அவர்கள் சட்டப்படி நஞ்சு தயாரிக்கின்றார்கள். நீங்கள் தான் சட்டத்தைப் புரிந்து கொள்ளாமல் நஞ்சுக்கு இரையாகுகிறீர்கள்.

மீண்டும் எனது முதல் கேள்வியை நினைவூட்டுகின்றேன். கொசுக் கொல்லிகளின் வருகைக்குப் பின்னர் அச்சுறுத்தும் காய்ச்சல்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதா? உயர்ந்துள்ளதா? ஒவ்வொரு பருவநிலை மாற்றத்திலும் காய்ச்சல்களின் மீதான அச்சமும், அவற்றின் தாக்குதலும் கூடிக்கொண்டுதான் இருக்கின்றன. ஒருபுறம் நீங்கள் கொசுக்களுக்கு எதிராகப் போர் தொடுக்கின்றீர்கள். மறுபுறம் காய்ச்சல்கள் உங்களுக்கு எதிராக போர் தொடுக்கின்றன. இந்தப் போரில் மருந்து நிறுவனங்களும், கொசுக்கொல்லி நிறுவனங்களும் மாபெரும் வெற்றி பெறுகின்றன. சமூகத்தின் நலனும் வீட்டில் இருந்து வெளியேறிய கழிவுநீர் தான் இந்த எல்லா உயிரினங்களுக்கும் உணவு ஆதாரம். கொசுக்களும் இவற்றோடு இணைந்து வாழ்ந்தன. அப்போது கொசுக்கள் மனிதர்களைத் தேடிவரவில்லை.

படைப்பின் ஒழுங்குவிதிகள் குலையாத காலம் அது. கழிவுநீரிலும் அழுகிய உணவுகளிலும் உருவாகும் நுண்ணுயிர்களை உணவாக உட்கொண்டு சூழலைச் சுத்தமாக வைத்திருக்கும்பொறுப்புபலஉயிரினங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கொசுக்கள் இவற்றில் முதன்மையானவை. ஆடு, மாடு, நாய், பூனை, எலி போன்ற விலங்குகளும் பரவலாக வாழ்ந்த காலம் அது என்பதால் கொசுக்களின் உலகம் பெரியதாக இருந்தது.

நுண்ணுயிர்களின் பெருக்கம் கட்டுப்பாட்டில் இல்லை எனில், பெரிய உயிரிகளின் உயிர் வாழ்க்கைசிக்கலாகிவிடும். நுண்ணுயிர்ப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக வேளாண்மை, வண்ணாத்துப் பூச்சிகளை எளிதில் அழித்தது. இப்போது வலிமையான பச்சைப் புழுக்கள் மிகுந்து விட்டன. காடுகளைக் கைப்பற்றுவோர் மான்களை எளிதில் வேட்டையாடுகின்றனர். காட்டுப் பன்றிகளும், யானைகளும் இப்போது தாக்குதலைத் தொடங்கியுள்ளன.

வீடுகளைச் சுற்றியிருந்த கழிவுநீரைச் சுத்தம் செய்த பல்வேறு உயிரினங்கள் ஒழிந்த நிலையில் கொசுக்களின் எண்ணிக்கை பரவத் தொடங்கியுள்ளது. ஏனெனில் நவீன சமூகம் உயிரினங்களைக் குறைத்து கழிவுகளை அதிகரித்தது. எங்கு பார்த்தாலும் குப்பைகளும் சாக்கடைகளும் காட்சியளிக்கும். “சிங்கார” நகரங்கள் உருவாகின. இந்தக் கழிவுகள் வழியாக பெருகும் நுண்ணுயிர்களைப்பற்றி நவீன மனிதர்கள் கவலைப்படவில்லை. அவர்களது எண்ணமும் செயலும் கொசுக்களை ஒழிப்பது பற்றியது. ஏனெனில்

சிக்கல்களுக்குக் காரணம் நான் தான் என்ற உண்மையை ஒப்புக் கொள்வது கடினம். எல்லா சிக்கல்களுக்கும் பிறர்தான் காரணம் என பழி போடுவது சுகமானது.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்ற நமது மரபின் கொள்கையை உங்கள் முன் வைக்கின்றேன். இப்போதைய நலக் குறைபாட்டுக்குக் காரணம் கொசுக்கள் அல்ல... மனிதர்கள்.

பெருகும் கழிவுகளின் கிருமிகளை உணவாக உட்கொண்டு தூய்மைப் பணியில் ஈடுபட்டுள்ளவை கொசுக்கள் என்பதை மறவாதீர்கள். கொசுக்கள் எல்லாம் சேர்ந்து கிருமிகளை உருவாக்குவதில்லை. மனிதர்களுக்கு நோய் தரும் கிருமிகளை உணவாக்கும் கொசுக்கள் மனிதர்களையும் கடிப்பதால் நோய்த் தொற்று உருவாகின்றது. இது நவீன அறிவியல் சொல்லும் செய்தி இப்போது அழிக்கப்பட வேண்டியவை கொசுக்களா? கிருமிகளா? எனச் சிந்தியுங்கள்.

ஒருவேளை கொசுக்கள் எல்லாம் முற்றிலும் ஒழித்துவிட்டால் கழிவுகளில் பெருகும் கோடான கோடி கிருமிகளின் செறிவினைக் கட்டுப்படுத்தும் உயிரினம் எது என்ற கேள்விக்கு விடை வேண்டும். அப்போதும், நிறுவனங்களும் அவற்றைத் தாங்கும் மேதைகளும் "கிருமி கொல்லும் மருந்துகளை" விற்பனைக்குக் கொண்டு வருவார்கள். என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. அவர்களது அடுத்த இலக்கு அதுதான்.

கொசுக்கள் இல்லாத சூழலில் பல்லிகளும், தவளைகளும், வௌவால்களும் வேறு பல உயிரினங்களும் உணவின்றித் தவிக்கும். தாவரங்களின் மகரந்தச் சேர்க்கையில் கொசுக்கள் பணியாற்றுகின்றன. கொசுக்கள் இல்லை எனில் தாவரங்களின் காய்ப்பும் குறையும். எந்த ஒரு உயிரினத்திற்கு எதிராக நஞ்சு பயன்படுத்தப்பட்டாலும் அது மனிதர்களையும் சேர்த்தே அழிக்கும் என்பதை உணர வேண்டும். நாம் சக உயிரினங்களோடு கூடி வாழப் பிறந்தோம். உறங்கும்போது கொசுவலைகளை உபயோகிப்பது இப்போதைய நெருக்கடிக்கான சிறந்த மாற்றாக அமையும். மாலை வேலைகளில் சாம்பிராணிப் புகைகளை பரவ விடுவது கொசுக்களின் வரவைக் குறைக்க உதவும். காய்ந்த வேப்பிலைகள், தும்பை இலைகள், ஆகிய இரண்டையும் சிறு சட்டியில் இட்டு புகைய விட்டால் கொசுக்கள் வெளியேறும்.

கொசுவலைகள் குடிசைத்தொழில் செய்வோரிடம் இருந்து வாங்குங்கள். கடந்த 20 ஆண்டுகளில் கொசுவலைகள் விற்பனை குறைந்து அந்தத் தொழிலில் இருந்து பல்லாயிரம் குடும்பங்கள் வெளியேறும் நிலை உருவானது. கொசுவலைகளை எல்லாம் இறக்குமதி செய்தால் கடைசியில் பிழைப்புக்காக மனிதர்களை ஏற்றுமதி செய்ய வேண்டி வரும்.

வேப்பிலைகளையும், தும்பை இலை களையும் நீங்களே தேடிச் செல்லுங்கள். குறிப்பாக உங்கள் பிள்ளைகளுக்கு அந்தச் செடிகளை அறிமுகப்படுத்துங்கள்.

முக்கியமான வேண்டுகோள்... கொசுக்களைக் கொல்லும் மின் மட்டைகளை வீசி எறியுங்கள். உணவு எனும் ஒரே ஒரு காரணத்தைத் தவிர, வேறு எதற்காகவும் சக உயிர்களைக் கொலை செய்யும் உரிமை நமக்கு வழங்கப்படவில்லை. அவ்வாறு கொலை செய்ய வேண்டிய தேவையும் இயற்கையில் உருவாவது இல்லை.

**நன்றி: ஆனந்த விகடன்**



## உயிரற்றவர்களுடன் உறவு கொண்ட யுவதி

மெக்சிக்கோ நாட்டில் உள்ள யுவதியொருவர் பல கொலைகளை செய்ததுடன், தலை துண்டிக்கப்பட்ட சடலங்களுடன் பாலியல் உறவில் ஈடுபட்டதாக ஒப்புக்கொண்டுள்ளார். ஜூவானா என்ற இந்த யுவதி கைதுசெய்யப்பட்டு தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவர் 15 வயதிலேயே மதுவுக்கு அடிமையானதாகவும், அந்த சமயத்திலிருந்தே விபச்சாரத்தில் ஈடுபட்டதாகவும், அதன் பின்னர் கடத்தல் குழுவில் அங்கம் வகித்ததாகவும் கூறியுள்ளார். கடத்தல் குழுவில் இணைந்து பல கொலைகள் செய்து, இரத்தம் குடித்து, கொல்லப்பட்டவர்களின் உடலுடன் பாலியல் உறவில் ஈடுபட்டதாகவும் வாக்குமூலமளித்துள்ளார்.

## கனடாவில் இசைநிகழ்ச்சி

கல்பனா அக்காவை அறியாத உலக இசைரசிகர்கள் இருக்க மாட்டார்கள். இணையபரிச்சயம் இல்லாதவர்களிற்கு அவரை தெரிந்திருக்காது. அவர்களிற்காக சிறு அறிமுகம் எவ்வளவு இனிமையான பாடலென்றாலும் கர்ணகடூரமாக பாடி, எவ்வளவு கொலை செய்யலாமோ அவவ்ளவு கொலை செய்து வெளியிட்டு பிரபலமானவர் கல்பனா அக்கா. இணையத்தளம் முழுக்க அவருக்கு ரசிகர்கள் நிரம்பி வழிகிறார்கள். செய்தி என்னவென்றால், கல்பனா அக்காவை வைத்து கனடாவில் இசைநிகழ்ச்சி நடத்தவிருக்கிறார்களாம். இதை கல்பனா அக்காவே தனது பேஸ்புக்கில் பதிவேற்றியிருக்கிறார்.





## பேரீச்சம்பழத்திற்கு விற்கப்பட்ட பேரூந்து

தமிழகத்தில் பேரூந்தை வழிமறித்த மக்கள் அதை எடைக்கு எடை போட்டு பேரிச்சம்பழத்திற்கு விற்று பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர். மிகப்பழைய அந்த அரசு பேரூந்து மிக மொதுவாக இயங்குவதுடன், மிக மோசமான நிலையில் இருந்துள்ளது. இதனால் மக்கள் பெரும் சிரமத்தை சந்தித்துள்ளனர். மாட்டுவண்டியை போல மெதுவாக ஊர்ந்து செல்வதாகவும், எப்பொழுதும் உடைந்து விழும் நிலையில் உள்ளதாகவும் மக்கள் குற்றம் சுமத்தினார். பேரூந்தை வழிமறித்த மக்கள் அதற்கு முன்னால் தராசை வைத்து அளப்பதை போல பாவனை காட்டினார்கள். பின்னர் அங்கிருந்தவர்களிற்கு பேரீச்சம்பழம் கொடுத்துள்ளனர். பின்னர் பொலிசார் தலையிட்டு பேரூந்தை விடுவித்தனர். இப்படி அசிங்கப்படுத்தி விட்டீர்களேயப்பா என அலுத்துக்கொண்டு பேரூந்தை கொண்டு சென்றனராம்.

## ஓவர் பில்டப் உடம்பிற்கு ஆகாது

தமிழகத்தில் சமூக வலைத்தள வாசிகளின் கையில் தற்போது சிக்கி சீரழிபவர் வை.கோ. விடுதலைப்புலிகளின் தலைவரை சந்திக்க இலங்கைக்கு கடல்வழியாக பயணம் வந்த சமயத்தில் கடற்படை வழிமறித்ததாகவும், அப்போதே கடற்படை என்னை சுட்டுக் கொன்றிருக்கலாமென்றும் பேசியிருக் கிறார். பிறகென்ன, சமூகவலைத்தள வாசிகள் ஆளாளுக்கு அவரை காய்ச்சி எடுக்கிறார்கள்.ஓவர் பில்டப் உடம்பிற்கு ஆகாது என்ற ரீதியில் விமர்சனங்கள் வந்து கொண்டிருக்கின்றன.



## அதிசய பிணைப்பு

அமெரிக்க தம்பதியொன்றின் நெகிழ்ச்சி மிக்க உறவு பற்றிய செய்திகள் வெளியாகியுள்ளது. 63 வருட திருமண பந்தத்தில் இணைந்திருந்த ஜோடியிது. மனைவி மறதிநோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவரை தினந்தோறும் கணவன் சென்று பார்த்து வந்தார். திடீரென அவருக்கும் உடல்நல குறைவு வர, அந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மனைவிக்கு அருகிலிருந்தே சிகிச்சை பெற்றார். சில நாட்களின் முன் மனைவி திடீரென இறந்துவிட்டார். அந்த செய்தியறிந்த கணவன் 20 நிமிடத்தில் இறந்துவிட்டார். கணவன் இறந்த நேரத்தில் அந்த அறையின் மணிக்கூடும் இயங்காமல் நின்றுவிட்டதாம்.



# அழுகை நன்று



அழுகை என்பது மனிதர்களின் கூடப் பிறந்த குணங்களில் ஒன்று. அழுது கொண்டே பிறக்கிறோம். அழுதுகொண்டே வாழ்கிறோம். அழுதது போதுமென்று அடங்குகிற போது அழுதே நம்மை அனுப்பி வைக்கிறது நமது உறவும் நட்பும். அழுவ தென்னவோ கோழைத்தனமென்று தவறான கருத்து நம்மிடத்தில் இருக்கிறது. அதிலும் குறிப்பாக ஆண்கள் அழலாமா? என்றுகூட நம்மவர்கள் கேட்பதுண்டு. அழுவது கோழைத் தனம் அல்ல. அழுகைஎன்பது உணர்வுகளின் வெளிப்பாடு. அதை வார்த்தைகளற்ற உணர்வின் மொழி என்றும் கூறுவதுண்டு.

1 அழுகை மனதில் அழுத்தி வைக்கப்பட்டால் அது மன இறுக்கத்தையும் மனநலக்குறைவையும் ஏற்படுத்திவிடும்.
2 பெரும்பாலும் மனநோயாளிகள் அழுவதில்லை. அதிகமாகசிரிப்பார்கள் அல்லது அமைதியாக இருப்பார்கள். நலமாக இருப்பவர்களுக்குத்தான் அழுகை வரும்.
3 அழுதுகொண்டே பிறக்கிற குழந்தைகள் தான் ஆரோக்கியமான குழந்தைகள்.
4 மனிதன் தன்னைக் கண்டெடுப்பது சோகத்தில்தான். ஆங்கிலக் கவிஞர் பிரான்சிஸ்தாம்சன் 'கண்ணீரால்கழுவப் பட்ட கண்களுக்குத்தான் புனித தரிசனங்கள் கிடைக்கும்' என்கிறார். அழுவதால் வலி குறைகிறது; வருத்தம் விடைபெறுகிறது என்பதைப்போலவே மன இறுக்கமும் தளர்கிறது.
5 மனஅழுத்தத்தை ஏற்படுத்தும் ஹார் மோன்களை அழுகை கரைப்பதால் மனம் இலகுவாகிறது. மனம் இலகுவாகாதபோது மனநலம் குன்றுகிறது. மரணம் சம்பவிக்கிற வீடுகளில்கூட அழுவதென்கிற பழக்கம் இருப்பதே துயரங்களைச் சற்றுத் துடைக்கவேண்டும் என்பதற்காகத் தான்.

# வெற்றிலை சொல்லும் நற்சிந்தனை



வெற்றிலை நமது வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த வெற்றிலையை வைத்து நாம் ஆரம்பிக்கின்ற காரியங்கள் அனைதலும் வெற்றியைத் தரும் என்பதால் வெற்றிலை (வெற்றி + இலை) என்று அழைக்கப்படுவதாகச் சிலர் கூறுவார். ஆனால் இந்த வெற்றிலைக் கொடி பூக்காமல், காய்க்காமல் பழுக்காமல் வெறும் இலையை மட்டுமே தருவதால் இது வெற்றிலை (வெற்று + இலை) என்று அழைக்கப்படுகிறது. முற்காலத்தில் ஒருவர் மற்றொருவருக்கு ஒரு பொருளை விற்கவோ அவரிடமிருந்து ஒரு பொருளை வாங்கவோ வேண்டுமென்றால் அதற்குரிய பணத்தை ஊர்ப் பெரிவர்களின் முன்பாக வெற்றிலை பாக்குடன் சேர்த்துக் கொடுத்தே மாற்றிக்கொள்வர். அப்படி வெற்றிலையை சேர்த்துக் கொள்வதன் மூலமாக உறவு வளரும்என்று நம்பப்பட்டது. அதனால்தான் இன்றும் கல்யாணத்துக்கு முன்பாக 'நிச்சயதாம்பூலம்' மாற்றும் வழக்கம் வெற்றிலையை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகிறது. குருகுலத்தில் குருவுக்கு சீடனும்,குடும்பங்களில் கணவனுக்கு மனைவியும்வெற்றிலைமடித்துக்கொடுப்பது மற்றும் வீட்டுக்கு வருபவர்களுக்கு வெற்றிலை கொடுப்பது போன்ற வழக்கமும் இந்த நோக்கத்தைக் கருத்திற்கொண்டே கடைப்பிடிக்கப்பட்டன. இவை மட்டுமன்றி தெய்வத்துக்கும் நமக்கும் இடையிலான அன்பும் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்ற பாவனையாகத்தான் அர்ச்சனையின் போது மறக்காமல் இப்போதும் இறைவனுக்கு தாம்பூலம் சமர்ப்பிக்கிறோம்.

அடுத்து எலுமிச்சம்பழம்... இந்த எலுமிச்சம்பழமானது தோல்காய்ந்து போனாலும் அதனுள் சாறு வற்றாமல் இருக்கும். அதுபோன்று நம்மிடையே இருக்கின்ற உறவு எனறென்றும் வற்றிவிடாமல் இருக்கவேண்டும் என்ற பாவனையில்தான் ஒருவரைச் சந்தித்தவுடன் எலுமிச்சம்பழம் கொடுப்பதும் கொண்டாட்டங்களில் கலந்து கொள்பவர்களுக்கு (வெற்றிலைப் பையினுள்) எலுமிச்சம்பழம் கொடுப்பதும் வழக்கமாக இருந்தது. ●

# பேராசிரியர் செல்வநாயகத்தின் தமிழ்ப்பணி

ஈழத்து கல்விப் பாரம்பரியத்தை இரு பிரிவுகளாக நோக்கலாம். ஒன்று நாவலர் மரபுவழி வந்த கல்வி மற்றயது இலங்கை பல்கலைக்கழக மரபு வழி வந்த கல்வி. இதில் செல்வநாயகம் இரு மரபுவழிகளையும் சார்ந்தவர். 1907ம் ஆண்டு ஜனவரி மாதம் 11ம் திகதி கொழும்புத்துறையில் விநாசித்தம்பி அலங்காரம் தம்பதிகளிற்கு பிறந்தார்.

இவருடைய ஆரம்ப இடைநிலை கல்வி யாழ்ப்பாணம் புனித ஜோன்ஸ் கல்லூரியிலேயே நடைபெற்றது. கொழும்பு பல்கலைக் கழகக் கல்லூரியிலே சேர்ந்து படித்து லண்டன் பல்கலைக்கழகம் நடத்திய பரீட்சைகளிலே தேறி கலைமாணிப் பட்டம் பெற்றார். சில காலம் இடைக்காடு இந்துக்கல்லூரியிலேயே ஆசிரியராகப் பணியாற்றினார்.

பின்னர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். 1942ல் இலங்கைப் பல்பலைக்கழகத்திலே. தமிழ் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். அண்ணா மலை பல்கலைக்கழகம் சென்று முதுமாணிப் பட்டம் பெற்றுத் திரும்பினார். தமிழ் உரைநடை வரலாற்றாசிரியராகவும் திறனாய்வுக் கட்டுரயாளராகவும் வரலாற்றாசிரியராகவும் இவருடைய தமிழ் பணிகள் அமைந்தன. இவரிடம் ஆசிரியருக்கே உள்ள துணிவு, தெளிவு, கண்டிப்பு, தான் கருதியதை மறைக்காமல் கூறதல், மாணவர்களின் கருத்து வளர்ச்சியை தூண்டுதல் என பல பண்புகளை அவதானிக்கலாம். இவருடைய தமிழ் பணி, இவரின் பெயர் 20ம் நூற்றாண்டின் தமிழ்கற்கை வரலாற்றில் தமிழகம், இலங்கை, மலேசியாவில் அழியாது இடம்பெற்றது. தாமோதரப் பிள்ளை, கமில் சுவெலபில், வரதராசன் போன்றோரின் நூல்களை விட செல்வநாயகத்தின் நூல் வேறுபட்டமைந்தது. இலக்கியங்களின் திறன்களை ஆராய்ந்தது எழுதினார்.

இவருடைய வழக்கு செய்யுளும் என்ற கட்டுரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. பேச்சுவழக்கின் முக்கியத்தவத்தை வலியுறுத்தி அமைந்ததே இக்கட்டுரை. கடலோசை என்னும் கட்டுரையில் கமலாம் பால் சரித்திரம் என்னும் நாவலிலிருந்து ஓர் உரைப்பகுதியை தேர்ந்தெடுத்து அதனை திறனாய்வு செய்துள்ளார். அறிவியல் ரீதியான தமிழிலக்கிய ஆராய்ச்சி இலங்கைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறுவதற்கு இவரே காரணம்.

இவருடைய இலக்கியப்பணி எல்லோராலும் நினைவு கூறப்பட வேண்டியது. இன்று இன்னொரு நூற்றாண்டின் தொடக்க நிலையில் நின்று பார்க்கின்ற போது இந்தப் பங்களிப்பு பளிச்சிடுகின்றது. ●

# அறிவுரைகளை ஆராய்ந்து செயல்படுத்து



ஊருக்கு ஒதுக்குப் புறமாக ஒரு கொடிய விஷமுள்ள பாம்பு வாழ்ந்து வந்தது. ஊர் மக்கள் யாராவது அதன் புற்றின் பக்கம் போனால் சீறி வந்து கொத்தி விடும். பாம்புப் புற்று இருந்த பாதை அந்த ஊருக்கும் பக்கத்து சந்தைக்கும் குறுக்கு வழி. பாம்புக்கு பயந்தே ஊர் மக்கள் பல தொலைவு சுற்றி அந்த சந்தைக்குப் போய் வந்து கொண்டிருந்தார்கள். வேறு வழியில்லாததால் சலிப்புடனேயே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தனர்.

ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு யோகி வந்தார். அவர் மிருகங்களிடம் பேசக் கூடிய வரம் பெற்றவர். ஊர் மக்கள் தங்கள் குறையை அவரிடம் முறையிட்டனர். அவர் பாம்பிடம் பேசி அதற்கு ஊர் மக்களை கடிக்கக் கூடாது என்று கட்டளை இட்டு விட்டு பக்கத்து ஊருக்குச் சென்று விட்டார். பாம்பும் அவர் கட்டளைக்குக் கட்டுப் பட்டு நடந்தது.


ஆனால் ஊர் மக்கள் சும்மாயில்லை. வழியே போகும் சிறுவனுக்குக் கூட பாம்பிடம் இருந்த பயம் போய் விட்டது. பாம்பைக் கண்டால் அதைக் கல்லால் அடிப்பது துன்புறுத்துவது விரட்டியடிப்பது என்று அதன் வாழ்க்கையை நிம்மதியில்லாமல் செய்து கொண்டிருந்தனர். உடம்பில் பல காயங்களுடன் குற்றுயிரும் குலையுயிருமாகி விட்டது பாம்பு.

யோகி ஒரு நாள் பாம்புப் புற்று இருந்த வழியாக ஊருக்குள் திரும்ப வரும் போது பாம்பின் பரிதாபமான நிலையைக் கண்டு அதனை விசாரித்தார். பாம்பும் நடந்த கதையையெல்லாம் கூறி அழுதது.

யோகி பாம்பைப் பார்த்து 'அட முட்டாள் பாம்பே! உன்னை மக்களைக் கடிக்க வேண்டாம் என்றுதானே கூறிச் சென்றேன். பக்கத்தில் வருபவனைப் பார்த்து சீறாதே என்று ஒரு போதும் சொல்லவில்லையே' என்று கேட்டார். இதற்குப் பின் பாம்பும் பிழைத்துக் கொண்டது. ●

# மாணவர் மலர்

மாணவ, மாணவியரே உங்கள் ஆக்கங்கள் எதுவானாலும் தீபத்திற்கு அனுப்பி வையுங்கள். பெயர், பாடசாலை என்பவற்றை தெளிவாக குறிப்பிடுங்கள். புகைப்படங்களையும் சேர்த்து அனுப்பி வைக்கலாம்






தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நடந்த போராட்டமொன்றில் ஒரு பௌத்தபிக்குவும் இணைந்திருந்தார். கொழும்பில் நடந்ததிது.



நல்லூர் ஆலயச்சூழலில் கிளிக் செய்த படம். வெளிநாட்டவர்கள் ஆர்வத்துடன் பஜனையில் ஈடுபடும் காட்சி.



பெல்ஜியத்தில் உள்ள சிறிய கிராமம் லிலோ. இங்கே 35 குடும்பங்கள் வசிக்கின்றன. மிக மிக அமைதியான இந்த பகுதி போகிமான் கோ அறிமுகமானதில் இருந்து கிராமத்தின் 7 தெருக்களும் மிகவும் பரபரப்பாக இருக்கின்றன. ஒருபக்கம் போகிமான் பயிற்சி கொடுப்பதற்காக பயிற்சியாளர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்கள். இன்னொரு பக்கம் போகிமான் விளையாடுபவர்கள் நிறைந்திருக்கிறார்கள். அதனால் இரவு, பகல் எந்த நேரமும் தெருக்களில் கூட்டம் இருந்துகொண்டே இருக்கிறது.



தமிழ்நாடு பிரிமியர் லீக் போட்டிகளை பிரபலப்படுத்த சென்னைக்கு வந்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் நட்சத்திரம் மத்தியு ஹெய்டன் தமிழ் கலாச்சாரத்தில் கலக்கிய காட்சி.

பரோட்டா சூரியையே பதற வைக்கும் அறிவிப்பு. றூம் போட்டு யோசித்திருப்பார்களோ?




கோப்பாய்வாசியொருவரின் அசத்தல் முயற்சி. வீட்டிற்கு அருகில் நிற்கும் தென்னையிலிருந்து விழும் தேங்காய்கள் வீட்டை சேதப்படுத்தின. அதற்காக தென்னையை தறிக்கவும் அவருக்கு விருப்பமில்லை. அவர் கண்டுபிடித்த புதியவழியிது. தென்னையில் தடுப்புவலை அமைத்துள்ளார். தேங்காய்கள் வீட்டின் மேல் விழுவது தடுக்கப்பட்டுள்ளது.









பெரிய உப்போடை கிராமத்தில் முன்னொரு காலங்களில் பொலிஸ் அலுவலகமாக இருந்த காணிக்குள் பொதுமக்கள் குப்பை போடுவதை வழக்கமாக கொண்டிருந்தனர். காணி உரிமையாளர் எல்லைவேலி அமைத்தபின், வைத்துள்ள வித்தியாசமான அறிவித்தல் பலகை.

வடபகுதியின் துரிதமான கட்டுமான வேலைகளுக்கான பணியினை சிறப்போடு செய்யும் JCB
இயந்திரங்களை விநியோகம் செய்யும் அங்கீகாரம் பெற்ற இலங்கைக்கான ஏக விற்பனை முகவர்கள்...




Head Office:
R.A.De Mel Mawatha, Colombo, Sri Lanka

Tel
011 258 0017
011 250 1035

JCB

12 இற்கு இலவசம்




முதல் 10 வர்த்தக
நிறுவனங்களுக்கு மட்டுமே!

தீபம் தொலைக்காட்சியுடன் இணைந்து கொள்ளும் அனைத்து வாடிக்கையாளர்க்கும் தீபம் பத்திரிகை மற்றும் இணையதளத்தில் வாராந்தம் விளம்பரங்கள் இலவசமாக பிரசுரம் செய்யப்படும்...

இன்றே தீபத்துடன் இணைந்திருங்கள்...

TEL : 0768255567
0214927561

Email : ceo@deepam.lk
Web : www.deepam.lk

தீபம்

இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 14.08.2016 அன்று வெளியிடப்பட்டது.